புனித தோமா

வாழ்க்கையும் வரலாற்றுப் பின்னணியும்



வே. ஜான் பிரான்சிஸ்

நாஞ்சில் பதிப்பகம்
நாகர்கோவில்

புனித தோமா

வாழ்க்கையும், வரலாற்றுப் பின்னணியும்

வே. ஜான் பிரான்சிஸ்

நாஞ்சில் பதிப்பகம்,
நாகர்கோவில்.

என்னுரை

1955 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் பதினெட்டாம் தேதி, புதுடெல்லியில் புனித தோமா தினம் கொண்டாடப்பட்டது. அப்போது, அவ்விழாவில் இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் டாக்டர் இராஜேந்திர பிரசாத் அவர்கள் பங்கேற்று சிறப்பித்தார்கள். அவ்விழாவில் தான் கீழ்க்காணுமாறு கூறலானார்.

"ஐரோப்பாவின் பல நாடுகள் கிறிஸ்துவத்தை அறியும் முன்பே புனித தோமை இந்தியாவிற்கு வருகை புரிந்தார் என்பதை நினைவில் கொள்ளல் வேண்டும். பல ஐரோப்பிய நாடுகளின் கிறிஸ்தவர்களுக்கும் முந்தைய நீண்ட வரலாறு புனித தோமா வழி வந்த இந்திய கிறிஸ்தவர்களுக்கு உண்டு. இது உண்மையிலேயே நாம் பெருமை கொள்ளத்தக்க செய்தியாகும்."

அப்போதைய குடியரசுத் தலைவரின் இக்கூற்று இந்தியாவின் அப்போஸ்தலர் என அழைக்கப்படும் புனித தோமாவின் அரும்பெரும் பணிகளுக்கு கிடைத்த மாபெரும் அங்கீகாரம் ஆகும்.

நமது பாரத நாட்டில், பல்வேறு காலகட்டங்களில் பல ஆன்மீகத் தலைவர்கள் பல பெரும் பணிகள் ஆற்றி, இந்திய ஆன்மீகத்திற்கு பெரும் பலம் சேர்த்திருக்கிறார்கள். சிலர் இந்தியாவிலேயே பிறந்து ஆன்மீகப் பணி புரிந்திருக்கிறார்கள். சிலர் வேறு நாடுகளிலிருந்து நமது நாட்டிற்கு வந்து இந்திய ஆன்மீகத்திற்கு பல பரிமாணங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவ்வாறு வேற்று நாட்டிலிருந்து வந்தவர்களுள் ஒருவர் தான் இறை இயேசுவின் பன்னிரு சீடர்களுள் ஒருவரான புனித தோமா... (St. Thomas)

"உலகெங்கும் நற்செய்தியை அறிவியுங்கள்" என்ற இறை இயேசுவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, இயேசுவின் போதனைகளை இந்தியாவிற்குக் கொண்டு வந்து சேர்த்தவர் புனித தோமா அப்போஸ்தலர். இந்தியாவில் வடபகுதியிலும், மலபாரிலும் (கேரளா) மைலாப்பூரிலும் அரும்பணியாற்றி, இறை இயேசுவிற்காக இரத்த சாட்சியாக மரிக்கும் பாக்கியம் பெற்றவர் தோமா அப்போஸ்தலர். அப்போஸ்தலர்களில், அதிக தொலைவு சென்று நற்செய்தி பணி புரிந்தவர் என்ற பெருமையும் புனித தோமாவிற்கு உண்டு.

புனித தோமாவின் அரும்பெரும் பணிகளை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற நோக்கில், "புனித தோமா - வாழ்க்கையும், வரலாற்றுப் பின்னணியும்" என்ற ஒரு சிறு நூலை படைத்துள்ளேன். இந்நூலில், புனித தோமா விவிலிய நூலில் தோன்றும் பகுதியையும், பிறகு பாலஸ்தீனாவிலிருந்து கிளம்பிய இவ்வப்போஸ்தலர் எவ்வாறு வட இந்தியாவிலும், சொக்கோட்டிராவிலும், மலபாரிலும், மைலாப்பூரிலும் பணிபுரிந்தார் என்பதை விவரித்திருக்கிறேன். அத்துடன், அந்தந்த பகுதிகளின் வரலாற்றுப் பின்னணியையும், அப்பகுதி மக்கள் பற்றியும் சிற்சில தகவல்களை கொடுத்திருக்கிறேன். சென்னையின் தோமாவின் நினைவிடங்கள் பற்றியும் சில விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. புனித தோமா இந்தியா வந்தார் என

சான்றுகள் தரும் பல்வேறு கிறிஸ்தவ அறிஞர்களின் கூற்றுகளையும் இந்நூலில் நீங்கள் காணலாம். முடிவில், பிற்சேர்க்கை பகுதியில், புனித தோமா பற்றிய பாரம்பரிய செய்திகளையும் நீங்கள் பார்க்கலாம். அத்துடன், தோமாவை இருவேறு கோணங்களில், இயேசுவின் சீடராக மற்றும் நற்செய்தி போதகராக என ஆராய்ந்து சில சிந்தனைகளையும் இந்நூலில் நீங்கள் காணலாம்.

இவ்வாறு, பல செய்திகளை உங்கள் முன் தொகுத்து தருவதற்கு காரணமாய் இருந்தவை சில நூல்கள் மற்றும் இணைய தளங்கள். அருட்தந்தை S.N. Wald, S.V.D. அவர்கள் எழுதிய "Saint Thomas the Apostle of India" என்ற நூலும் (இது 1952 ஆம் ஆண்டு வெளிவந்தது.) அருட்தந்தை A.C. Perumalil S.J., அவர்கள் எழுதிய The Apostles in India என்ற நூலும் (இது 1971 ஆம் ஆண்டு வெளிவந்தது) பெரும் உதவியாகவும், தூண்டு கோலாகவும் அமைந்தன. அத்துடன், Acts of Thomas என்ற மறைநூலும் (Apocryphal New Testament) பெரிய உதவியாய் இருந்தது. மேலும், சில சிற்றிதழ்கள், மடிப்பிதழ்கள் ஆகியவற்றுடன் சில இணைய தளங்களும் இந்நூலைப் படைப்பதற்கு உதவிகரமாக இருந்தன (www.apostles.com / thomas.html, www. 12apostles of the catholic church.com/thomas.html) இந்நூலாசிரியர்களுக்கெல்லாம் எனது மனமார்ந்த நன்றிகள்.

புனித தோமா பற்றிய இந்த எளிய நூலிற்கு பல்வேறு அலுவல்களுக்கு மத்தியில் நேரம் ஒதுக்கிவிட்டு, அணிந்துரை வழங்கி சிறப்பித்த எங்கள் கல்லூரியின் பாசத்திற்குரிய முதல்வர் தந்தை அருட்திரு. ஞா. புஷ்பராஜ் சே.ச. அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

நாற்பத்தொரு ஆண்டுகாலம் தமிழ்க் கிறிஸ்தவத்திற்கு ஆன்மீகத் தொண்டாற்றிவரும் நாஞ்சில் பதிப்பக உரிமையாளர் திரு. N.D. ஜோசப் சார் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். இவர் பணி மேன்மேலும் சிறக்க வேண்டும் எனவும் வாழ்த்துகிறேன்.

மேலும், என் பெற்றோர், மனைவி, நண்பர்கள், உறவினர்கள் போன்றோர்க்கும் நன்றி தெரிவிப்பதில் பெருமிதம் அடைகிறேன்.

- **வே. ஜான் பிரான்சிஸ்** M.Sc., (Agri)
விரிவுரையாளர்
அருள் ஆனந்தர் கல்லூரி,
கருமாத்தூர், மதுரை.

பதிப்புரை

ஆண்டவரின் தனித்தன்மையை நமக்கென கொடுத்துள்ளதை உணர்ந்த மக்களாக வாழ்ந்து செயல்படுவோம். வேத ஆகமங்களை உருவாக்க படித்தவரையும், பாமரரையும் தூய ஆவி தூண்டி எழுப்பித்தான் இருமுனை, பலமுனை கூறு கொண்டது பைபிள். அதன் ஆழம் - அகலம் - உயரம் அறிய பல அறிஞர்கள் புதுசு புதுசாக தோன்றி பெரிய பல கருத்துக்களை நமது மத்தியில் தருகின்றனர்.

புனித தோமையாரின் சந்தேகத்தின் சாயல்; இயேசுவின் நிரூபண சம்பவங்கள் இந்நூலில் ஆச்சரிய மூட்டுவனவாக உள்ளது.

இந்தியாவுக்கு வந்தார் தோமையார். துறைமுகத்தில் போக்குவரத்தை தடைசெய்த பெரும் தடி ஒன்று, பலரும் முயன்றும் கரைக்கு கொண்டுவர முடியவில்லை. இதை தூய தோமையார் தனது இடைக் கச்சையால் கட்டி இலகுவாக கரைசேர்த்தார். இதுபோன்று பல புதுமைகளை தூய ஆவி இவர்மூலம் செய்தார்.

கிறிஸ்துவுடனிருந்த புனிதர், நமது இந்திய நாட்டிற்கு வந்துள்ளது, இயேசு நம்முடனிருப்பதை உணர்வூட்டுவதாக ஆசிரியர் எழுதியுள்ளதை பாராட்டுவோம். இதனை வாங்கி படித்து கிறிஸ்துவுக்கு சாட்சி பகரும் அன்புள்ளங்களுக்கு நன்றி. நாஞ்சில் நிறுவனத்திற்கு நீங்கள் கொடுக்கும் ஆதரவு மேலும் பல நல்ல வெளியீடுகளை உலகுக்கு கொடுக்க தூண்டுவன வாகும்.

67/1 கோர்ட் ரோடு,
நாகர்கோவில் - 629 001.

அன்புடன்,
நாஞ்சில் பதிப்பகம்

பொருளடக்கம்

1. இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் ------------------- 7

2. இயேசுவின் அப்போஸ்தலராக தோமா ----------------------- 12

3. வட இந்தியா மற்றும் சொகோட்டிராலில் தோமா ---------24

4. மலபாரில் தோமா ---45

5. கொரமண்டலில் தோமா ---65

6. சான்றுகள் ---76

7. சென்னையில் தோமாவின் நினைவிடங்கள் -----------------86

8. பிற்சேர்க்கை ---96

9. சிந்தனைக்கு -- 103

10. தோமாவின் வாழ்வில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள் --------------------- 110

துணைநின்ற நூல்கள், இணைய தளங்கள் ---------------- 111

இனி வரவிருக்கும் தலைமுறைக்கென
இது எழுதிவைக்கப்படட்டும்; படைக்கப்படவிருக்கும் மக்கள்
ஆண்டவரைப் புகழட்டும். (திருப்பா. 102 : 18)

1

இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள்

- *ஆரம்பகால வரலாறு*
- *விடுதலைப் பயணம்*
- *இஸ்ராயேல் அரசுகள்*
- *படையெடுப்பும், அரசமைப்பும்*
- *பாலஸ்தீனா நாடு*
- *ரோமையரின் ஆதிக்கமும், மெசியா பற்றிய நம்பிக்கையும்*

ஆரம்பகால வரலாறு

இறை இயேசுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிரு அப்போஸ் தலர்களுள் ஒருவரான தோமா, 'இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள்' என அழைக்கப்படும் யூதர்கள் குலத்தைச் சார்ந்தவர். யூதர்கள் தங்களது பிதாவாகக் கருதுவது 'ஆபிரகாம்' என்பவரை. கி.மு. 1900-ஆவது ஆண்டு, இறைவன் ஆபிராம் என்பவரை அழைத்து, 'ஊர்' எனும் பகுதியிலிருந்து கானான் அல்லது பாலஸ்தீனாவிற்கு அனுப்பினார். அது மட்டுமன்றி, மெசப்பட்டோமியா ஊர் எனும் பகுதியிலிருந்து, போன அவருக்கு புதுப் பெயரையும் கொடுத்தார். 'ஆபிரகாம்' என்பதுதான் அப்புது பெயர். ஆபிரகாமும் இறைவனின் கட்டளைப்படியே கானான் தேசத்தில் குடியேறி, ஒரே கடவுளை வணங்கி, அவருக்கு பிரமாணிக்கமாகவும் இருந்து வந்தார். ஒருமுறை இறைவனே ஆபிரகாம் முன் தோன்றி, "நீ இருக்கும் இடத்திலிருந்து உன் கண்களை உயர்த்தி வடக்கே, தெற்கே, கிழக்கே, மேற்கே பார். ஏனெனில் நீ காணும் இந்த நாடு முழுவதையும் உனக்கும் உன் வழி மரபினருக்கும் என்றென்றும் கொடுக்கப் போகிறேன். உன் வழி மரபினரைப் பூவுலகின் மண்ணைப் போலப் பெருகச் செய்வேன். ஆகவே பூவுலகின் மணலை ஒருவன் எண்ண முடியுமானால், உன் வழி மரபினரையும் எண்ணலாம் . . . . . "ஆதலால் நான் உன்மீது உண்மையாகவே ஆசிபொழிந்து விண்மீன்களைப் போலவும் கடற்கரை மணலைப் போலவும் உன் வழி மரபைப் பலுகிப் பெருகச் செய்வேன். உன் வழி மரபினர் தம் பகைவர்களின் வாயிலை உரிமையாக்கிக் கொள்வர். மேலும், நீ என் குரலுக்கு செவி கொடுத்ததனால் உலகின் அனைத்து இனத்தவருக்கும் உன் வழி மரபின் மூலம் தங்களுக்கு ஆசி கூறிக்கொள்வர்" என்றார். இறைவன் ஒரு உடன்படிக்கையும் செய்து கொண்டார். அதன்படி இறைவன் அம்மக்களிலிருந்து ஒருவரை 'மெசியா'வாக அனுப்புவார். அவர் அவர்களின் பாவங்களிலிருந்து விடுவிப்பார்.

ஆபிரகாமுக்கு ஈசாக் பிறந்தார், ஈசாக்குக்கு யாக்கோபு பிறந்தார். இவர்கள் மூவரும் தான் யூதர்களின் பிதாப்பிதாக்கள் என (Patriarchs) அழைக்கப்பட்டார்கள். யாக்கோபுக்கு 12 புதல்வர்கள் இருந்தனர். ரூபன், சிமையோன், லேவி, யூதா, செபுலான், செக்கார், தான், காத், ஆசேர், நப்தலி, யோசேப்பு மற்றும் பெஞ்சமீன் தான் அவர்கள். இவர்களை வைத்து யூதர்கள் 'இஸ்ராயேலர்கள்' (இஸ்ராயேல் என்பது யாக்கோபின் மற்றொரு பெயர்) என்றும், பன்னிரு கோத்திரங்கள் அதாவது இஸ்ராயேலின் பன்னிரு கோத்திரங்கள் என்றும் அழைக்கப்பட்டார்கள். இவர்களில், யோசேப்பு எகிப்தில் அடிமையாக அவர்கள் சகோதரர்களாலேயே விற்கப்பட்டார். அங்கு தமது ஞானத்தை பயன்படுத்திக் கொண்டு, பல்வேறு இடர்களைத் தாங்கிக் கொண்டு யோசேப்பு பாரவோன் அரண்மனையின் மிகப்பெரிய பொறுப்பை

அடைந்தார். எகிப்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதியில் நடைபெற்ற பெரும் பஞ்சத்தில் இருந்தும் காப்பாற்றினார். பிறகு, இதர சகோதரர்களும் எகிப்தில் குடியேறினார்கள். பல தலைமுறைகளாக எகிப்தில் தான் வாழ்ந்தனர் யூதர்கள்.

விடுதலைப்பயணம்

சிறிதுகாலம் கழித்து யோசேப்பை அறியாத ஒரு பாரோ மன்னன் யூதர்களை அடிமையாக்கினான். கி.மு. 1200-ஆவது ஆண்டுவாக்கில் அவர்களை மீட்க, இறைவன் மோசஸ் / மோயீசன் என்பவரை அனுப்பி வைத்தார். மோயிசனும் அவர்களை எகிப்திலிருந்து அழைத்துக் கொண்டு போனார். போகும் வழியில் தான் சீனாய் மலைமேல் சென்று இவர்களுக்கு 'பத்துக் கட்டளைகள்' கொடுத்தார். ஆனால், கானான் போவதற்குள் மோயீசன் இறந்துவிட, அவரது தளபதி 'ஜோசுவா' யூதர்களை அவர்களது தாய்நாட்டிற்கு கொண்டு போய்ச் சேர்த்தார்.

இரு நூற்றாண்டு காலம், யூதர்கள் தங்களைச் சுற்றியுள்ள எதிரிகளான பிலிஸ்தியர்களிடம் போரிட்டுக் கொண்டுதான் இருந்தார்கள். அவர்களை 'நீதிபதிகள்' என்போர் ஆண்டுவந்தனர். கிதேயோன், சாம்சன், சாமுவேல் போன்றோர் அவர்களுள் முக்கியமானவர்கள்.

இஸ்ராயேல் அரசுகள்

கி.மு. 1020-ஆவது ஆண்டு, யூதர்கள் 'சவுல்' எனும் பெஞ்சமீன் குலத்தவரை மன்னராகத் தேர்ந்து கொண்டார்கள். அவருக்குப் பிறகு, தாவீதும், சாலமோனும் இஸ்ராயேல் மன்னர்களாக பொறுப்பேற்றுக் கொண்டார்கள். மூன்று அரசர்களுமே தலா 40 ஆண்டுகள் இஸ்ராயேலை ஆண்டது குறிப்பிடத்தக்கது. தாவீது அரசர் ஜெபுசியர்கள் என்பவர்கள் இடமிருந்து 'ஜெருசலேம்' எனும் ஊரைக் கைப்பற்றி, தனது அரசின் தலைநகராக மாற்றிக் கொண்டார். சாலமோன் அரசரோ, ஞானத்தில் புகழ்பெற்றவராய் விளங்கியதோடு இறைவனுக்காக மிகப்பெரும் கோவில் ஒன்றை ஜெருசலேமில் கட்டினார். இக்கோவில் யூதர்களின் விசுவாசத்திற்கும் ஒற்றுமைக்குமே மிகப்பெரிய சான்றாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

இச்சமயத்தில்தான் மோயீசனின் வாய்மொழி போதனைகள் புத்தக வடிவமாக மாறலானது. இவை **'தோரா' என அழைக்கப்பட்டன. பழைய ஏற்பாட்டு முதல் ஐந்து நூல்கள்தான் இவ்வாறு அழைக்கப்பட்டன. யூதர் நம்பிக்கையின் பொக்கிஷமும் 'தோரா' தான்.**

சாலமோனின் மரணத்திற்குப் பின்னர், கி.மு. 922-ஆவது ஆண்டு, இஸ்ராயேல் அரசு இரு பிரிவுகளாக மாறிப்போனது. வடக்கிலுள்ள பகுதி **இஸ்ராயேல் அரசு என்றும்,** தென்பகுதி **யூதா அரசு என்றும்** அழைக்கப்படலாயிற்று. யூதன் என்ற வார்த்தையே 'யூதா' எனும்

சொல்லிலிருந்து வந்ததுதான் என்பது குறிப்பிடத்தக்கது. இரு பிரிவுகள் இருப்பினும் இறை நம்பிக்கையிலும், விசுவாசத்திலும் அவர்கள் ஒருவராகத் தான் இருந்தார்கள்.

இச்சமயத்தில் பல்வேறு இறைவாக்கினர்களும், இறைசிந்தனையாளர் களும் தோன்றி இஸ்ராயேல் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டிக் கொண்டு தான் இருந்தார்கள். அவர்களுள் எலியா, எலிசா, ஆமோஸ், இசையா, ஜெரமாயா போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இசையாஸ் ஆகமத்தில் தான் மெசியா பற்றிய இறைவாக்குகள் அதிகம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

படையெடுப்பும், அரசமைப்பும்

கி.மு. 700-ஆவது ஆண்டு, அசிரியர்கள் இஸ்ராயேலின் வடபகுதி உட்பட மத்திய கிழக்கு நாடுகளை ஆள ஆரம்பித்தார்கள். இதனால் இஸ்ராயேல் மக்கள் பல்வேறுவிதமாய் சிதறுண்டும் போனார்கள்.

கி.மு. 586-ஆம் ஆண்டு, பாபிலோனியர்கள் யூதாவின் தென்பகுதியை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்கள். ஜெருசலேம் கோவிலையும் இடித்து விட்டார்கள். யூதர்களை அடிமைகளாகவே பாபிலோனுக்குக் கொண்டு சென்றார்கள். ஆனாலும், தமது இறை நம்பிக்கையை அவர்கள் விடவில்லை. இறைவாக்கினர் எசேக்கியேல் தூண்டுதலால் தங்களது மத நம்பிக்கையையும், பாரம்பரியத்தையும் இன்னும் வளர்த்துக் கொண்டார்கள்.

கி.மு. 539-ஆவது ஆண்டு, பெர்சியாவின் சைரஸ் மன்னர் பாபிலோனியாவை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான். அதோடு அடிமைகளாக இருந்த யூதர்களை அவர்களின் நாட்டிற்கும் அனுப்பினான். தாய்நாடு சென்ற யூதர்கள் மீண்டும் ஜெருசலேமில் பெரிய கோவிலைக் கட்டினார்கள்.

பிறகு கி.மு. 322-ஆவது ஆண்டு, கிரேக்க அரசரான மகா அலெக்சாந்தர் பாலஸ்தீனாவை தமது அரசின் ஒரு பகுதியாக ஆக்கிக் கொண்டார். பிறகு, எகிப்திலுள்ள டாலமிகளும், சிரியாவிலுள்ள செலுசிடுகளும் பாலஸ்தீனாவை தமது அரசின் ஒரு பகுதியாக ஆக்கிக் கொண்டார்கள். இம்மூன்று இனத்தவரும் யூதர்களின் மதநம்பிக்கையில் குறுக்கிடவில்லை.

ஆனால் கி.மு. 168-ஆவது ஆண்டு நான்காம் அந்தியோக்கஸ் எனும் சிரியா நாட்டு அரசன் பாலஸ்தீனாவை ஆக்கிரமித்ததோடு மட்டுமல்லாமல், அவர்களின் மத நம்பிக்கையையும், இறை நம்பிக்கைகளையும், நசுக்கத் திட்டமிட்டான். யூதர்களும், 'யூதா மக்கபேயுஸ்' என்பவனது தலைமையின் கீழ் பெரிய புரட்சி செய்து சிரியர்களையே விரட்டி விட்டார்கள். இது தொடர்பாக ஹனுக்கா எனும் பண்டிகையையும் கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

இதன்பிறகு யூதர்கள் 'ஒரு தனி நாடு' உருவாக்கி ஹாஸ்மோனியர்கள் என்று அழைக்கப்படும் அரசர்களின் ஆளுகையில் வாழ்ந்து வரலானார்கள். இச்சமயத்தில் தான், அவர்களுக்குள் சதுசேயர்கள், பரிசேயர்கள், எஸ்சேனியர்கள் என்ற பிரிவுகள் வேர்விட ஆரம்பித்தன. பரிசேயர்கள் 'தோரா' யூத மறைநூல்களை தீவிரமாக பின்பற்றினார்கள். சதுசேயர்கள் எழுதப்பட்ட விதிகளை மட்டும்தான் நம்புவார்கள். உயிர்த்தெழுதலை நம்ப மாட்டார்கள். எஸ்சேனியர்கள் சமூகத்திலிருந்து தங்களைப் பிரித்துக் கொண்டு, சுயகட்டுப்பாட்டோடும், தவ வாழ்வு மேற்கொண்டும் வாழ வேண்டும் என எண்ணினார்கள்.

கி.மு. 63-ஆவது ஆண்டு, ரோமையர்கள் யூதா நாட்டை (அதாவது யூதேயா) ஆண்டார்கள். பாலஸ்தீனாவை தங்களது அரசின் ஒரு மாநிலமாகவும் மாற்றிக் கொண்டார்கள்.

பாலஸ்தீனா நாடு

ஆபிரகாமின் சந்ததியினர் தாங்கள் குடியேறிய நாட்டிற்கு '**பாலஸ்தீனா**' எனும் பெயரைக் கொடுத்தார்கள். யூதர்கள் இதற்கு '**புனித பூமி**' என்றும் பெயரிட்டார்கள். (இன்றும் இது அவ்வாறு அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது). பாலஸ்தீனாவிலும் நான்கு பகுதிகள் உண்டு. பெரயா - இப்பகுதி யோர்தான் நதியின் கிழக்கே உள்ளது.

யூதேயா - பாலஸ்தீனாவின் தெற்கு பகுதி - **ஜெருசலேம்**

சமாரியா - யூதேயாவின் வடக்கே அமைந்துள்ளது.

கலிலேயா - பாலஸ்தீனாவின் வடபகுதி - இங்கு அதிக மக்கள்தொகை இருந்தது.

ரோமையரின் ஆதிக்கமும், மெசியா பற்றிய நம்பிக்கையும்

பாலஸ்தீனா பகுதி ரோமையரின் ஆதிக்கத்தின் கீழ் வந்தபிறகு, யூதர்கள் ரோமையரின் கொடுமைகளைப் பார்த்து மெசியாவின் வருகை மிக அருகில்தான் இருக்கும் என நினைத்தார்கள்.

யூதர்களின் ஒரு பிரிவினரான கலிலேயா பகுதி மீனவர்களும் இதே நம்பிக்கையோடுதான் இருந்தார்கள்.

அச்சமயத்தில் ரோமையர்கள் ஏரோது அரசனை விட்டு நாட்டை ஆண்டுகொண்டு இருந்தாலும், மக்கள் மெசியா பற்றிய நம்பிக்கையை விடவே இல்லை.

"அரசுரிமை உடையவர் வரும்வரையில் மக்களினங்கள் அவருக்கு பணிந்திடும் வரையில், யூதாவை விட்டு செங்கோல் நீங்காது. அவன் மரபை விட்டு கொற்றம் மறையாது," என அவர்கள் மூதாதையர் யாக்கோபு தனது புதல்வன் யூதாவுக்குச் சொன்னதை நினைவுகூர்ந்தார்கள்.

2

இயேசுவின் அப்போஸ்தலராக தோமா

- *மெசியாவைப் பற்றிய நம்பிக்கை*
- *யோவான் ஸ்நானகன்*
- *இயேசு போதனையை ஆரம்பித்தல்*
- *தோமாவின் அழைப்பு*
- *அப்போஸ்தலராக தோமா*
- *தோமாவின் நம்பிக்கை*
- *தோமாவின் கேள்வி*
- *தோமாவின் சந்தேகம்*
- *இயேசுவின் இறுதி கட்டளை*

மெசியாவைப் பற்றிய நம்பிக்கை

இதர யூதர் பெருமக்கள் போல், கலிலேயா பகுதியிலுள்ள மீனவர்களும் மெசியாவின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இறைவனே, அத்தகைய நம்பிக்கையை யூதர்களிடத்தில் ஊட்டி, அவ்வப்போது அனுப்பும் இறைவாக்கினர்கள் மூலமாக அதைப் பலப்படுத்தியும் வந்தார்.

ஆனால், நாளாக நாளாக யூதர்கள் மெசியாவைப் பற்றிய ஆன்மீக நம்பிக்கையினை அநேகமாக இழந்தார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். 250 ஆண்டுகளாக முதலில் சிரியர்கள் பிறகு ரோமையர்கள் ஆகியோரின் அடிமைகளாக அவர்கள் இருந்ததால் யூதர்களின் மெசியா வருகையைப் பற்றிய எண்ணம் வேறு மாதிரிதான் இருந்தது. அவர்கள் அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கப்பட்டு, புதிய அரசு அமைக்கப்பட்டு அதில் அவர்கள் கஷ்டமே இல்லாத வாழ்க்கை வாழலாம் என எண்ணிக் கொண்டிருந்தார்கள். பூமியானது அதிக அதிகமான தானியங்களை விளைவிக்கும், வறட்சி இருக்காது, புயல் இருக்காது, வேறு இயற்கை இடர் எதுவும் இருக்காது என நம்பிக்கொண்டு இருந்தார்கள்.

தோமா சிறுவனாக இருக்கையில், மெசியாவைப் பற்றிய எதிர்பார்ப்பு அதிகமாகவே, அதுவும் கலிலேயா பகுதியில் இன்னும் அதிகமாகவே இருந்தது. ரோமையர் ஆதிக்கம் அதிகரிக்க அதிகரிக்க, இவர்களின் மெசியாவைப் பற்றிய நம்பிக்கையும் அதிகரித்தது.

யோவான் ஸ்நானகன்

கி.பி. 26-ஆம் ஆண்டு திபேரியுஸ் சீசர் பதவியேற்ற பதினைந்தாவது ஆண்டில், போந்தியுஸ் பிலாத்து யூதேயா ஆளுனராகவும், ஏரோது அந்திப்பாஸ் கலிலேயா அரசனாகவும் இருக்கையில் (லூக் 3 : 1-6), யோர்தான் ஆற்றங்கரையில் ஒரு நபர் தோன்றினார். அவர் ஒட்டக மயிராடையும், இடையில் வார்க்கச்சையும் அணிந்து, மக்கட் கூட்டத்தினரிடையே போதிக்க ஆரம்பித்தார். அதுமட்டுமல்லாமல், ஞானஸ்நானமும் அளித்து வந்தார். அதனால், அவர் ஸ்நாபக யோவான் / யோவான் ஸ்நானகன் என அழைக்கப்பட்டார். "தவம் செய்யுங்கள்", என போதித்த அவர் "இறையரசு அண்மையில் இருக்கிறது", எனவும் போதிக்கலானார். அவருடைய போதனையைக்கேட்ட யூதர்கள், "ஒருவேளை வரவிருக்கும் மெசியா இவர்தானோ", என சந்தேகிக்க, யோவானோ "மெசியா நானல்லேன்", என ஒப்புக் கொண்டார். அதுமட்டுமல்லாமல், "நான் நீரால் திருமுழுக்கு அளிக்கிறேன், எனக்குப் பின் ஒருவர் வருவார். அவர் பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் அளிப்பார்," என சொல்லலானார்.

யோவான் ஸ்நானகனின் போதனையால் கவரப்பட்டு பலர் அவருக்கு சீடர்களாக மாறினார்கள். அவர்களின் கண்ணை திறந்து,

ஆன்மீகத்திலும் பலப்படுத்தினார். அதுமட்டுமல்ல, இறை இயேசுவை மெசியா என நம்பியவர்கள் யோவானின் சீடர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

இயேசு போதனையை ஆரம்பித்தல்

இச்சமயத்தில் இயேசு பொது வாழ்க்கையில் நுழைந்தார். அவர் யோர்தான் ஆற்றங்கரைக்கு வந்து அவரிடம் திருமுழுக்கும் பெற்றார்.

சில நாட்களுக்குப் பின், இயேசு அவ்வழியாக போய்க் கொண்டிருக்கையில், யோவான் ஸ்நானகன் தனது இரு சீடர்களான அந்திரேயா மற்றும் யோவானிடம், "அதோ இறைவனின் செம்மறி. இவரே உலகின் பாவங்களைப் போக்குபவர்" எனக் கூறினார். இதைக் கேட்டு அவ்விருவரும் இயேசுவின் பின்னால் சென்று அவருக்கு சீடர்களாக மாறினார்கள்.

அதுமட்டுமல்ல, அந்திரேயா தனது சகோதரர் சீமோனையும் கூட்டி வந்து இயேசுவிடம் சேர்த்தார். பிலிப்பு, நத்தானியேல் போன்றோர் பிறகு இயேசுவின் சீடர்களாக மாறிப் போனார்கள் (யோவான் 1 : 29-51).

இயேசுவின் முதற்சீடர்கள் அனைவரும் கலிலேயா பகுதியிலுள்ள மீனவர்களாகவே இருந்தார்கள். பெத்சாயிதா எனும் ஊரிலிருந்து வந்தவர்கள் அவர்கள். இயேசுவை அவ்வப்போது பின்பற்றி வந்த அவர்கள் இயேசுவால் அழைக்கப்பட்ட பின் நிரந்தர சீடர்களாக மாறிப் போனார்கள்.

தோமாவின் அழைப்பு

இச்சமயத்தில்தான் மற்ற சீடரைப்போல், 'தோமா' என்பவரையும் அழைத்திருக்க வேண்டும். "என் பின்னே வாருங்கள், உங்களை மனிதர்களைப் பிடிப்பவன் ஆக்குவேன்" (மத் 4 : 19) என இதர சீடர்களை அழைத்தது போலவே, தோமாவையும் அழைத்திருப்பார்.

தோமா எனும் அராமியச் சொல்லுக்கு "இரட்டையன்" என்று பொருள். "புனித தோமாவின் பணி" என்ற நூல் இவரை யூதா தோமா என அழைக்கிறது. அதனால் இவருக்கு யூதா என்ற வேறு பெயரும் இருந்திருக்கலாம். இதர சீடர்களுள் இருவர் யூதா என பெயரைக் கொண்டிருந்ததால் அவர்களிடமிருந்து வேறுபடுத்துவதற்காக இவர் "தோமா" என்றே அழைக்கப்பட்டு இருக்கலாம். கிரேக்க மொழியில் இச்சொல் 'திதிமுஸ்' என அழைக்கப்பட்டது.

இயேசுவின் அழைப்பைக் கேட்டு தோமாவின் மனதில் என்ன எண்ணங்கள் ஒடியிருக்கும்? முன்பின் தெரியாத நாசரேத்தூர் தச்சன் ஒருவர் தன்னை அவர் கூடவே இருக்குமாறு அழைக்கும்போது, தோமா ஒருவேளை தயங்கியிருக்கலாம், யோசித்திருக்கலாம். ஏன், அவரது உறவினர்கள் மற்றும் நண்பர்களால் எச்சரிக்கையும் செய்யப்பட்டு இருக்கலாம். ஆனால், எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்த தோமா முடிவில் இறை இயேசுவின் அழைப்புக்கு செவிமடுத்தார். பேதுருவைப்

போல், யோவானைப் போல், அந்திரேயா மற்றும் யாக்கோபு போல் வலைகளையும் மீன்களையும் விட்டுவிட்டு பின் சென்றார்.

ஆக, தோமாவும் பேதுரு, அந்திரேயா போல் மீனவராக இருந்தவர்தான் எனக் கூறப்படுகிறது. 'புனித தோமாவின் பணி' நூல் மூலமாக இவர் தச்சுத் தொழிலாளியாகவும் கப்பல் செய்பவராகவும் இருந்திருக்கலாம் என நினைக்கத் தோன்றுகிது.

தோமா இயேசுவின் சீடராக மாறிப் போனாலும் எதையும் ஆராய்ந்து, ஆய்ந்து, எச்சரிக்கையுணர்வுடனே முடிவுகள் எடுக்கும் பண்பை கொண்டிருந்தார் எனத் தெரிகிறது. சந்தேகக் குணம், எதையும் ஐயத்துடன் பார்க்கும் மனத்தைக் கொண்டிருந்த தோமாவை இயேசு அழைத்து அவருக்கு பயிற்சியும் அளித்தார் என எண்ணத் தோன்றுகிறது.

மிகப்பெரிய படிப்பாளியாக இல்லாவிடினும், தோமா எழுதப் படிக்கத் தெரிந்தவர்தான். கலிலேயா, யூதேயா தவிர இதர நாடுகளைப் பற்றிக் கேள்விப்படாதவர் அவர். அப்படியிருந்தும் இறையரசைப் பரப்புவதற்கு தோமாவையும் முக்கிய கருவியாக இயேசு தேர்ந்தெடுத்து விட்டார்.

அப்போஸ்தலராக தோமா

இயேசு கலிலேயா, யூதேயா போன்ற பகுதிகளுக்கு சென்று ஊர் ஊராகப் போதிக்கலானார். அவருடைய சீடர்கள் தோமா உட்பட எல்லோரும் அவர்கூடவே பயணம் செய்தார்கள். சில ஊர்களில் நல்ல வரவேற்பு கிடைத்தது. சில இடங்களில் வரவேற்பும் இல்லை, தூங்குவதற்கும் கூட வசதி இல்லை. "நரிகளுக்கு வளைகள் உண்டு, பறவைகளுக்கு இடங்கள் உண்டு. மனுமகனுக்கோ தலைசாய்க்கவும் இடம் இல்லை" (லூக் 9 : 58) என்று இயேசு கூறியதைப் போன்று இயேசு மட்டுமன்றி அவர் சீடரும் சில இடர்களைத் தாங்கியே இருக்க வேண்டிய சூழல் இருந்தது.

ஆனால், நாளாக நாளாக இயேசுவைப் பற்றிய மதிப்பீடு அவர்களுக்கு அதிகரித்துக் கொண்டே போனது. அவரைப் பெரிய அதிசயத்தோடு, ஆர்வத்தோடு தோமாவும் இதர சீடரும் கவனிக்க ஆரம்பித்தார்கள். அவர் செய்த புதுமைகளைப் போல் எந்த இறைவாக்கினர் கூட செய்து விடவில்லை. ஆக, மெசியா இயேசுவே என நினைத்த சீடர்கள், பின்னாளில் மிகப்பெரிய பதவியுடன் இயேசு அரியணை ஏற, தாங்கள் எல்லோரும் முக்கிய அமைச்சர்களாக இருக்கலாம் என்றெல்லாம் நினைத்துக் கொண்டார்கள்.

இயேசுவுக்கு நாளடைவில் இன்னும் பல சீடர்கள் சேர ஆரம்பித்தனர். ஒருநாள் இயேசு பலமணி நேர போதனைக்குப் பிறகு ஓர் மலைப் பகுதிக்கு தமது சீடர்களை அழைத்துக் கொண்டு சென்றார். இம்மலை அநேகமாக கப்பர்நாகூம் மற்றும் திபேரியாவுக்கு மத்தியில் இருந்திருக்கலாம்.

இயேசுவும் அவரது பல சீடர்களும் இம்மலையில் தனித்திருக்கும் சந்தர்ப்பம் வாய்த்தது. இருட்ட ஆரம்பித்தவுடன் சீடர்கள் பலர் ஓய்வெடுக்க, இயேசுவோ விழித்திருக்கலானார். சீடர்களை விட்டு விலகி, தனித்திருக்க வேண்டும் என எண்ணம் கொண்டவராய் தனிமைச் செபம் செய்ய நினைத்தார். தான்மிக முக்கிய முடிவை எடுக்க நினைத்தார். தன்னைப் பின்பற்றிய சீடர்களிலிருந்து பன்னிருவரை மட்டும் தேர்வு செய்து அவர்களுக்கு 'அப்போஸ்தலர்' என்ற சிறப்புப் பெயரையும் கொடுத்து, எதிர்காலத்தில் தான் அமைக்க இருக்கும் இறையரசின் தூண்களாகவும் இருக்க வேண்டும் என விரும்பினார். இரவு முழுவதும் இதற்காக செபித்தார் இயேசு.

காலை வந்தது. தனிமைச் செபத்தை முடித்தவராய் மீண்டும் சீடர்கள் பக்கம் வந்தார். சீடர்களை ஒருமுறை நோட்டம் விட்டவராய், பன்னிருபேரைத் தேர்வு செய்து ஒவ்வொருவரையும் அழைக்க ஆரம்பித்தார். முதலில் அவர் அழைத்தது பேதுருவை. பிறகு அந்திரேயா, யாக்கோபு, யோவான், பிலிப்பு, பார்த்தொலொமேயு, தோமா, மத்தேயு, அல்பேயுவின் மகன் யாக்கோபு, யூதா, சீமோன் மற்றும் யூதாஸ் இஸ்காரியோத்தும் அழைக்கப்பட்டார்கள். தோமாவும் இதர சீடர்போல் தனது பெயர் அழைக்கப்பட்டவுடன் பெரு மகிழ்வும் ஆனந்தமும் கொண்டவராய் விளங்கினார்.

ஆக, தோமா இப்போது இயேசுவின் பன்னிரு அப்போஸ்தலருள் ஒருவராகி விட்டார். இயேசுவும் பொதுமக்களிடம் நேரத்தை செலவிட்டதை விட, சீடர்களிடம்தான் அதிகம் நேரத்தை ஒதுக்கினார். ஒருமுறை இயேசுவே சீடர்களின் பேறுகளை அவர்களிடமே சொல்லலானார். "உங்கள் கண்கள் பேறுபெற்றவை. ஏனெனில், அவை காண்கின்றன. காதுகளும் பேறுபெற்றவை. ஏனெனில், அவை கேட்கின்றன. நான் உங்களுக்கு உறுதியாகச் சொல்கிறேன், இறைவாக்கினர் நீதிமான்கள் பலர் நீங்கள் காண்பதைக் காண விரும்பியும் காணவில்லை. நீங்கள் கேட்பதைக் கேட்க விரும்பியும் கேட்கவில்லை" (மத் 13 : 16,17).

தனது அப்போஸ்தலர்க்கு பயிற்சியளிக்கும் விதமாக இயேசுவே ஒருமுறை அவர்களை அழைத்து அவர்களை இருவர் இருவராக அனுப்பினார். அவர்களுக்கு அசுத்த ஆவிகளின் மேல் அதிகாரம் அளித்தார். மேலும், பயணத்துக்கு ஒருகோல் தவிர, பையோ, உணவோ, மடியில் காசோ கொண்டு போக வேண்டாம் என கட்டளையிட்டார். ஆனால், "மிதியடி போட்டுக் கொள்ளலாம். உள்ளாடை இரண்டு அணிய வேண்டாம்" என்றார். பின்பும் அவர்களுக்குக் கூறியது : "நீங்கள் எங்கேயாவது ஒரு வீட்டிற்கு சென்றால் அவ்விடத்திலிருந்து போகும்வரை அங்கேயே தங்கியிருங்கள். எந்த ஊராவது உங்களை ஏற்றுக்

கொள்ளாமலும், உங்களுக்கு செவிசாய்க்காமலும் இருந்தால் நீங்கள் அங்கேயிருந்து வெளியேறி அவர்களுக்கு எதிர்சாட்சியாக உங்கள் காலிலிருக்கும் தூசியைத் தட்டி விடுங்கள்". இதைக்கேட்டு அவர்கள் புறப்பட்டுச் சென்று மக்கள் மனந்திரும்ப வேண்டுமென அறிவித்தனர். பேய்கள் பல ஓட்டினர். பிணியாளர் பலரை எண்ணெய் பூசிக் குணப்படுத்தினர் (மாற் 6 : 7-13).

அப்போஸ்தலர்களும் தங்களது வேலையை முடித்துக் கொண்டு மீண்டும் இயேசுவிடம் வந்தனர். அளவிட முடியாத மகிழ்ச்சியடைந்த அவர்கள் இயேசுவிடம் புதுமைகள் செய்தது பற்றியும், தீய ஆவிகள் அவர்களுக்குக் கீழ்ப்படிந்தது பற்றியும் தெரிவித்தனர். ஆனால், இயேசுவோ, "ஆவிகள் உங்களுக்கு அடங்கி இருக்கின்றன என்று மகிழ வேண்டாம். ஆனால் உங்கள் பெயர் வானகத்தில் எழுதியுள்ளது என்றே மகிழுங்கள்," என்றார் (லூக் 10 : 20).

அப்போஸ்தலர் அலுவல் மிகவும் கடினமானது. இயேசுவும் அவர்களிடம் இவ்வாறு கூறினார். "இதோ ஓநாய்களிடையே ஆடுகளைப் போல் உங்களை நான் அனுப்புகிறேன். ஆகவே, பாம்புகளைப் போல விவேகம் உள்ளவர்களாகவும், புறாக்களைப்போல் கபடற்றவர்களாகவும் இருங்கள்."

"எச்சரிக்கையாயிருங்கள், மனிதர் உங்களை நீதிமன்றங்களுக்கு கையளிப்பார்கள். தங்கள் செபக்கூடங்களில் உங்களைச் சாட்டையால் அடிப்பார்கள். என் பொருட்டு உங்களை ஆளுநரிடமும் அரசர்களிடமும் இழுத்துச் செல்வார்கள். இவ்வாறு அவர்கள் முன்னும் புறவினத்தார் முன்னும் சாட்சியாய் இருப்பீர்கள். என் பெயரைக் குறித்து உங்களை எல்லோரும் வெறுப்பார்கள். இறுதிவரை நிலைத்து நிற்கிறவன் மீட்கப் பெறுவான்" (மத் 10 : 16,18-22).

மேலும் இயேசுவும் தமது அப்போஸ்தலர்களுக்குக் கூறுகையில், "பல்வேறு இடர்களையும் கலாபனைகளையும் மிக தைரியத்துடன் தாங்கிக் கொள்ள வேண்டும் என்கிறார். உங்களை இப்படிக் கையளிக்கும்போது என்ன சொல்வது, எப்படி சொல்வது என்று கவலைப்பட வேண்டாம். என்ன சொல்ல வேண்டுமென்பது அவ்வேளையில் உங்களுக்கு அருளப்படும். ஏனெனில், பேசுவது நீங்கள் அல்லர் உங்களில் இருந்து பேசுவது உங்கள் தந்தையின் ஆவியே" (மத்10:19-20")

அதுமட்டுமா? இயேசுவும் தமது சீடர்களிடமிருந்து மிகுதியான எதிர்பார்ப்புகளை வைத்துதான் இருந்தார். அதற்கு சான்று அப்போஸ்தலர்களிடம் அவர் கீழ்க்கண்டவாறு கூறியதுதான். "என்னை விடத் தன் தந்தையையோ தாயையோ அதிகம் நேசிக்கிறவன் எனக்கு ஏற்றவன் அல்லன். என்னைவிட தன் மகனையோ மகளையோ அதிகம் நேசிக்கிறவனும் எனக்கு ஏற்றவன் அல்லன். தன் சிலுவையை ஏற்றுக்

கொண்டு என்னைப் பின்செல்லாதவன் எனக்கு ஏற்றவன் அல்லன். தன் உயிரைக் கண்டடைந்தவன் அதை இழந்து விடுகிறான் - எனக்காகத் தன் உயிரை இழந்தவனோ அதைக் கண்டடைவான்" (மத் 10 : 37-39)

இவ்வளவு கடினமான அப்போஸ்தல அலுவலுக்கு இயேசு என்ன கைம்மாறு செய்யப் போகிறார்? முதன்மைச் சீடரான பேதுருவே ஒருமுறை இயேசுவிடம், "உங்களைப் பின்பற்றினோமே எங்களுக்கு என்ன கிடைக்கும்?" என வினவினார். அதற்கு இயேசுவும் பதில் மொழியாக இவ்வாறு கூறலானார். "உறுதியாக உங்களுக்கு சொல்கிறேன்; உலகம் புத்துயிர் பெறும் நாளில் மனுமகன் தமது மாட்சிமை அரியணையில் வீற்றிருக்கும்போது என்னைப் பின் சென்ற நீங்களும் இஸ்ராயேலின் பன்னிரு கோத்திரங்களுக்கும் நடுவராகப் பன்னிரு அரியணையில் வீற்றிருப்பீர்கள். மேலும் வீட்டையோ, சகோதர சகோதரியையோ, தாய் தந்தையையோ, மக்களையோ, நிலபுலங்களையோ என் பெயரின் பொருட்டு துறந்துவிடும் எவனும் பன்மடங்கு பெறுவான், முடிவில்லாத வாழ்வும் பெற்றுக் கொள்வான்" (மத் 19 : 27-29).

தோமாவின் நம்பிக்கை

ஏறக்குறைய மூன்று வருடங்கள் தமது குருவுடன் காலத்தைக் கழித்த தோமா வேறொரு மாற்றத்தையும் கவனிக்கத் தவறவில்லை. இயேசுவின் அயராத உழைப்பினால் பலதரப்பட்ட யூத மக்கள் அவரது போதனைகள்படி நடக்க ஆரம்பித்தனர். அதுமட்டுமல்லாமல், தோமாவும் இதர சீடர்களும் கொஞ்சங் கொஞ்சமாக இயேசுவின் நோக்கத்தையும் புரிந்துகொள்ள ஆரம்பித்தனர். இயேசுவின் அரசு இவ்வுலகைச் சாராதது எனவும், விண்ணுலகையே சார்ந்தது எனவும், மனிதர்களையே மீட்பதற்கே இவ்வுலகில் தோன்றியதாகவும் உணர ஆரம்பித்தது சீடர் குழு.

அதுமட்டுமா? அப்போஸ்தலர் குழு சில மாதங்களாக பரிசேயர், சதுசேயர் குழு, தலைமைக் குருக்கள் போன்றோர் இயேசுவின் மேல் அதிகளவு வெறுப்பைக் கொண்டு, அவரைக் கொல்வதற்கும் வழிதேடி வந்ததையும் கவனித்துக் கொண்டுதான் இருந்தது. இயேசு எப்படி இவர்களை எதிர்கொள்ளப் போகிறார் என்றும் யோசித்துக் கொண்டிருக்கையில் தான், இயேசுவே பலமுறை தமது பாடுகள், மரணம் போன்றவற்றையும் பற்றி சீடர் குழுவிடம் பேசலானார். "இதோ! யெருசலேமுக்குப் போகிறோம், மனுமகன் தலைமைக் குருக்களிடமும் மறைநூல் அறிஞரிடமும் கையளிக்கப்படுவார். அவர்கள் அவருக்குக் கொலைத் தீர்ப்பிட்டு, அவரை எள்ளி நகையாடவும் சாட்டையால் அடிக்கவும், சிலுவையில் அறையவும் புறவினத்தாரிடம் கையளிப்பர்." (மத் 20 : 18-19). இதைக்கேட்டு அதிர்ச்சி அடைந்தனர் சீடர்கள்.

கலிலேயாவில் இயேசு தமது சீடருடன் தங்கியிருக்கையில், ஒரு தூதுவன் யெருசலேம் பக்கத்திலுள்ள பெத்தானியா எனும் ஊரிலிருந்து

வந்தான். அவன் கொண்டுவந்தது துயரச் செய்தியை. இயேசுவால் நேசிக்கப்பட்ட லாசர் இறக்கும் தருவாயில் இருப்பதாகக் கூறினான். சீடர்களுக்கும் தெரியும். இயேசு லாசர் மற்றும் சகோதரியர் மார்த்தா - மரியாள் மேல் பாசம் வைத்தது பற்றி, லாசர் நோயுற்றிருப்பதை அறிந்த இயேசுவும், "யூதேயாவுக்குப் போவோம்" (யோ 11 : 7) எனக்கூற, அப்போஸ்தலர் குழு பயந்தே போனது. "ராபி இப்போதுதான் யூதர் உம்மைக் கல்லால் எறியப் பார்த்தார்களே. நீர் மீண்டும் அங்கு போகிறீரா?" எனக் கேட்டுவிட்டனர். ஆனால் திதிமு எனும் தோமா, "நாமும் செல்வோம். அவரோடு இறப்போம்," என்று கூறியதாக திருநூல் கூறுகிறது (யோ11:16). ஆக, தோமாவின் வார்த்தைகள் தான் இதர சீடர்களுக்கு தைரியத்தைக் கொடுத்து, யூதேயாவுக்கே போவதற்கு தூண்டுகோலாக அமைந்தது என்றால் அது மிகையாகாது. தோமாவின் குணங்களில் ஒன்றான தைரியம், பிரச்சனைகளை எதிர்கொள்ளும் துணிவு முதலியன இவ்வார்த்தைகள் மூலம் நமக்குத் தெரிகிறது.

அப்போஸ்தலர் பயந்தபடியே, பரிசேயர்களும் யெருசலேம் ஆலய குருக்களும் இயேசுவைத் தொலைக்க வழிதேடிக் கொண்டுதான் இருந்தார்கள். அவர்களுக்கு அனுகூலமாகவே பன்னிரு சீடர்களில் ஒருவனான யூதாஸ் இஸ்காரியோத்து இயேசுவைக் கைது செய்து, அவர்களிடம் ஒப்படைக்க சம்மதம் தெரிவித்திருந்தான்.

தோமாவின் கேள்வி

இறை இயேசுவுக்கும் தமது சீடருள் ஒருவனே தம்மைக் காட்டிக் கொடுப்பான் என்று நன்றாகவே தெரிந்திருந்தது. அவர் கைது செய்யப்படுவதற்கு சிலமணி நேரத்திற்கு முன், தமது சீடர்களுடன் 'கோனேக்குலம்' என்ற மாடியறையில் பாஸ்கா உணவை உண்ண விரும்பியிருந்தார். எல்லோரும் பாஸ்கா உணவை சாப்பிட்டுக் கொண்டிருக்கையில், இயேசுவே அவர்களிடம், "உண்மையாக உங்களுக்குச் சொல்கிறேன். உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான்," என்று கூறினார். எல்லா சீடர்களும் அதிர்ச்சியாகி, "ஆண்டவரே அது நானோ?" (மத் 26 : 22) எனக் கேட்க ஆரம்பித்தனர். தோமாவும் இதேக் கேள்வியை இயேசுவிடம் கேட்கத்தான் செய்தார். அவர் மனதுக்குள் தான் துரோகியல்ல என்றும் எண்ணியிருப்பார்.

இயேசு அவ்வாறு கூறியது, சீடர்களை அதிர்ச்சிக்குள்ளாகி விட்டது என்று தெரிய, அவர்களை ஆறுதல்படுத்துவதற்காக இவ்வாறு கூறலானார். "உள்ளம் கலங்க வேண்டாம், கடவுள்மீது விசுவாசம் வையுங்கள், என்மீதும் விசுவாசம் வையுங்கள், என் தந்தையின் இல்லத்திலே உறைவிடங்கள் பல உள்ளன. இல்லாதிருந்தால் உங்களுக்கு சொல்லியிருப்பேன். ஏனெனில், உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்ய போகிறேன். நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்தபின்

திரும்பிவந்து உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன். அப்போது நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள். நான் போகும்வழி உங்களுக்கு தெரியும்," என்றார் இயேசு (யோ 14 : 1-4).

இதர அப்போஸ்தலர் போல், தோமாவும் மிக ஆழமாகவே இயேசுவைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தார். ஆனால், அவருக்கு இயேசுவின் வார்த்தைகளைத்தான் புரிந்துகொள்ள முடியவில்லை. "தந்தையின் வீடு . . . இல்லம் . . . வழி என்றெல்லாம் சொல்கிறாரே இயேசு, என நினைத்த தோமஸ் இதர சீடர்கள் அமைதியாக இருப்பினும் இயேசுவிடம் கேள்வி கேட்கிறார். **"ஆண்டவரே நீர் செல்லும் இடமே எங்களுக்கு தெரியாதிருக்க,** அங்கே போகும்வழி எப்படித் தெரியும்?" (யோ 14 : 5). இதனால், நமக்கு அற்புதமான மறை உண்மையினையே விளக்கும் பதிலொன்றை இயேசு தருகிறார்.

"நானே வழியும் உண்மையும் உயிரும்
என் வழியாயின்றி எவனும் பரம தந்தையிடம்
வருவதில்லை. நீங்கள் என்னை அறிந்திருந்தால்
என் தந்தையையும் அறிந்திருப்பீர்கள். இதுமுதல்
நீங்கள் அவரை அறிந்தவராயிருக்கிறீர்கள்,
அவரைக் கண்டவர்களாகவும் இருக்கிறீர்கள்"

என்றார் இயேசு (யோ 14 : 6-7).

அன்று இரவு, கெத்சமேனி தோட்டத்தில் இயேசு கைது செய்யப்பட்டார். முன்பு அவரிடம் பல சீடர்கள் தங்களது அன்பையும், விசுவாசத்தையும் வெளிப்படுத்தி இருந்தாலும் முக்கிய நேரத்தில் இயேசு கைது செய்யப்படும்போது, **தோமா உட்பட எல்லா சீடர்களும் ஓடி ஒளிந்து தான் போனார்கள்.** இயேசுவுக்காக அந்நேரம் கஷ்டப்பட, துன்பப்பட அவர்கள் தயாராக இல்லை.

தோமாவின் சந்தேகம்

பெரிய வெள்ளி அப்போஸ்தலர்களுக்கு மறக்க முடியாத நாளாகி விட்டது. மிக தூரத்தில் இருந்தவாறே இயேசுவின் பாடுகளையும் மரணத்தையும் அவர்கள் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள். இயேசு சிலுவையில் அறையப்பட்டு மரணமடைந்தது, தோமாவுக்கும் இதர சீடர்களுக்கும் மிகப் பெரிய இழப்பாகப் போய்விட்டது. அவர்களின் நம்பிக்கையையும், எதிர்காலத்தையும் கேள்விக் குறியாக்கி விட்டது.

இயேசுவைப் புரிந்து கொள்ளாமல், மிகப்பெரிய ஆசைகளையும் விருப்பங்களையும் கொண்ட அப்போஸ்தலர், அவரின் கோர மரணத்தைத் தாங்கக்கூடிய சக்தியைப் பெறவில்லை. தோமா மிக ஆழமாகவே இயேசுவை நம்பியதால், அவர் இயேசுபட்ட பாடுகளையும், மரணத்தையும் நினைத்து பேரதிர்ச்சி கொண்டார். இதர அப்போஸ்தலரிடம் இருந்து, அநேகமாய் சிலகாலம் விலகியே இருந்தார் எனவும் தெரிகிறது.

இயேசு உயிர்த்தெழுந்த ஞாயிறு மாலை, அப்போஸ்தலர் அனைவரும் இராவுணவு அறையிலே கூடியிருந்தார்கள். ஆனால், தோமா அந்நேரம் அங்கு இல்லை. அப்போஸ்தலர் கதவுகளை மூடியே வைத்திருந்ததாகத் தெரிகிறது. அவர்கள், அனேகமாக இயேசு மரிய மதலேனாவுக்குத் தோன்றியது பற்றியும், பேதுரு மற்றும் யோவான் கல்லறைக்குச் சென்றது பற்றியும்தான் பேசிக் கொண்டு இருப்பார்கள். அந்நேரத்தில், இயேசுவே அவர்கள் முன் தோன்றினார். தமது காயங்களையும் காண்பித்தார். அப்போஸ்தலர் பயப்பட, இயேசுவோ அவர்கள் முன் உணவு உட்கொண்டு அவர்கள் ஐயத்தைப் போக்கினார்.

பலமணி நேரம் கழித்து தோமா வந்தார். இதர அப்போஸ்தலர்கள், "நாங்கள் ஆண்டவரைப் பார்த்தோம்" என்றார்கள். தோமா நம்ப மறுத்து விட்டார். அதுமட்டுமல்ல, தான் நம்புவதற்கு சில விதிமுறைகளையும் கூறினார். "அவருடைய கைகளில் ஆணியால் உண்டான தழும்பைப் பார்த்து ஆணிகள் இருந்த இடத்தில் என் விரலை விட்டு, அவர் விலாவில் என் கையை இட்டாலொழிய நம்ப மாட்டேன்" என்றார் தோமா.

எட்டு நாட்களுக்குப்பின், தோமா உட்பட அனைத்து அப்போஸ்தலரும் மாடியறையில் கூடியிருக்க, இயேசுவே மீண்டும் தோன்றி, "உங்களுக்கு சமாதானம்" என்றார். பின்பு, நேராக தோமாவிடம் வந்தார் இயேசு. "இங்கே உன் விரலை இடு. இதோ என் கைகள். உன் கையை நீட்டி என் விலாவில் இடு. விசுவாசம் அற்றவனாய் இராதே, நம்பிக்கைக் கொள்." என்று தோமாவிடம் கூறினார் இயேசு. அவ்வளவு தான் அப்படியே, காலில் விழுந்தார் தோமா. "**என் ஆண்டவரே, என் கடவுளே**" என்றும் கூறி தமது விசுவாசத்தை அறிக்கையிட்டார் தோமா (யோ 20 : 28).

விவிலிய அறிஞர்கள் இயேசுவை எந்த ஒரு அப்போஸ்தலரும், இவ்வளவு உயர்வான வார்த்தைகளால் விளித்து அறிக்கை இட்டது இல்லை எனக் கூறுகிறார்கள். பேதுரு செசாரிய பிலிப்பியில் கூறியதை விட, பவுல் தனது கடிதங்களில் இயேசுவை அறிக்கையிட்டதை விட, தோமாவின் இந்த அறிக்கைதான் உயர்வானது எனக் கருதப்படுகிறது. ஆக, தோமா இயேசுவின் இறைத் தன்மையையும் அங்கீகரித்தார். தனது தோல்வியையும் ஒப்புக் கொண்டார். இந்நிகழ்ச்சியால், தோமாவுக்கு இன்றுவரை "சந்தேகத் தோமா" என்ற பெயரும் உண்டு.

மேற்சொன்ன நிகழ்ச்சியை மற்றொரு கோணத்திலும் ஆராய்கிறார்கள் இன்றைய அறிஞர்கள். விஞ்ஞானியாக இருப்பவர்தான் எதையும் ஆராய்ந்து பார்த்து, நேரில் பார்த்து தமது நம்பிக்கையை

வெளியிடுவார். தோமாவும் இத்தகைய மனநிலையைக் கொண்டிருந்ததால், '**விஞ்ஞானி அப்போஸ்தலர்**' என்று இவர் அழைக்கப்படுகிறார். புனித அகுஸ்தீன் என்னும் இறையியல் வல்லுநர், "மற்ற அப்போஸ்தலருடைய விசுவாசத்தை விட, தோமாவின் விசுவாசத்தால்தான் நமது நம்பிக்கை பலம் பெறுகிறது" எனக் கூறுகிறார்.

தோமாவின் அறிக்கையைக் கேட்ட இயேசுவும் மௌனமாக இருந்து விடவில்லை. "என்னைக் கண்டதால் விசுவாசம் கொண்டாய். ஆனால், காணாமல் விசுவசிப்போர் பேறுபெற்றோர்" என்று கூறினார் இயேசு (யோ 20 : 28). இந்த ஆசீர்வாதம் நமக்கல்லவோ சேருகிறது.

இயேசுவின் இறுதி கட்டளை

யோவானின் நற்செய்தியில் மற்றொருமுறையும் தோமாவின் பெயர் குறிப்பிடப்படுகிறது. ஆனால், அவர் செயலோ, சொல்லோ குறிப்பிடப்பட வில்லை (யோ 21 : 1-23). கலிலேயாக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற ஏழு அப்போஸ்தலர்க்கு இயேசு தோன்றினார். இரவெல்லாம் உழைத்தும் மீனே கிடைக்காத தமது சீடர்க்கு புதுமையாக மீன்கள் கிடைக்கச் செய்தார் இயேசு. அந்த பேறுபெற்ற ஏழு சீடர்களில் தோமாவும் ஒருவர். பேதுரு, யோவான், பார்த்தொலொமேயு, யாக்கோபு மற்றும் வேறு இருவர் (திருநூல் இருவர் பெயரைக் குறிப்பிடவில்லை) போன்றோருடன் தோமாவும் 'உயிர்த்த இயேசுவின் புதுமையைக்' காணும் பேறுபெற்றார்.

இயேசு உயிர்த்தெழுந்த நாற்பதாம் நாள் இயேசு தமது அப்போஸ்தலர்களை கலிலேயாவிலுள்ள மலையில் கூடச் சொன்னார். தோமாவும் இதர சீடர்களும் இயேசு சொன்ன இடத்திற்கு வந்தபின், இயேசுவே அவர்கள் முன் தோன்றினார். அப்போஸ்தலர் அனைவரும் அவரை மீண்டும் பார்த்து விட்டோம் என சந்தோஷம் கொண்டாலும், இம்முறை மிக முக்கியமான அலுவலைத் தமக்கு ஒப்படைக்க இருக்கிறார் என நினைத்தார்கள்.

இயேசுவும் அவர்கள் அருகே வந்து கீழ்க்கண்டவாறு கூறலானார். "விண்ணிலும் மண்ணிலும் எல்லா அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது. நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள். பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயரால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட அனைத்தையும் அவர்கள் கடைபிடிக்குமாறு போதியுங்கள். இதோ! நான் உலக முடிவுவரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்" (மத்28:18-20).

இறை இயேசுவின் மீட்புத் திட்டம் நிறைவேறுவதற்கு இயேசு கொடுத்த இறுதி உறுதி கட்டளை இதுவே. அப்போஸ்தல சாசனமும் இக்கூற்றிலே தான் முழுவதும் அடங்கியிருக்கிறது.

அப்போஸ்தலர்களுக்கு மிகப்பெரிய பொறுப்பைத் தான் கொடுத்திருக்கிறார் இயேசு. ஏறக்குறைய உலகையே மனமாற்றக்கூடிய

மிகப்பெரிய பணியைத்தான் இயேசு விட்டுச் சென்றிருக்கிறார். கலிலேயா மலையிலிருந்து தெற்கு நோக்கி பார்த்தால் அப்பால் எகிப்து நாடும், ஆப்பிரிக்கா நாடுகளும் இருப்பதை அவர்கள் அறிந்துதான் வைத்திருந்தார்கள். மத்திய தரைக்கடல் கிழக்குப் பகுதியில் பாபிலோனியா, அசிரியா, பார்த்தியா, அரேபியா மற்றும் இந்தியா, சீனா போன்ற நாடுகள் இருப்பதையும் அவர்கள் தெரிந்தே தான் வைத்திருந்தார்கள். பல வாணிகர்கள் மூலமாகவும், யாத்ரீகர்கள் மூலம் அத்தேசத்து கதைகளையும், அவர்கள் வணங்கும் தெய்வங்களையும், அவர்களின் நாகரிகங்களையும் கேள்விப்பட்டுத்தான் இருந்தார்கள். இந்நாடுகளுக்கெல்லாம் **இவ்வப்போஸ்தலர்கள் சென்று கிறிஸ்துவின் பாடுகள், உயிர்ப்பையும், மீட்பின் செய்தியையும் அறிவிக்க வேண்டும்** என்ற மிகப்பெரிய காரியம் தமக்காகக் காத்திருப்பதை அப்போஸ்தலர்கள் தெரிந்துதான் வைத்திருந்தார்கள். ஆனால், இம்மகத்தான பணியினை ஒப்படைத்திருப்பதோ பதினொரு, சாதாரண மனிதர்களிடம் நிச்சயம் அவர்கள் அனைவரும் பாலஸ்தீனா தவிர, இதர நாடுகளுக்கு சென்றிருக்க மாட்டார்கள். வேறு மொழிப் புலமையும் அவர்களுக்கு இல்லைதான். இருப்பினும், கிறிஸ்துவிற்காக மகத்தான காரியம் செய்ய அவர்கள் ஆயத்தமாகத்தான் இருந்தார்கள்.

இயேசு உயிர்த்த நாற்பதாம் நாள் ஒலிவ மலைமேல் சீடர்களை அழைத்துக் கொண்டு போனார். அவர்கள் ஆசீர்வாதம் செய்து, பிறகு விண்ணேற்றம் அடையலானார். அப்போஸ்தலர்களும், இயேசு விண்ணேற்பு அடைந்த பின் ஜெருசலேம் திரும்பினார்கள். செபத்திலும், தவத்திலும், தியானத்திலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு இயேசு சொன்னபடி துணையாளரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பத்து நாட்களுக்குப் பின், பெந்தகோஸ்தே திருநாள் அன்று இயேசுவின் தாயார், அப்போஸ்தலர்கள், சீடர்கள் என ஏறக்குறைய 120 பேர் கூடியிருக்கையில், தூய ஆவியானவர் அவர்கள் மேல் இறங்க, இறை வல்லமையையும், ஞானத்தையும் பெற்றுக் கொண்டார்கள். அவர்கள் பலமொழிகளையும் பேசும் திறனையும் பெற்றார்கள்.

அப்போஸ்தலர்களிடம் ஏற்கனவே இருந்த பயமும், கூச்சமும் போய்விட, தைரியமாக மக்கள் முன் இயேசுவை பற்றி போதிக்க ஆரம்பித்தார்கள். அப்போஸ்தலர்களின் தலைவரான பேதுரு தானே முன்வந்து யூதர்களிடம், இயேசுவைப் பற்றி, பாடுகள் - உயிர்த்தெழுதல் பற்றி போதிக்க அவர் மறையுரையைக் கேட்டு, ஏறத்தாழ மூவாயிரம் பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

ஆக, "யெருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், உலகின் இறுதி எல்லை வரைக்குமே" (அப்.பணி 1 : 8). அப்போஸ்தலர்கள் இயேசுவின் நற்செய்தியை எடுத்துச் செல்ல தயாராகி விட்டார்கள்.

3

வட இந்தியா மற்றும் சொகோட்டிராவில் தோமா

- அப்போஸ்தலர் பணி
- தோமா இந்தியாவிற்கு புறப்படுதல்
- தட்சசீல நகர்
- கொண்டோபோர் அரசனும், கட்டிடக்கலை வல்லுநர் தோமாவும்
- காந்தாராவிலுள்ள திருச்சபை
- தோமா தட்சசீல நகரை விட்டு செல்கிறார்
- காந்தாரா திருச்சபையின் பிந்தைய நிலை
- தோமா சொகோட்டிராவுக்கு புறப்படுதல்
- சொகோட்டிராவில் தோமா
- சொகோட்டிரா சபையின் பிந்தைய நிலை

அப்போஸ்தலர் பணி

முதல் சில ஆண்டுகள் அப்போஸ்தலர்கள் அனைவரும் பாலஸ்தீனாவில் தான் இயேசுவின் போதனைகளைப் பரப்பிக் கொண்டு இருந்தார்கள். பிறகுதான் புறவினத்தாரிடமும், நற்செய்தியை பரப்ப வேண்டும் என எண்ணி, அதைச் செயலாக்கவும் துணிந்தார்கள்.

அப்போஸ்தலர்களில் பேதுரு, பாலஸ்தீனாவை விட்டு அந்தியோக்கியா என்ற நகருக்குச் சென்றார். பிறகு, ரோமை நகருக்கு சென்று, அங்கு தனது இருப்பிடத்தை ஸ்தாபனம் செய்தார். பேதுருவின் சகோதரர் அந்திரேயா சித்தியா மற்றும் அக்காயியா நாடுகளுக்கும், யாக்கோபு ஸ்பெயினுக்கும், யோவான் ஆசியா மைனர் நாடுகளுக்கும் சென்றனர். பிலிப்பு பிரிஜியாவிற்கும், பார்த்தொலொமேயு ஆர்மேனியாவிற்கும் சென்றார்கள். அப்படியானால் தோமா? புதிய ஏற்பாடு நூலில் காணப்படும் அப்போஸ்தலர் பணி நூல் அனைத்து அப்போஸ்தலர் பணிகளையுமா விவரிக்கிறது? இல்லை. முதல் பகுதியில் (அதி 1 : 12) பேதுரு பாலஸ்தீனாவில் செய்த பணிகளும், இரண்டாம் பகுதியில் (அதி 13 : 28) உயிர்த்த இயேசுவால் விசேஷ விதமாக அப்போஸ்தலராக அழைக்கப்பட்ட பவுலின் பணிகளும் விவரமாகக் காணப்படுகின்றன. அப். பணிநூல் **தோமாவைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை.** அப்போஸ்தலர்கள் அனைவரும் தங்களது பயணங்கள், சாதனைகள் போன்றவற்றைப் பற்றி வெளியே அதிகம் சொல்லவே இல்லை. அவர்கள் தங்களது குரு இயேசு சொன்னபடி, "மனிதர் பார்க்க வேண்டுமென்று உங்கள் நற்செயல்களே அவர்கள் முன் காட்டிக் கொள்ளாதபடி கவனமாயிருங்கள். இல்லையேல், வானகத்திலுள்ள உங்கள் தந்தையிடம் உங்களுக்குக் கைம்மாறு கிடைக்காது" (மத் 6 : 1-2) என்பதை நினைவுகூர்ந்து, தங்களது சொல், செயல்கள் அதிகம் தெரியாதபடி பார்த்துக் கொண்டார்கள்.

ஆனாலும், அனைத்து அப்போஸ்தலர்களின் வாழ்வு, பயணங்கள், சாதனைகள், மரணங்கள் அனைத்தும் ஆதிகாலக் கிறிஸ்தவர்களின் கவனத்தை வெகுவாகவே ஈர்த்தது. ஆனால், முழுவதும் நம்பகமான தகவல்கள் அவர்களுக்கு கிடைக்காமல்தான் போனது. ஆகவே, ஆதிகால சபைகள் அப்போஸ்தலர் பெயரால் காணப்படும் நூல்களை "மறைவு நூல்கள்" (Apocryphal Books) வரிசையில் சேர்த்து விட்டது. அந்நூலில் காணப்படும் தகவல்களை முழுவதும் நம்ப வேண்டாம் என்றும், அதிலுள்ள வரலாற்று உண்மைகளை ஏற்றுக் கொள்ளலாம் என்றும் அக்காலத்திய சபைத் தலைவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

அப்போஸ்தலர்களில், பேதுருவின் பணி, அந்திரேயாவின் பணி, யோவானின் பணி, பவுலின் பணி, தோமாவின் பணி போன்றவை மிக அதிக அளவில் கிறிஸ்தவர்களால் பயன்படுத்தப்பட்டு வந்தது.

அப்புத்தகங்களில், 'புனித அப்போஸ்தலர் தோமாவின் பணி' என்ற நூல் அதிக கிறிஸ்தவர்களின் கவனத்தை ஈர்க்கவே செய்தது. இனிவரும் தகவல்கள் அனைத்தும், இப்புத்தகத்தில் காணப்படுபவை தான். முதலில் சிரியா மொழியில் இந்நூல் எழுதப்பட்டது. 'எடெசா' எனும் பகுதியில் வாழ்ந்த லிசியஸ் (Leucius) என்பவர்தான் இந்நூலை எழுதியிருக்க வேண்டும் என்பது அறிஞர்களின் கருத்து. எழுதப்பட்ட காலம்? அனேகமாக கி.பி. 400-க்கு முன்பாக இருக்கலாம் என சில விவிலிய அறிஞர்களும், கி.பி. 250-க்கு முன்பாகவே எழுதப்பட்டிருக்கலாம் என வேறு சில அறிஞர்களும் கருதுகிறார்கள். நாளடைவில் இந்நூல் கிரேக்கம், லத்தீன், ஆர்மேனியன், எத்தியோப்பியன், காப்டிக், அராபிக் போன்ற மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டது.

தோமா இந்தியாவிற்கு புறப்படுதல்

ஒருநாள் ஜெருசலேம் நகரில் அனைத்து அப்போஸ்தலர்கள் - சீமோன் பேதுரு, அந்திரேயா, செபதேயுவின் மகன் யாக்கோபு, வரிவசூலிக்கும் தொழில் செய்த மத்தேயு, அல்பேயுவின் மகன் யாக்கோபு, கானாவூர் சீமோன் மற்றும் யூதா ததேயு, தோமா போன்றோர் ஒன்றாகக் கூடியிருந்தார்கள். அவர்கள் எந்தெந்த நாடுகளுக்கு எல்லாம் சென்று மறைபரப்பலாம் என யோசிக்கையில், அவர்களுள் ஒருவர் சீட்டுப் போட்டு பார்த்து அந்தந்த பகுதிகளை பிரித்துக் கொள்ளலாம் என நினைத்தார்கள்.

தோமாவுக்கு அவ்வாறுப் பிரித்துப் பார்க்கையில் இந்தியா விழுந்தது என 'தோமாவின் பணி' நூல் தெரிவிக்கிறது. யூசேபியஸ் சரித்திர ஆசிரியரோ பார்த்தியா விழுந்தது எனக் கூறுகிறார். எதுவானாலும் சரி, இந்தியாவிற்கும் அதன் அருகே உள்ள நாடுகளுக்கும் சென்றுவர தோமாவுக்கு இறைகட்டளை கிடைத்தது.

இந்தியாவிற்கு தூதுரைக்க வேண்டும் என சொல்லப்பட்டதும், தோமா முதலில் தயங்கியதாகத் தெரிகிறது. நான் ஒரு யூதன், நான்போய் எவ்வாறு இந்தியாவிற்கு சென்று பணி ஆற்றுவது, எனவும் எண்ணினாராம். இந்த எண்ண ஓட்டத்தைத் தெரிந்து, இறை இயேசுவே தோமாவுக்கு தோன்றி தோமா, "பயப்படாதே, இந்தியாவிற்கு சென்று மறைபணி ஆற்று, இறைவார்த்தையையும் போதிப்பாய். என் அருள் உனக்கு எப்போதும் கிடைக்கும்," என்றாராம் இயேசுவும். தோமாவோ "எங்கு போனாலும், இந்தியாவிற்கு மட்டும் போகவே மாட்டேன்," எனச் சொன்னாராம்.

இச்சமயத்தில், இந்தியாவிலிருந்து ஹப்பான் என்ற வாணிகர் அங்கு வந்ததாகத் தெரிகிறது. அவர் 'கொண்டேபோர்னஸ்' எனும் அரசனால் அனுப்பப்பட்டவர். அவர் ஒரு நல்ல தச்சுத் தொழிலாளியை அரண்மனைக்கு அழைத்து வரச் சொன்னதாக சொன்னார்.

இயேசுவே ஹப்பானை அங்காடிகள் நிறைந்த பகுதியில் சந்தித்தார். அவர் ஹப்பானிடம், "உமக்கு ஒரு நல்ல தச்சர் வேண்டுமா" எனக் கேட்க, "ஹப்பான்" "ஆம்," என்றார். ஆண்டவரோ ஹப்பானிடம், "என்னிடம் ஒரு நல்ல தச்சர் ஒருவர் இருக்கிறார், நான் அவரை உன்னிடம் ஒப்படைத்து விடுகிறேன்," எனக்கூறி தோமாவைக் காண்பித்தார். அதுமட்டுமல்லாமல், ஓர் பத்திரமும் எழுதிக் கொடுக்கப்பட்டது.

"தச்சனாகிய யோசேப்பின் மகன், இயேசுவாகிய நான் யூதா தோமாவை, இந்தியா தேசத்து அரசனான 'கொண்டேபோர்னஸின்' வணிகரான ஹப்பானிடம் ஒப்படைக்கிறேன்," என பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

பிறகு, தோமாவும் மனமாறி இயேசுவிடம் "**உமது சித்தத்தின்படியே ஆகட்டும், நீர் சொன்ன இடத்திற்கே நான் செல்கிறேன்**" எனக் கூறினார். இறுதியில், தோமாவும் ஹப்பான் வியாபாரியுடன் இந்தியாவிற்கே கிளம்ப ஆயத்தமானார். தங்களது சுமைகளை, துணிகளை எல்லாம் எடுத்துக்கொண்டு கப்பல் பிரயாணத்திற்கு ஆயத்தமானார்கள்.

இருவரும் கப்பல் பிரயாணத்திற்கு தயாராகிக் கொண்டிருக்கையில், ஹப்பான் வியாபாரி தோமாவிடம் அவருடைய தகுதிகள் பற்றி விசாரித்தார். தோமாவும் கீழ்க்கண்டவாறு விடையளித்தார். "என்னால் ஏர்க் கலப்பைகள், துடுப்புகள், படகுகள், கப்பல் பாகங்கள் போன்றவற்றை நன்றாகச் செய்ய முடியும். அதுமட்டுமல்லாமல், நான் கல்தூண்கள், கோவில்கள், அரண்மனைகள் போன்றவற்றையும் கட்டுவேன்." இதைக்கேட்ட ஹப்பான் வாணிகர், "இம்மாதிரி நபரைத்தான் நான் தேடிக் கொண்டிருந்தேன்," என்றார்.

இதற்குப் பிறகு கப்பல் ஏறினார்கள் தோமாவும், ஹப்பான் வியாபாரியும். காற்றும் அவர்களுக்கு அனுகூலமாக அமைய, அவர்கள் கப்பலில் நீண்டதூரம் பயணம் செய்து 'ஆண்டிரோபோலிஸ்' (Andro Polis) என்னும் பெரிய நகரை அடைந்தார்கள்.

அந்தக்காலங்களில் இந்தியாவுக்கும் ரோமை அரசுக்கும் மிக நன்றாகவும், விறுவிறுப்பாகவும் வாணிகம் நடைபெற்றுக் கொண்டுதான் இருந்தது. இந்தியாவிலிருந்து முத்துக்கள், மிளகு, இதர வாசனை சமையல் பொருட்கள், கிராம்பு, பருத்தி, பட்டு போன்றவை மேற்கத்திய நாடுகளுக்கு அனுப்பப்பட்டே வந்தது. இந்தியாவிலிருந்து நேரடியாகவோ, சீனா தேசத்திலிருந்து இந்தியா மூலமாகவோ வாணிபம் நடைபெற்றுக் கொண்டு வந்தது. அதனால், பல வணிகர்கள் பெர்சியா (இன்றைய ஈரான்), மெசப்பட்டோமியா (ஈராக்), பார்த்தியா (ஆப்கானிஸ்தான்) போன்ற நாடுகள் வழியாக பயணம் செய்து பல்வேறு பொருட்களை ஏற்றுமதி,

இறக்குமதி செய்வதற்கு காரணமாய் இருந்தார்கள். பயணம் செய்யும்போது சில முக்கிய காரணிகளையும் கவனிக்கத்தான் வேண்டும்- இவ்வழி பயணம் கடினமாகவும், பாதுகாப்பற்றதாகவும், அந்தந்தப் பகுதி அரசர்களிடம் அதிகம் வரிகொடுக்க வேண்டிய சூழலில் இருக்க வேண்டியதாகவும் அமைந்தது. இதனால், சில வணிகர்கள் கடல்வழி பயணத்தையே அதிகம் விரும்பலானார்கள்.

பெரும்பாலான ஆராய்ச்சியாளர்கள் தோமா அனேகமாக கடல் வழியாகத்தான் இந்தியா வந்ததாக நினைக்கின்றனர். வாணிகர்கள் அனேகமாக யோப்பா அல்லது தீர் எனும் துறைமுகத்திலிருந்து கிழக்கத்திய நாடுகளுக்குக் கிளம்புவார்கள். தோமாவும் இவர்களுடன் பயணத்தை ஆரம்பித்து 'அலெக்சாந்திரியா' துறைமுகம் போய் சேர்ந்திருக்கலாம். அலெக்சாந்திரியா துறைமுகத்தில்தான் இந்தியா வணிகர்கள் பலரை தோமா சந்தித்து இருக்கக்கூடும். அங்கிருந்து ஆண்டிரோபோலிஸ் நகருக்கு வந்து, பிறகு 'கோப்டோஸ்' எனும் நகரை பன்னிரு நாட்கள் கழித்து சேர்ந்தார்கள். (கோப்டோஸ் இன்று சாபூர் என்று அழைக்கப்படுகிறது). கோப்டோஸ் ஊரில்தான் சுமைகளை எல்லாம் இறக்கிவிட்டு, ஒட்டகங்கள் மேல் ஏற்றி அனுப்பி விடுவார்கள்.

அங்கிருந்து வணிகர்கள் செங்கடலுக்கு பெர்னிஸ் எனும் முக்கிய துறைமுக நகர் வழியாகச் செல்வார்கள். இதனுடைய தூரம் 258 மைல்கள். இதைக் கடப்பதற்கு 10 நாட்கள் ஆகும். பயணிகள் ஓய்வு எடுப்பதற்காக 12 இடங்களில் வழி நெடுகிலும் தற்காலிக ஓய்வு எடுப்பதற்காக வசதிகள் செய்யப்பட்டு இருந்தன. ஓய்வு எடுப்பதோடு, வேறு சில பொருட்கள் வாங்க, விற்க உணவு எடுத்துக் கொள்ள என்பதற்கும் சில வசதிகள் செய்யப்பட்டே இருந்தன. **'பெர்னிஸ்'** எனும் **துறைமுகத்திலிருந்து வருடத்திற்கு ஒருமுறை இந்தியா** சென்றுவர கப்பல்கள் இருந்தன. இந்த கப்பல்கள் 'ஏடென்' எனும் இடத்திலும், சொகோட்டிரா எனும் தீவிலும் மட்டும் நின்று, நீர் மற்றும் உணவை சேகரித்துக் கொண்டு இந்தியா சென்றடைய இருந்ததாகத் தெரிகிறது.

கி.பி. 44-ஆம் ஆண்டளவு, அனேகமாக தோமா பாலஸதீனாவை விட்டுக் கிளம்பியிருக்கலாம். ஜூன் மாதம் முதல் வாரம் அனேகமாக அவர் ஏடென் அல்லது சொகோட்டிரா எனும் தீவு சென்றிருக்கலாம். அங்கு சிறிதுகாலம் தென்மேற்குப் பருவக்காற்று வீசுவதை எதிர்பார்த்து இருக்கலாம். பருவகாலம் தொடங்கியதும், சிந்து நதிக்கருகிலுள்ள 'டாடா' (Tata or Pattala) அல்லது 'பாட்டாலா' எனும் துறைமுகம் சென்றிருக்கலாம். ஆக, இந்து பகுதியிலும் தோமா சிலகாலம் தங்கி நற்செய்தி போதித்ததாகச் சொல்லப்படுவதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பிரிந்த சகோதரர்கள் அதாவது புரொட்டஸ்டாண்டுகள் சிந்து பகுதிகளுக்கு வருகை புரிந்தார்கள். அங்கு பல துறவிகளை அவர்கள்

சந்திப்பதற்கு வாய்ப்பு கிடைத்தது. அவர்கள் டாடா துறைமுகத்திலும், சிந்து சமவெளியிலுள்ள வடக்கு தெற்கு பகுதிகளிலும் வாசம் செய்து வந்தார்கள். அவர்கள் தூமா பகத் (Thuma Bhagat or Thomas the Saint) அல்லது தூய தோமா என்பவரைப் பின்பற்றுவர்களாக இருந்ததாகச் சொன்னார்கள். அதுமட்டுமல்லாமல், பல கிறிஸ்தவ சடங்குமுறைகளை அவர்கள் பின்பற்றுவதாகவும், புனித மத்தேயுவின் நற்செய்தி புத்தகத்தை வைத்திருந்ததாகவும் கூறினார்கள். அவர்கள் கூற்றுதான் தோமா சிந்து பகுதியில் நற்செய்தி போதித்ததற்கு ஆதாரம் ஆகும்.

சிந்து பகுதியில் பணியாற்றிய தோமா கப்பல் பிரயாணம் செய்து 'அட்டோக்' எனும் ஊரை அடைந்தார். அதன்பிறகு, கால்நடையாக 40 மைல்கள் கடந்து தென்கிழக்குப் பகுதிக்கு சென்றால்தான் தட்சசீல நகருக்கு (Takila) வருகை தரமுடியும். அனேகமாக, **ஆகஸ்டு மாதம் தோமாவும், ஹப்பானும்** இதர வணிகர்களும் இவ்வூருக்கு வந்திருக்கலாம்.

தட்சசீல நகர்

காந்தாரா அரசின் தலைநகராய் விளங்கியதுதான் தட்சசீலம் எனும் நகர். இன்று இந்நகரின் இடிபாடுகள் மட்டுமே காணப்படுகிறது. தற்போதைய பஞ்சாப் மாகாணத்தில் ராவல்பிண்டி ஊரிலிருந்து 15 மைல்கள் வடக்கில் இந்நகரின் இடிபாடுகளை நாம் காணலாம். அறுபது வருடங்களுக்கு முன்பு, பல்வேறு தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இந்நகரை ஆய்வுசெய்து பலவிதமான தகவல்களை கொடுத்தார்கள்.

மன்னன் பாரத் என்பவனது மகனான 'தகஷ்' என்பவனது பெயரால் இந்நகர் அழைக்கப்பட்டது என ஒரு சாரார் நம்புகின்றனர். மற்றும் சிலரோ தட்சம், சீலம் எனும் விலைமதிப்புமிக்க கற்கள் பெயரால் இந்நகர் அழைக்கப்பட்டிருக்கலாம் என நினைக்கின்றனர். ஏன்? இந்நகர் கட்டிடங்கள் பல இக்கற்களால் கட்டப்பட்டது எனவும் இதற்கு காரணங்கள் சொல்கின்றனர்.

வடமாநிலங்களில், மத்திய ஆசியாவிலிருந்து வந்த 'ஆரியர்கள்' பஞ்சாப் மாநிலத்தில் தான் முதலில் குடியேறினார்கள். ஆதலால், வேத நூல்களின் அதாவது இந்துக்களின் வேத நூல்களின் கல்வி மையமாகவும் இந்நகர் திகழ்ந்தது. பிராமணர்கள், இளவரசர்கள் எல்லோரும் தட்சசீல நகர் பல்கலைக்கழகத்திற்குத்தான் கல்வி கற்பதற்கு அனுப்பப்பட்டார்கள். இங்கு மருத்துவம் (மூலிகை மருத்துவம்), தத்துவம், மொழி இலக்கியம் அறிவியல் போன்றவை கற்பிக்கப்பட்டன. பனினி (Panini) என்பவர் சமஸ்கிருத மொழி வல்லுநராகக் கருதப்பட்டார்.

கி.மு. 515-ஆம் ஆண்டு, பெர்ஜியா மன்னன் டேரியஸ் என்பவன் தனது இராணுவத்தை அனுப்பி முழு சிந்து சமவெளி பள்ளத்தாக்கையும்

ஆக்ரமித்து, தனது அரசின் 20-ஆவது மாகாணமாக்கிக் கொண்டார். அம்மகாணத்திற்கும் தலைநகர் தட்சசீலம் தான். இதர மாகாணங்களைக் காட்டிலும் இது சற்று அதிகமாகவே, **360** தங்கத் தாலந்துகளை வரியாகக் கட்டியதாகக் கூறுகிறார்கள்.

இதனால், பொர்சிய மதமும், சுராஸ்டர் (Zoroaster) தத்துவமும் இந்நகரை வந்தடைந்தது. அது சம்பந்தமான கோவில்கள் பலவும் கட்டப்பட்டன. யூதர்களும் பொர்சியாவிலிருந்து இந்நகரில் குடியேற ஆரம்பித்தார்கள்.

கி.மு. 326-ஆவது ஆண்டளவு, மகா அலெக்சாந்தர் கிரேக்க நாட்டிலிருந்து வந்தார். அவர் பொர்சியாவையும் பிறகு சிந்து சமவெளிப் பகுதியையும் ஆக்ரமிப்பதற்காக வந்தார். அச்சமயத்தில் **அம்பி (Ambhi) எனும் அரசன் அலெக்சாந்தரின் படைபலத்திற்கு அஞ்சி ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார்.** அலெக்சாந்தருக்கு பரிசாக 3,000 மாடுகள், 10,000 ஆடுகள் மற்றும் 5000 படை வீரர்களை அனுப்பிக் கொண்டார். அலெக்சாந்தர் கூடவே வந்த கிரேக்க வரலாற்று ஆசிரியர்கள் தட்சசீல நகரைப் பார்த்து, 'இந்நகர் செழிப்புமிக்கதாய் விளங்கியது' என எழுதியிருக்கிறார்கள்.

சிலகாலம் கழித்து, சந்திரகுப்த மௌரியர் தமது 'மௌரிய அரசை' நிறுவியபோது பாட்னாவை (பாடலிபுத்திரா) தலைநகராய் வைத்திருந்தார். அவ்வரசின் நான்கு முக்கிய நகர்களுள் ஒன்றாக தட்சசீலம் விளங்கியது.

சந்திரகுப்தாவின் பேரன், 'மகா அசோகர்' எனும் பேரரசர் (கி.மு. 273-232), தட்சசீல நகரின் ஆளுநராக இருந்துவிட்டு, பிறகுதான் மௌரிய அரசின் பேரரசராக விளங்கினார். புத்தமதத்தைப் பின்பற்றிய அவர் புத்தமதக் கொள்கைகளை பரப்பியும், பல தூண்கள், கோவில்கள் கட்டியும் வாழ்ந்தார்.

கி.மு. 138-ஆம் ஆண்டு, தட்சசீல நகர் பார்த்தியர்களின் கைகளுக்கு வந்தது. மித்ரிடேட்டஸ் I எனும் மன்னன் பார்த்தியர்களின் முதல் அரசன்.

இத்தகைய சிறப்புமிக்க நகருக்குத்தான் தோமாவும் ஹப்பானும் வந்தனர். தோமாவின் காலத்திலும் தட்சசீலம் நகர் ஆரியர்களும், கிரேக்கர்களுக்கும், பொர்சியர்களுக்கும், பிராமணர்களுக்கும், புத்தமதத்தினர்க்கும், ஜெயினர்க்கும், சிரியர்க்கும், உரோமையர்க்கும் ஒரு பெரிய வியாபாரத் தலமாக விளங்கியது. ஏன், யூதர்கள் பலரும் கூட அந்நகரில் இருந்தார்கள். தட்சசீல நகரிலுள்ள அனைவரும் **சமஸ்கிருதம், பொர்சியமொழி, கிரேக்கம் மற்றும் அராமியக் மொழியில்** (இயேசுவும், அப்போஸ்தலர்களும் பேசிய மொழி) தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கினார்கள். நெருப்பு கடவுளுக்கும் கோவில் ஒன்று இருந்ததாகக் கூறப்படுகிறது. அக்கோவில் 185 அடி நீளமும், 85 அடி அகலமும்,

25 அடி உயரமும் கொண்டதாய் விளங்கியது. கிரேக்கக் கடவுள்களின் பெயரிலும் ஆலயங்கள் பல அந்நகரில் இருந்தன.

இந்நகருக்கு நுழைந்த தோமா, முதலில் அங்கு வாழ்ந்த யூதர்களிடம் மெசியாவின் வருகைபற்றி அறிவித்தார். சிலர் நம்பினர், வேறு சிலர் நம்பவில்லை. அதன் பிறகுதான் தோமா அங்கு வாழ்ந்த படித்த பிராமணர்களிடம், பெர்சியா குருக்களிடம், கிரேக்கர்களிடம் சென்று தமது குருவைப்பற்றி அறிவித்தார். முக்கியமாக இயேசு பட்டபாடுகள், இறப்பு, உயிர்ப்பு ஆகியன பற்றி அதிக முக்கியத்துவம் கொடுத்து போதித்தார். பல கூட்டங்கள் நடத்தி, பலவிதமான செய்திகளை - இயேசுவின் பிறப்பு, வாழ்க்கை, போதனைகள், பாடுகள், இறப்பு, உயிர்ப்பு பற்றி - அவர்களுக்கு அளிக்கவும் அவர் தவறவே இல்லை. பலதரப்பட்ட மக்களிடமும் பழகக்கூடிய வாய்ப்பும் தோமாவுக்குக் கிடைத்தது. அவருடைய வாழ்வு மற்றும் போதனைகளால் கவரப்பட்டு, தோமாவுக்கும் சில சீடர்கள் சேர ஆரம்பித்தார்கள். நல்ல உள்ளம் கொண்டவர் சிலரை தமது உதவியாளர்களாகவும் ஆக்கிக் கொண்டார் தோமா.

கொண்டோபோர் அரசனும், கட்டிடக்கலை வல்லுநர் தோமாவும்

கொண்டோபோர், கொண்டோபோர்னெஸ், குண்டாபார் என்றெல்லாம் இவ்வரசன் அழைக்கப்படுகிறான். கொண்டோபோர் என்பவன் பார்த்தியா தேசத்து அரசனாக, **கி.பி. 20 முதல் 50 வரை ஆண்டிருக்கலாம் என வரலாற்று ஆசிரியர்களே** ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். கி.பி. 1857-ஆம் ஆண்டு கண்டெடுக்கப்பட்ட தத்தி-பாகி கல்வெட்டுகளிலும் நாணயங்களிலும் கூட இம்மன்னன் பெயர் குறிக்கப்பட்டு இருக்கிறது. கபூல் இடத்திலும், தென்மேற்குப் பஞ்சாபில் உள்ள பகுதியிலுள்ள இம்மன்னனின் பெயரைத் தாங்கிய நாணயங்கள் பல கண்டெடுக்கப் பட்டன. ஆக, இம்மன்னன் பார்த்தியா அரசின் மிக முக்கியமான மன்னராக விளங்கினார். அவருடைய அரண்மனை 352 அடி நீளமும், 270 அடி அகலமும் கொண்டதாய் விளங்கியது. தனிப்பட்ட விதமாக சுராஸ்டர் தத்துவங்களை பின்பற்றுபவராக விளங்கினாலும், இதர மதங்களை ஆதரித்தே வந்தார். கிரேக்க கடவுள்கள், சிவன் போன்ற இந்திய கடவுள்களின் நாணயங்கள் பல இவரது அரசில் புளங்கின.

'புனித தோமாவின் பணி' எனும் மறைவுநூல் இவ்வரசனுக்கும் தோமாவுக்கும் இடையே நடைபெற்ற முக்கிய சம்பவத்தை மிக விவரமாக விளக்குகிறது. இச்சம்பவத்தை நாமும் சற்று விவரமாகவே காண்போம்.

ஹப்பான் வியாபாரி, அப்போஸ்தலர் தோமாவை அழைத்துக் கொண்டு கொண்டோபோர் அரசனின் அரண்மனைக்கு கூட்டிச் சென்றார். "என் தலைவா, நான் வெளிநாடு பயணம் செய்து தாங்கள்

கேட்டபடியே ஒரு தச்சரை, கட்டிடக்கலை வல்லுநரை கூட்டி வந்திருக்கிறேன்" என கூறினான் ஹப்பான். இதைக்கேட்ட அரசன் மகிழ்ந்து, தோமாவை வரச்சொல்லி, "நீங்கள்தான் எனக்காக வேலை செய்ய இருக்கும் தச்சரோ? என்ன வேலை உங்களுக்குத் தெரியும்?" எனக் கேட்டான். தோமாவும் பதில் மொழியாக இவ்வாறு கூறினார். "நான் ஒரு நல்ல தச்சுத் தொழிலாளிதான். நான் மற்றொரு தச்சனின் ஊழியனும் கூட. நான் மரக்கட்டைகள், கற்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி பெரிய கோவில்கள், அரண்மனைகள், நினைவிடங்கள் போன்றவற்றைக் கட்டுவேன்," என்றார் தோமா. அரசனும், இத்தகைய தச்சனைத்தான் நான் தேடிக் கொண்டிருந்தேன், "எனக்காக ஒரு அரண்மனையைக் கட்டுவாயா?" என **தோமா "நான் செய்வேன், அதற்காகத் தான் வந்தேன்"** என்று கூறினார்.

அரசனும் மகிழ்ந்து, தோமாவை ஊருக்கு வெளியே அழைத்துக் கொண்டுபோய் ஒரு குறிப்பிட்ட இடத்தைக் காண்பித்தான். **தோமா அவ்விடத்தைப் பார்த்து அரசனிடம், "இவ்விடம் அரண்மனைக் கட்டுவதற்கு உகந்த இடமாகும். இங்கு ஒரு புல்தரை, அடுத்ததாக ஒரு மரத்தாலான அரண்மனை, பிறகு தண்ணீர் வசதி செய்து தர முடியும்" எனக் கூறினார்.** அரசன், "என்று நீர் இவ்வேலையை முடிக்க முடியும்?" எனக் கேட்டான். தோமாவும் வசந்தகாலத்தில் கட்டுவதாக பதில் கூறினார்.

அரசனோ வியப்புற்றான். "எல்லாக் கலைஞர்களும் வெயில் காலத்தில் தானே கட்டுவார்கள். குளிர்காலத்தில் எப்படி அரண்மனை கட்டி முடிப்பீர்கள்? வேண்டுமானால் தாங்கள் செல்லலாம். சிறிதுகாலம் கழித்து நான் தங்களைக் காண்கிறேன். அதற்கு முன் ஒரு வரைபடத் திட்டத்தை ஒப்படைத்துவிடுங்கள்" எனவும் கூறினான்.

தோமா உடனே ஒரு அளவுகோலை எடுத்துக்கொண்டு அரண்மனையின் எல்லைக் கோடுகளை, உட்கோடுகளை அளக்க ஆரம்பித்தார். பிறகு இவ்வாறு சொல்லலானார். "கதவுகள் கிழக்கு நோக்கி இருக்க வேண்டும், அப்போதுதான் காலைக் கதிரவனின் வெளிச்சம்படும். குளிர்காற்று உள்ளே வர ஜன்னல்கள் மேற்குநோக்கி இருக்க வேண்டும்." வடக்கே நீர்க்குழாய்களும், தெற்கே சமையல் அறைகளும் இருக்க வேண்டும். இதைக்கேட்ட மன்னன், தோமாவின் தொழில்நுட்ப அறிவைக் கண்டு திகைத்து விட்டான். "நான் தோமாவில் ஒரு அரசனையே மயங்கவைக்கும் நல்ல தச்சனாகவும், கட்டடக் கலைஞனாகவும் காண்கிறேன்" என்றும் கூறினான் மன்னன்.

மன்னன் தோமாவை விட்டு அகலுமுன், பல வெள்ளி மற்றும் தங்கக் காசுகளை தோமாவிடம் கொடுத்துவிட்டுச் சென்றான். கட்டிடப் பொருட்களை வாங்குவதற்கு அதைப் பயன்படுத்துமாறும், தேவையெனில்

பிறகு மீதிப்பணம் பெற்றுக் கொள்ளலாம் என்றும் கூறலானான்.

தோமாவோ அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டு அருகிலுள்ள நகர்கள் மற்றும் கிராமப்புறங்களுக்குச் சென்று அங்குள்ள ஏழை, எளியோர்க்கு வழங்கலானார்.

சிறிதுகாலம் கழித்து, மன்னன் கொண்டோபோர் தனது தூதர்களை அனுப்பி, அப்போதைய நிலவரத்தைக் கேட்டுவரச் சொன்னார். தோமாவும், "வேலையெல்லாம் நல்லபடி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது இன்னும் கூரை வேலைமட்டும்தான் பாக்கி" என்றார். அரசன் இதைக்கேட்டு, இன்னும் அதிகமான பணம் அனுப்பினான். **அப்போஸ்தலர் தோமாவும்** பணத்தைப் பெற்றுக் கொண்டவுடன் இறைவனுக்கு நன்றி கூறலானார். "ஆண்டவரே, நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன். **நான் வாழ வேண்டுமென்பதற்காக நீர் இறந்தீர்!** பலபேரை விடுவிப்பதற்காக **என்னை அடிமையாக்கினீர்**" என்றெல்லாம் செபித்தார் தோமா.

மீண்டும் தோமா அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு ஏழைகள், எளியோர்கள், அனாதைகள், விதவைகள் ஆகியோரை சந்தித்து உதவிகள் செய்து வந்தார். அவர்களிடம், "இதோ பாருங்கள், இறைவன் உங்களுக்கு கொடுத்த பணம், இறைவன்தான் அனாதைகளுக்கு அடைக்கலமும், விதவைகளுக்கு ஆதரவும், கைவிடப்பட்டோர்க்கு உதவியாகவும் இருக்கிறார்" என்றும் கூறலானார் தோமா.

தோமா கட்டிய அரண்மனையைப் பார்ப்பதற்கு மிகுந்த ஆர்வம் கொண்டான். ஆனால், மன்னனின் நண்பர்கள் வந்து அரசனிடம் உண்மையை முறையிடலானார்கள். "இறைவா, நீங்கள் ஒரு ஏமாற்றுக்காரனிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு சென்றுவிட்டீர்கள், அவன் உங்களுக்கு வாக்களித்தபடி அரண்மனை கட்டவே இல்லை. அவன் பணத்தை வைத்து என்ன செய்தான் எனக் கேளுங்கள். அந்த **கட்டிடக் கலைஞர் தோமா கிராமங்கள், நகரங்கள்தோறும் சென்று ஏழைகளுக்குப் பணத்தைக் கொடுத்து விட்டான். அவன் அவர்களுக்கு ஒரு புது கடவுளைப் பற்றி போதிக்கிறான். அவன் நோயாளிகளைக் குணப்படுத்தவும், பேய்களை விரட்டவும் மற்றும் இதர அதிசயமான செயல்களும் செய்கிறான். அவன் ஒரு மந்திரவாதியாக இருப்பானோ?** ஆனால் ஒன்று, அவன் ஏழைகளிடம் மிகுந்த இரக்கம் காண்பிக்கிறான். அவன் எளிமையானாகவும், இரக்கமுள்ளவனாகவும் பக்தி கொண்டவனாகவும் இருப்பதால் நல்ல மனிதனாகவும் இருப்பான் எனத் தெரிகிறது. அவன் போதிக்கும் கடவுளின் அப்போஸ்தலனாகவும் இருக்கிறான். அவன் அடிக்கடி உபவாசம் இருப்பான், தொடர்ந்து ஜெபிக்கிறான். அவன் ரொட்டி மற்றும் உப்பு மட்டுமே உண்கிறான். வெயில் காலம், குளிர்காலம் இரண்டிலும் ஒரே உடைதான் உடுத்துகிறான். மற்றவர்களிடமிருந்து பணம்

வாங்குவதில்லை. ஆனால், தனக்கு கிடைத்த எல்லாவற்றையும் பிறருக்குக் கொடுத்து விடுகிறான்," என்றெல்லாம் சொன்னார்கள்.

இதைக்கேட்ட மன்னன் தலையை ஆட்டி, **சிறிதுநேரம் அமைதியாக இருந்தான்.** பிறகு, கடைசியாக **தோமாவையும் ஹப்பான் வியாபாரியையும்** வரவழைத்தான். "எனக்கு நீங்கள் அரண்மனையைக் கட்டினீர்களா?" எனக் கேட்டான். தோமாவும் "ஆம்" என்றார். "அப்படியானால் நான் அதைப்பார்க்க வேண்டும்," என தோமாவோ "**இப்போது அல்ல, நீங்கள் இறந்த பின் அதைப் பார்ப்பீர்கள்,**" என்றார். இதைக்கேட்ட மன்னன் சினந்து, **தோமாவையும் ஹப்பானையும் சிறையில் அடைக்க** ஆணையிட்டான்.

தோமாவோ தைரியமாகவே சிறை சென்றார். ஹப்பான் வியாபாரியிடம், "பயப்படாதே இயேசு கிறிஸ்துவை நம்பு, எல்லாம் நல்லபடியாகும்," என்றார். ஆனால், அரசனோ **தோமாவையும் ஹப்பானையும் உயிரோடு தோல் உரித்து எரித்துக் கொன்றுவிட வேண்டும்** என எண்ணியிருந்தான்.

அன்று இரவே, மன்னன் கொண்டோபோரின் தம்பி 'காத்' (Gad) என்பவன் உடல் நோயுற்று இறக்கும் தருவாயில் இருந்தான். தனது சகோதரர் மன்னனிடம் பேசிக்கொண்டே இருக்கையில் காத் இறந்தான். மன்னன் காத் இறந்ததைக் கேட்டு மிகுந்த துக்கமுற்றான். ஏனெனில், அவன் தன் தம்பியின் மேல் மிகுந்த பாசம் கொண்டிருந்தான். காத்-தின் உடல் பெரிய கல்லறை ஒன்றில் அடக்கம் செய்யப்பட வேண்டும் என விரும்பினான், அடக்கமும் செய்தான்.

இதனிடையே காத்-தின் ஆன்மா மேலே செல்ல, வானதூதர்கள் மிக அருமையான அரண்மனையை காத்துக்குக் காண்பித்தனர். அவ்வரண்மனையில் பல அறைகளும் இருந்தன. காத்தருகே சென்று, "இந்த அரண்மனையில் வாழ்வதற்கு கீழே உள்ள சிறு அறையேனும் எனக்கு ஒதுக்கிக் கொடுங்கள்" என வேண்டினார். வானதூதர், "உன்னால் அங்குவாழ இயலாது," எனக் கூறினார். ஏன்? என காத் கேட்க, "இந்த அரண்மனை உங்கள் சகோதர மன்னன் கொண்டோபோருக்காக தோமா கிறிஸ்தவரால் கட்டப்பட்டது" என்று வானதூதர் கூறினார். உடனே காத் தூதரிடம், "நான் மீண்டும் சகோதரரிடத்தில் செல்கிறேன், இந்த அரண்மனைபற்றி சொல்கிறேன். என் சகோதரரும் அதை உரிமையாக்கிக் கொள்ளலாம். அந்தக் **கடவுளின் அப்போஸ்தலருக்கும் தீங்கு இழைக்காமல் இருக்கலாம்,"** **எனச் சொல்ல, வானவர்கள் காத்தின் ஆன்மாவை மீண்டும் பூமிக்கேக் கொண்டு வந்தனர்.**

இங்கு பூமியில், இறந்தோர்க்கான உடையை காத்துக்கு அணிவிக்க எண்ணுகையில், காத் மீண்டும் உயிர்பெற்று எழுந்தார். எல்லோரும்

அதிசயித்தார்கள். மன்னன் கொண்டோபோர் அதிசயித்தால் ஒரு வார்த்தைகூட பேசவில்லை. காத்தே மீண்டும் பேசினார். "என் சகோதரரே! நீர் எம்மை விரும்புகிறீர் என நான் அறிவேன். நான் கேட்டால் அரசின் பாதியைக் கூட கொடுப்பீர், நான் என் விருப்பத்தை உம்மிடம் தெரிவிக்கிறேன், நீர் மோட்சத்தில் உள்ள அந்த அரண்மனையை எனக்குக் கொடுங்கள்" என்றார் காத். அரசன் மீண்டும் அதிர்ச்சியுடன், "மோட்சத்தில் நீர் எந்த அரண்மனையைப் பார்த்தீர்," என்று கேட்க, காத்தும், "அந்த தோமா எனும் கிறிஸ்தவரால் கட்டப்பட்ட அரண்மனைதான். ஆனால், நீரோ தோமாவை சிறையில் அடைத்திருக்கிறீரே," என்றான். பிறகு நடந்தவற்றை விவரித்தான்.

முடிவில், அரசன் எல்லாவற்றையும் புரிந்துகொண்டான். ஆக, தான் கொடுத்தப் பணத்தை வைத்து தோமா விண்ணகத்தில் அல்லவா அரண்மனை கட்டி இருக்கிறார். தோமாவை அழைத்தான் மன்னன். தோமாவின் காலில் விழுந்து, தான் செய்த செயலுக்கு மன்னிப்பு வேண்டினான். அவன் தோமாவிடம் "இறை ஊழியரே எனக்காக செபிக்கவும், நான் செய்த செயலுக்கு மன்னிப்பு வேண்டுகிறேன். நீர் விண்ணகத்தில் எனக்காகக் கட்டிய அரண்மனைக்குள் நுழைய எனக்கு வழிசெய்யும், நீர் போதிக்கும் இறைவனின் ஊழியராக என்னை ஏற்றுக்கொள்ளும்" எனவும் வேண்டினான். ஆக, மன்னன் கொண்டோபோரும், காத்தும் இயேசுகிறிஸ்துவின் சீடர்களாக மாறினார்கள்.

தோமாவும் இதைப்பார்த்து மனம்மகிழ்ந்தார். இறைவனிடம் செபமும் செய்தார்.

"ஆண்டவர் இயேசுவே, நான் உம்மைப் புகழ்கின்றேன். உண்மையை இம்மக்களுக்குக் காண்பித்தீர். நீரே உண்மையின் ஆண்டவர். உமக்கு மட்டுமே எல்லாம் தெரியும். நீரே எல்லோர்க்கும் ஆறுதலாகவும் விளங்குகிறீர். மனிதர்கள் தமது தவறால் உம்மை கண்டித்தாலும், நீர் மன்னித்தும் மறந்து விடுகிறீர். ஆண்டவரே, இந்த அரசனையும் அவரது சகோதரரையும் நீர் ஏற்றுக்கொள்ளும், உமது துவைத்தலால் அவர்களைத் தூய்மைப்படுத்தி, எண்ணெயால் தூய்மையாக்கும். உமது வற்றாத நீர்வீழ்ச்சியிலிருந்து அவர்களுக்குப் பானம் தரும். இப்போது அவர்கள் உமக்காக கஷ்டப்படவும், வெறுக்கப்படவும், ஏன் உயிர் கொடுக்கவுமே தயாராக இருக்கிறார்கள். நீர் எமது ஆண்டவர், உண்மையான ஆயர். நாங்கள் உம்மை மட்டுமே நம்பி, உம்மிடமிருந்தே மீட்பை அடைய கிருபை செய்தருளும்."

ஏழு நாட்களுக்குப் பிறகு, தோமா இருவருக்கு ஞானஸ்நானமும், புதுநன்மையும் கொடுத்தார். எண்ணெயும் பூசினார். அரசன் மற்றும் காத்தோடு, ஏராளமான குடிமக்களும் திருமுழுக்கு பெற்றார்கள்.

காந்தாராவிலுள்ள திருச்சபை

தோமாவின் பணி தட்சசீல நகரில் மட்டுமல்ல, இதர ஊர்கள், கிராமங்களுக்கும் பரவியது. பலதரப்பட்ட மக்கள் நல்ல பயனை அடைந்தனர்.

மிகப்பெரிய மக்கட் கூட்டத்திற்கு முன்பெல்லாம் (தானாக சேர்ந்த கூட்டம்தான்) தோமா இயேசுவின் போதனைகளை எடுத்துச் சொல்லி மக்களை ஈர்த்து வந்தார். ஒருமுறை மக்கள்முன் இவ்வாறு உரையாடினார். மக்கள் பலர் அவர் பேச்சைக் கேட்க, தங்களது குதிகாலை உயர்த்தி, உயர்த்தி அவரை ஆர்வமுடன் உற்றுநோக்குவதாக அறியப்படுகிறது.

"கிறிஸ்துவை நம்புபவர்களே! நீங்கள் சற்று உயர்த்தினால்தான் என்னை உங்களால் பார்க்க முடிகிறது. நான் உங்களைப் போன்றவன்தான். என்னைப் பார்ப்பதற்கே உங்களை உயர்த்துவீர்களானால், மிக அதிக உயரத்தில் **இறைவனைப் பார்ப்பதற்கு நீங்கள் இன்னும் உயர்த்தவே வேண்டும்.** தேவையற்ற செயல்கள் மற்றும் **விருப்பமற்ற - நியாயமற்ற ஆசைகள், உலக செல்வங்கள், மிக குறுகிய காலத்தில் அழிந்துபோகும்** அழகுப் பொருட்கள் ஆகியவற்றை ஒதுக்கி வைத்துவிட்டு, இறைவனிடமே நீங்கள் திரும்ப வேண்டும். நீங்கள் நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கைக் கொள்ள வேண்டும். அவர் உங்களுக்குக் கடினமான கடற் பயணங்களுக்குத் துறைமுகம் போலவும், கடினமான மலைப்பாதையில் ஓர் துணை யாத்திரீகர் போலவும், வறண்ட பிரதேசத்தில் ஓர் நீர்ச்சுனை போலவும், பஞ்சம் இருக்கும் பகுதியில் உணவுக்கூடம் போலவும், உங்கள் ஆன்மாவை இளைப்பாற்றுபவராகவும், உங்கள் உடல்நோய்களைத் தீர்க்கும் மருத்துவராகவும் விளங்குவார் - எனப் போதித்தார் தோமா.

இதைக்கேட்ட மக்கள் இயேசுவின் மேல் நம்பிக்கை வைத்து உள்ளம் குத்துண்டவர்களாய் அழ ஆரம்பித்தார்கள். தோமாவிடம் "ஓ, கடவுளின் மனிதரே, நாங்கள் இறைவனிடம் நம்பிக்கை வைத்ததே இல்லை. எங்கள் செயல்மூலம், சிந்தனை மூலம் அவரை நிந்தித்தோமே. ஆனால், இறைவன் எங்கள் மேல் இரக்கம் கொண்டு, எங்களுடைய முந்தைய தவறுகள், பாவங்கள் போன்றவற்றை மறந்து, எங்களை அவருடைய ஊழியர்களாக சேர்த்துக் கொள்வாரா," என்றெல்லாம் கேட்க ஆரம்பித்தார்கள். தோமாவோ அவர்களுக்கு ஆறுதல் அளித்து, இறைவன் பக்கம் திரும்ப ஏற்பாடுகள் செய்தார்.

தோமா இவ்வாறெல்லாம் பேசி, இயேசுவின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு பற்றிய செய்திகளை எடுத்துச் சொல்லி மக்களை நல்வழிப்படுத்த முயன்றார்.

தோமாவின் புகழ் பட்டிதொட்டி எல்லாம் பரவ ஆரம்பித்தது. மக்கள் பலர் அவர்முன் கூடினார்கள். நோயாளிகள் நலம் பெற்றார்கள். பேய்களால் பாதிக்கப்பட்டோர் குணம் பெற்றார்கள். அவர் போகும் வழியிலேயே அவர் பார்க்கும் வண்ணம் கூடி நலம் பெற்றார்கள். குணம் பெற்றவர் எல்லோரும் இறைவனைப் புகழவும் செய்தார்கள். "இயேசுவே! உமக்கே புகழும், மாட்சிமையும் உண்டாகுக. ஏனெனில், நீர் உமது **ஊழியனும் அப்போஸ்தலருமான தோமாவை எங்களுக்கு அனுப்பியிருக்கிறீர்.** இப்போது நாங்கள் பெருமகிழ்வுடன் உம்மை உமது மந்தையில் சேரும் ஆடுகளாக மாற வேண்டுதல் செய்கிறோம். உங்களுடைய பழைய பாவங்களை எல்லாம் பொறுத்து எங்களை உம்மிடம் சேர்த்துக்கொள்ளும்," என்று பாடினார்கள்.

தோமாவும் இறைவனைப் புகழ்ந்தார். "தந்தையின் ஒரே மகனுக்கு மகிமை உண்டாகுக. உம்மை அடைக்கலம் மற்றும் உதவியாகவே நாங்கள் எண்ணுகிறோம், எமக்கு உம்மால் தரப்பட்ட அருங்கொடைகளுக்கும் நன்றியை நவில்கிறோம்."

இவ்வாறாக தோமா, கொண்டோபோர் அரசின் மக்களுக்கும் போதிக்கலானார். அவர் தமது குழுவிற்கு மிக அதிகமான ஆத்துமங்களைக் கொண்டுவந்து சேர்த்தார். தடசசீலம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பல கிறிஸ்தவ சமூகங்கள் உருவாக ஆரம்பித்தன. அத்தகைய சமூகங்களில் யூதர்கள், கிரேக்கர்கள், பெர்சியர்கள், பார்த்தியர்கள், புத்தமதத்தவர்கள், ஜெயினர்கள், இந்துக்கள் ஆகியோரும் இருந்தனர்.

இயேசுவின் அப்போஸ்தலர்கள் எங்கு எல்லாம் சென்றார்களோ, அங்கு ஒரு திருச்சபையை உருவாக்கி விட்டுத்தான் போனார்கள். அதற்காக சில உதவியாளர்களையும், ஆர்வமுள்ளோரையும் சேர்த்துக் கொள்ளவே செய்தார்கள். அவர்களை மறைபொருள் பற்றிய அறிவிலும் இயேசுவின் போதனைகள் பற்றிய அறிவிலும் நன்கு பழக்கி, மெருகேற்றினார்கள். ஞானஸ்நானம் கொடுப்பது, போதனைகள் செய்வது, சபையை வழிநடத்துவது, எண்ணெய் பூசுவது போன்றவற்றில் அவர்களுக்கு நன்கு பயிற்சியும் கொடுத்தார்கள். அப்போஸ்தலர்கள் அச்சபை நன்கு வேரூன்றியபின், வளர்ந்தபின் தமக்கு நன்கு தெரிந்த ஒருவரை ஆயராக உருவாக்கி, அவர்களுக்கே முழு அதிகாரமும் கொடுத்துவிட்டு, வேறு ஊர்களுக்குச் செல்லலானார்கள். "**நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள்**" என்று இயேசு கூறியதை நினைவு கூர்ந்தார்கள்.

தோமா தட்சசீல நகரைவிட்டு செல்கிறார்

பல வருடங்கள் உழைத்தபின், தோமா தட்சசீல நகரைவிட்டு வேறு இடம் செல்ல நினைத்தார்.

'புனித தோமாவின் பணி' என்று நூலில் கீழ்க்காணும் செய்தி ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது.

அப்போஸ்தலர் தோமா நற்செய்தி போதித்துக் கொண்டிருக்கும்போது, தென்னிந்திய அரசனான 'மாஸ்டாய்' என்பவனிடமிருந்து ஒரு தூதன் புனித தோமாவைக் காண வந்தான். "நான் - இந்தியாவிலேயே செல்வம் அதிகம் வைத்திருக்கும் மன்னன். தாங்கள் எவ்வளவு பரிசுகள் கொடுத்தாலும், வாங்குவதே இல்லையாம். அவ்வாறு வாங்குவதாக இருந்தால், நான் பரிசுகள் பல அனுப்பியிருப்பேன். அதுமட்டுமல்ல, தங்களிடம் உள்ளதையும் தேவையானவர்க்குக் கொடுத்து விடுகிறீர்களாம்." இவ்வாறு கூறினான் தூதன். அத்தோடு, மூன்று வருடங்களுக்கு முன் அம்மன்னனின் மனைவியும், மகளும் பிசாசினால் பாதிக்கப்பட்டதாகவும் கூறினான். அவர்களை தோமாவே வந்து குணப்படுத்துமாறும் வேண்டினான். இதைக்கேட்ட இந்த அப்போஸ்தலர் அவர்கள் மேல் இரக்கம் கொண்டு, "நீங்கள் இயேசு குணமளிப்பார் என நம்புகிறீர்களா? உங்களை முழுவதும் இயேசுவிடம் ஒப்படையுங்கள்," என்று கேட்டார். தூதுவனோ, "அப்படியானால் அந்த இயேசுவை காண்பியுங்கள்" எனக்கூற, தோமாவும், "அக்கண்ணால் அவரைக் காணமுடியாது, ஆனால் மனக்கண்ணால் காணமுடியும்" என்று கூறினார். அதுமட்டுமல்ல, அவர்களைக் குணப்படுத்துவதாக வாக்குறுதியும் அளித்தார்.

பிறகு, தோமா தனது சீடர்களையும், மூப்பர்களையும் உடனுழைப்பாளர்களையும் அழைத்தார். அவருடைய முக்கிய சீடரான தியாக்கோன் சாந்திப்பஸ் (Xanthippus) அப்போது தோமாவுடன் இருந்தார். அவர்கள் எல்லோரையும் ஓரிடத்தில் கூட்டினார். பிறகு, அவர்களுடன் பேசலானார். "சகோதரர்களே, குழந்தைகளே . . . . . இறைவன் மேல் நம்பிக்கைக் கொண்டுள்ள நீங்கள் அவருடைய விசுவாசத்திலும், பற்றிலும் வளர வேண்டும். இயேசுவை நான் போதித்த இயேசுவை, நம்புங்கள். அவரை மறக்காதீர். அப்போதுதான் இயேசு உங்களை மறக்க மாட்டார். நீங்கள் தூங்கிக் கொண்டிருக்கும்போது கூட, அவர் உங்களை கவனித்துக் கொண்டே இருப்பார். நீங்கள் ஆபத்தில் இருந்து, யாரும் உங்களுக்கு உத முன்வராத போது அவர் உங்களுக்கு உதவிகரமாக இருப்பார். நான் உங்களை விட்டு வேறு ஒரு இடம் செல்லலாம் என நினைக்கிறேன். உங்களை நான் இனிமேல் பார்க்கப் போவதில்லை. எனக்கு பதிலாக சாந்திப்பஸ் தியாக்கோன் உங்களுடன் இருப்பார். என்னைப்போலவே அவரும் இயேசுவை போதிப்பார். நானோ, சாந்திப்பஸ் தியாக்கானோ முக்கியம் இல்லை. இயேசுவே முக்கியம். ஆதலால், உங்கள் நம்பிக்கை இறைமகன் இயேசு கிறிஸ்துவின் மேல் இருக்கட்டும்."

இவ்வாறு கூறியபின் தோமா சிலமணி நேரம் ஜெபத்தில் ஈடுபட்டார். அவர் விட்டுச்சென்ற மந்தையைப் பாதுகாக்கும்படி இயேசுவிடம்

மன்றாடினார். பிறகு, தனது நம்பிக்கைக்குரிய சீடரான சாந்திப்பஸ் என்பவரிடம் அலுவலை ஒப்படைத்தார். தோமா அவர்மேல் கைகளை வைத்து, "இறைவனின் சமாதானம் உங்கள் மேல் இருப்பதாக. அவர் எனது பயணத்திலும் துணை இருப்பாராக" என்றும் செபித்தார்.

காந்தாரா திருச்-சபையின் பிந்தைய நிலை

தோமா தட்சசீல நகரை விட்டுச்சென்ற சில ஆண்டுகளிலேயே (கி.பி. 50-ல்) மன்னன் கொண்டோபோர் துரதிஷ்டவசமாக இறந்துவிட்டான். இம்மன்னன் இறந்ததும், 'குஷணர்கள்' (Kushans) (இவர்கள் ஆசியா பகுதியிலுள்ள பழங்குடியினர்) காந்தகார் பகுதியை ஆக்ரமித்தார்கள். இறுதியாக, பார்த்தியா அரசையும் அவர்கள் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்தார்கள். பிறகு தட்சசீல நகரையும் தாக்கினார்கள்.

குஷணர்களின் மூன்றாவது மன்னன் கனிஷ்கர் (Kanishar) என்பவன் பெஷாவரை, தனது அரசின் மையமாக்கினார். தட்சசீல நகரை மீண்டும் புதுப்பொலிவுடன் எழுப்பினான். பல போர்களை நடத்தி, பல்லாண்டுகாலம் ஆட்சி நடத்தினான். ஆனால், அவன் புத்தமதத்தைத் தீவிரமாக பின்பற்றுபவனாக இருந்ததால் பிற இதர மதத்தினரை வெறுத்தான். அனேகமாக, இச்சமயத்தில் திருச்சபையானது அழிந்து போயிருக்கலாம். அங்குள்ள கிறிஸ்தவர்கள் பெர்சியாவிற்கோ, அரேபியாவிற்கோ சென்று அங்குள்ள சபையினருடன் வாழ்ந்திருக்கலாம். ஒருகாலத்தில் முக்கிய சபையாக விளங்கிய தட்சசீல திருச்சபை இப்போது கிறிஸ்தவர் அல்லாத நகரமாக மாறிவிட்டது.

மற்றொரு முக்கியமான அம்சம் என்னவெனில் - இந்தியா, கிரேக்கம், பெர்சியா போன்ற எந்த சரித்திர வல்லுநர்களும் கொண்டொபோர் மன்னனைப் பற்றிக் குறிப்பிடவில்லை. அவருடைய பெயர் 'புனித தோமாவின் பணி' என்ற மறைநூலில் மட்டுமே காணப்படுகிறது. இப்புத்தகத்தை சரித்திர ஆசிரியர்கள் ஓர் புராணக் கதையாகவே நினைத்ததால் அம்மன்னனைப் பற்றி யாரும் பெரிதாக எண்ணவே இல்லை. சென்ற நூற்றாண்டில்தான் பஞ்சாப் பகுதியில் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டபோது சில காசுகள் கிடைத்தன. அக்காசுகளில் கொண்டொபோர் மற்றும் அவர் சகோதரர் காத்தின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. இதற்குப் பிறகு, 'புனித தோமாவின் பணி' அதிமுக்கியத்துவம் பெறலாயிற்று. ஆக, தோமா இந்தியாவில் பணிபுரிந்தார் என்பதையும் அது சரித்திரபூர்வமாகவும் நிரூபித்தது.

1935-ஆம் ஆண்டு தட்சசீல நகரில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகளும் கிடைத்தது. அரசன் கொண்டொபோர் அரண்மனை முன் இருந்த இடத்தில், ஓர் உழவன் ஒரு சிலுவையைக் கண்டெடுத்தான். அச்சிலுவை கருங்கல்லால் ஆக்கப்பட்டு இருந்தது. ஒன்றரை இன்ஞ்

அளவுடைய சிலுவை அனேகமாக உத்தரியம் போல் அக்காலக் கிறிஸ்தவரால் அணியப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

தோமா சொகோட்டிராவிற்கு புறப்படுதல்

தோமா தட்சசீல நகர் கிறிஸ்தவர்களிடம் பிரியா விடை பேசியதைக் கேட்டதும், அந்நகர விசுவாசிகள் கண்ணீர் விட்டனர். முழங்காலிலிருந்து அவரது பாதங்களை வணங்கினர். அவர்களுக்கு இனிமேல் தோமாவைக் காண இயலாது என்ற நினைப்பே மேலோங்கியது. ஆனால் அவர்கள் தோமாவிடம் தங்களது செபம் அவருக்குத் துணையாக இருக்கும் என்று வாக்குறுதி அளித்தார்கள்.

அனேகமாக கி.பி. 51-ஆம் ஆண்டு, தட்சசீல நகரைவிட்டு வெளியேறினார் தோமா. முதலில் தென்னிந்தியாவிற்கு போவதற்குத் தான் நினைத்தார். தென்னிந்தியா போவதற்கு இரு வழிகள் இருந்தன.

முதல்வழி - பஞ்சாபிலிருந்து, மத்திய இந்தியாவிலுள்ள உஜ்ஜெயினி நகருக்கு செல்வது, அங்கிருந்து காம்பே, சோப்பாரா மற்றும் கல்யாண் போன்ற துறைமுகங்களுக்குச் செல்வது. இத்துறைமுகங்களிலிருந்து ஏதேனும் கப்பல் ஒன்றை எடுத்து, அப்படியே **கடல்வழி மலபார்** (அப்போதைய கேரளா) செல்வது. இவ்வழி எளிதாக இருந்தாலும், திருடர் பயமும், அடர்ந்த காடுகள் பயமும், காட்டு விலங்குகள் பயமும் இருந்தன.

மற்றொரு வழியும் உண்டு. தட்சசீல நகரிலிருந்து நாற்பது மைல்கள் சிந்து நதிக்குப் பக்கம் வந்துவிட வேண்டும். அங்கிருந்து 'டாடா' (Tata) துறைமுகம் சென்றுவிடுவது. டாடா துறைமுகம் பகுதியிலிருந்து கடல் மார்க்கமாக மேற்குக் கரையோரமாகவே மலபார் போய்விடுவது. ஆனால் இவ்வழி கடற்கொள்ளை போன்ற தொல்லைகளால் நிறைந்து இருந்தது. அதனால், டாடா துறைமுகத்திலிருந்து சொகோட்டிரா (Socotra) தீவிற்கு சென்றுவிடுவது. அங்கு சிறிதுகாலம் காத்திருந்துவிட்டு, பிறகு மலபார் செல்வது. அனேகமாக சொகோட்டிராவிலிருந்து நாற்பது நாட்களுக்குள் மலபார் சென்று விடலாம்.

இரண்டாவது வழி பிரகாரம் தான் மலபார் போகலாம் என தோமா முடிவெடுத்தார். அதனால், சொகோட்டிரா தீவிற்கே கப்பல் ஏறினார்.

இப்போது சொகோட்டிரா தீவு பற்றி பார்ப்போம்? இத்தீவு 70 மைல் நீளமும், 22 மைல் அகலமும் கொண்டது. செங்கடல் பக்கத்தில் தென்மேற்கு ஏடென் அருகில் இத்தீவு இருக்கிறது. இத்தீவு மத்திய தரைக்கடல் நாடுகளுக்கும் இந்தியாவிற்கும் ஒரு முக்கிய வணிக ஸ்தலமாகவே விளங்கியது. செங்கடல் பகுதியிலிருந்து வரும் கப்பல்களும் சரி, இந்தியாவிலிருந்து வரும் கப்பல்களும் சரி, இத்தீவில்தான் இறங்கி காத்திருந்து, சரக்குகளை வாங்கி-விற்று, பிறகு திசைமாறி செல்லுவார்கள்.

கிறிஸ்துப் பிறப்பதற்கு சில நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே கடல் வாணிகம் இந்தியா மற்றும் மத்திய தரைக்கடல் நாடுகளுக்கிடையே நடைபெற்றுக் கொண்டுதான் இருந்தது. கி.மு. 30-ஆம் ஆண்டு, எகிப்து ரோமை அரசின் மாகாணமாக மாறியபின் சொகோட்டிரா வழி கடல் வாணிகம் மிக எளிதாகப் போனது. இந்தியாவிலிருந்து மியாஸ் ஹார்மோஸ் (Myos Hormos) ஊருக்குக் கடல் போக்குவரத்து அதிகமாகவே இருந்தது. செங்கடல், ஏடென், சொகோட்டிரா, அரேபியாவிலுள்ள துறைமுகங்கள். பிறகு வட மற்றும் தென் இந்தியாவிற்குப் போக்குவரத்து நடைபெறலாயிற்று. கி.பி. 48-ஆம் ஆண்டு, ஹிப்பாலுஸ் என்னும் மாலுமி கடல்வழி மலபாருக்குச் செல்ல ஒரு முக்கியமான வழியைக் கண்டுபிடித்தார். அதாவது, ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில், புயல்காற்று உருவாகி ஒரு குறிப்பிட்ட திசையில் வீசினால், நாற்பதே நாட்களில் சொகோட்டிராவிலிருந்து மலபார் சென்று விடலாம். அக்டோபர், நவம்பர் மாதங்களின்போது புயல்காற்று எதிர் திசையில் வீசும்போது, மலபாரிலிருந்து சொகோட்டிராவிற்கு எளிதில் சென்று விடலாம்.

சொகோட்டிராவிலிருந்து புரோச் (Broach) துறைமுகம், சொபாரா (Sopara) துறைமுகம், கல்யாண் துறைமுகம் (இன்றைய பம்பாய்க்கு அருகில் உள்ளது), பிறகு தெற்கே சென்றால் மலபார் போய்விடலாம். புரோச் துறைமுகத்திலிருந்து ஒட்டகங்கள் மூலமாக உஜ்ஜெயின் மற்றும் இதர இடங்களுக்கும் செல்லலாம். உஜ்ஜெயினிலிருந்து இந்தியாவின், ஏன் ஆசியாவின் எப்பகுதிக்கும் கூட சென்றுவர முடியும்.

மலபாரிலும், (இன்றைய கேரளா) முக்கிய துறைமுகங்கள் பல இருந்தன. நவுரா, முசிறிஸ் மற்றும் நெல்கிண்டா ஆகியவை அவற்றுள் சில. சரக்குக் கப்பல்கள் மலபாரிலிருந்து மிளகு, கிராம்பு, யூக்கலிப்டஸ் போன்ற வாசனைத் திரவியங்களையும் கொண்டு சென்றன. மஸ்லின் துணி (Muslin Cloth) யானது மஸ்லிபாட்டம் மற்றும் டாக்காவிலிருந்தும், பட்டு சீனாவிலிருந்தும், விலையுயர்ந்த கற்கள் இதர பகுதிகளிலிருந்தும் சரக்குக் கப்பல்கள் மூலமாக மேற்கு நோக்கி சென்றன. ரோமையர்கள் அச்சரக்குகளை வாங்கி தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்களை அவற்றுக்குப் பதிலாக கொடுப்பார்கள். நிரந்தர குடியிருப்புகளையும் (Settlement or colonies) ரோமையர்கள் இந்தியாவின் சில பகுதிகளான மலபாரிலும், மதுரையிலும், தொண்டியிலும் வைத்திருந்ததாகவும் தெரிகிறது. சமீபத்தில், முசிறி பகுதியில் ஒரு ரோமர் கோவில் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதும் இதற்கு சான்று. ஆனால், இத்தகைய போக்குவரத்து கி.பி. 211-217 ஆண்டுவாக்கில், காரகலா (Caracalle) மன்னனால் முடிவிற்குக் கொண்டு வரப்பட்டது.

ஆக, தோமாவின் காலத்தில் பாலஸ்தீனாவிலிருந்து இந்தியா வருவதற்கு அப்படியொன்றும் சிரமம் எல்லாம் இருக்கவில்லை. 19-ஆம்

நூற்றாண்டில் எப்படி கடல் போக்குவரத்து இருந்ததோ, அதைப்போல தான் முதல் நூற்றாண்டிலும் இருந்தது.

சொகோட்டிராவில் தோமா

தோமையார் அப்போஸ்தலர் சொகோட்டிராவை அடைந்ததும், அங்கும் பலதரப்பட்ட மக்களை சந்திக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. மாலுமிகள் மற்றும் வியாபாரிகள் பல நாடுகளிலிருந்தும் வந்திருப்பதைப் பார்த்தார். இந்தியா, அரேபியா, ஆப்பிரிக்கா, எகிப்து, சிரியா, கிரேக்க நாடு, பாலஸ்தீனா, ரோம் போன்ற தேசங்களிலிருந்து இவர்கள் வந்திருப்பதைப் பார்த்தார். அங்கு தமது தாய்மொழியான அராமியக் மொழி பேசுவோரையும் பார்த்தார்.

சொகோட்டிராவிலே சிலகாலம் காத்திருக்க வேண்டிய கட்டாயம் அவருக்கு இருந்தது. அக்காலத்தையும் வீணாக்க விரும்பாமல் இயேசுவின் போதனைகளை பரப்பலாம் என எண்ண ஆரம்பித்தார். முதலில் மாலுமிகளிடம்தான் போதித்தார். அவர்களுள் சிலர் எகிப்திலிருந்த அலெக்சாந்திரியா பகுதியிலிருந்து வந்திருப்பதை அறிந்தார். அவர்களும், இயேசுவின் நற்செய்தியைப் பற்றிக் கேள்விப்பட்டதாகக் கூறினார்கள். தோமாவும் அவர்களிடம் இதைப்பற்றி கேட்க, நற்செய்தியாளர் மாற்கு மூலமாக (இரண்டாவது நற்செய்தி நூல் எழுதியவர்தான்) இயேசுவைப் பற்றி அறிந்ததாகக் கூறினார்கள். ஜான் மாற்கு என்பவர் அப்போஸ்தலர் பேதுருவால் மனமாற்றம் செய்யப்பட்டவர். சிறிதுகாலம் பவுல் மற்றும் பர்னபாவுடனும் நற்செய்தி பயணம் செய்த அவர், பிறகு கி.பி. 45-ஆம் ஆண்டுவாக்கில் அலெக்சாந்திரியாவில் நற்செய்தி போதித்தார், பலரையும் மனமாற்றினார். அவ்வாறு மனமாறிய சிலரைத்தான் தோமாவும் சொகோட்டிராவில் சந்திக்கும் வாய்ப்பு பெற்றார்.

அக்கிறிஸ்தவர்களிடம் நன்கு பழகிய தோமா, அவர்களுள் சிலரைத் தமது உதவியாளர்கள் ஆக்கிக் கொண்டார். சிலரை தியாக்கோன்களாகவும், குருக்களாகவும் திருநிலைப்படுத்தி ஒருவரை ஆயராகவும் அர்ச்சித்து, பிறகுதான் அத்தீவை விட்டுக் கிளம்பினார் தோமா.

சொகோட்டிரா சபையின் பிந்தைய நிலை

தோமா கிளம்பியபின், சொகோட்டிரா சபையானது ஏறத்தாழ 1600 வருடங்கள் வாழ்ந்தது என்பது மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியே.

பல்வேறு காலகட்டங்களில் சொகோட்டிரா தீவில் கிறிஸ்தவ மக்கள் வாழ்ந்திருந்தனர் என்பதற்கு பல சான்றுகள் இருக்கின்றன.

தியோபிலஸ் இந்தியன் எனும் இளைஞன் ஒருவன் கி.பி. நான்காம் நூற்றாண்டு இந்தியா பக்கத்திலுள்ள ஓர் தீவிலிருந்து கான்ஸ்டான்டிநோபிள் எனும் நகருக்கு, கான்ஸ்டன்டின் எனும் ரோமப் பேரரசைக் காண அனுப்பப்பட்டார். அவ்விளைஞன் சென்ற தீவு - அனேகமாக **டியு** (Diu)-வாக இருக்கலாம் என ஒரு சாரரும் மாலத்தீவாக இருக்கலாம் என வேறு சிலரும், சொகோட்டிராவாக இருக்கலாம் (டியஸ்கோரிஸ் என்பது சொகோட்டிராவின் கிரேக்கப் பெயர்) என மற்றும் சிலரும் நினைக்கின்றனர். மன்னன் அவ்விளைஞனை கல்வியில் வளர்த்தார். பிற்காலத்தில், அவ்விளைஞன் ஆயராக திருநிலைப்படுத்தப் பட்டு அரேபியாவிற்கு மறைபோதகராக அனுப்பப்பட்டான். இந்த தியோபிலஸ் **கி.பி. 350**-ஆம் ஆண்டு தெற்கு அரேபியாவிற்கு வந்து நற்செய்தி போதித்து, மூன்று சபைகளை ஸ்தாபித்தார். தாபாரன், ஏடென் மற்றும் ஹெர்முஸ் என்ற இடங்களில் மூன்று சபைகளை ஸ்தாபனம் செய்தார். பிறகு, அவர் சொகோட்டிரா சென்று, அங்கு ஒரு பெரிய கிறிஸ்தவ சமூகம் இருப்பதை அறிந்து கொண்டார். அங்கிருந்து மலபார் சென்று, பிறகு அபிசிரியாவிற்கும் போய், **கி.பி. 365**-ஆம் ஆண்டு மரணமடைந்தார். இங்கு குறிப்பிட வேண்டியது என்னவெனில் - சொகோட்டிராவில் கிறிஸ்தவ சமூகம் நான்காம் நூற்றாண்டில் இருந்தது என்பதாகும்.

கி.பி. 410-ஆம் ஆண்டு, சொகோட்டிரா கிறிஸ்தவர்கள் ஓர் ஆயரின் கீழ் இருந்ததைத் தெரிந்துகொள்ள முடிகிறது. கி.பி. ஆறாம் நூற்றாண்டில் கோஸ்மாஸ் இன்டிகோபிளேஸ்டிஸ் எனும் யாத்ரீகர் சொகோட்டிரா சபையைப் பற்றி எழுதியிருக்கிறார். கி.பி. 9-ஆம் நூற்றாண்டில், ஓர் அராபிய யாத்ரீகர், சொகோட்டிரா சபையினர் சிரியன் மொழியை பயன்படுத்தியதாக எழுதியிருக்கிறார்.

உலகப் புகழ்பெற்ற யாத்ரீகர் மார்க்கோ போலோ கி.பி. **1293**-ஆம் ஆண்டு சீனா மற்றும் இந்தியாவிலிருந்து திரும்பிய பின் சொகோட்டிராவிற்கு வந்தார். அங்கு அவர் அச்சபையைப் பற்றிக் குறிப்பிடும்போது, அச்சபையானது **நெஸ்டோரியன்** கிறிஸ்தவர்கள் என அழைக்கப்பட்டதாகவும், பாக்தாத் மேற்றிராசனத்தின் கீழ் இயங்கி வந்ததாகவும் குறிப்பிடுகிறார்.

கி.பி. **1500** வருடங்கள் கழித்து, இயேசுசபை குருவான புனித பிரான்சிஸ் சவேரியார் இந்தியா வருவதற்கு முன் சொகோட்டிரா தீவிற்கு வருகை புரிந்தார். அங்குள்ள கிறிஸ்தவர்களிடம் நன்கு பழகிய புனிதர், தமது சபை ஸ்தாபகரான புனித லொயொலா. . . இஞ்ஞாசியாருக்கு செப்டம்பர் 18, 1542 ஆம் ஆண்டு கோவாவிலிருந்து சொகோட்டிரா சபைக் கிறிஸ்தவர்கள் பற்றி ஓர் கடிதம் எழுதினார்.

அக்கடிதத்தில் கீழ்க்காணும் விவரங்கள் நமக்குத் தெரிய வருகின்றன.

- சொகோட்டிரா தீவானது ஏறக்குறைய 100 மைல்கள் சுற்றளவு கொண்டது. இங்கு நெல்லோ, மக்காச்சோளமோ, திராட்சையோ வேறு எந்த பயிரும் கிடையாது. ஆனால் பேரிச்சம்பழமும், கால்நடைகளும் அதிகம் காணப்பட்டது. அவர்கள் தமது உணவாக பேரிச்சம் பழத்தினாலான ரொட்டியும், பாலும், மாட்டு இறைச்சி மட்டுமே உட்கொண்டார்கள்.

- இங்குள்ள கிறிஸ்தவர்களுக்கு எழுத, படிக்கத் தெரியவில்லை. ஒவ்வொரு கிராமத்திலும் குருசடிகளும், அதில் விளக்கு மற்றும் சிலுவை காணப்படுகின்றன. அங்குள்ள மூப்பர்கள் இவர்களை வழிநடத்துகிறார். நான்குமுறை கோவிலுக்கு (குருசடிக்கு) இவர்கள் செல்வார்கள் - ஒரு இரவு, காலை, மதியம், மாலை போன்ற நேரங்களில்.

- அவர்கள் 'அப்போஸ்தலர் புனித தோமா' மீது அதிக பக்தியை வைத்திருக்கிறார்கள். அவர்களின் மூதாதையர் தோமாவால் மனமாற்றப்பட்டவர்கள் என்றும் நம்புகிறார்கள்.

- அவர்களுக்கு 'ஞானஸ்நானம்' பற்றி ஒன்றுமே தெரியவில்லை. அவர்களுக்கும், குழந்தைகளுக்கும் சவேரியாரே ஞானஸ்நானம் செய்ய வேண்டியிருந்தது.

- அதிக காலம் அங்கு இருக்க சவேரியார் விரும்பினார். துருக்கி தேசத்தவர் அத்தீவை கைப்பற்றுவர் என்ற அச்சம் இருந்ததால், சவேரியார் அங்கு இருந்து இந்தியா போகுமாறு வற்புறுத்தப்பட்டார்.

புனித பிரான்சிஸ் சவேரியார் காலத்திற்குப் பின், சொகோட்டிரா தீவில் கிறிஸ்தவம் மெல்ல மெல்ல உயிர் இழக்கலாயிற்று.

கி.பி. 1680-ஆம் ஆண்டு வின்சென்சோ மரியா எனும் கார்மலெட் துறவி ஒருவர் இத்தீவிற்கு வருகை புரிந்தார். அவர் தமது எழுத்துக்களில், சொகோட்டிரா தீவில் கிறிஸ்தவம் அருகி வருவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

முஸ்லிம்கள் சொகோட்டிராவை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தபின், கிறிஸ்தவம் எவ்வித சங்கடங்களின்றி முழுவதுமாக வேரோடு சாய்ந்தது. இன்றும், அத்தீவில் முஸ்லிம் சகோதரர்களே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

4

மலபாரில் தோமா

- *தோமா மலபார் செல்லுதல்*
- *திராவிட நாடு*
- *தோமா மலபாரில் போதனை*
- *திருவிதாங்கோட்டில் தோமா*
- *தோமாவின் நிருபங்கள்*
- *புனித தோமா கிறிஸ்தவர்கள்*

தோமா மலபார் செல்லுதல்

ஒரு குறிப்பிட்ட நாள் வந்தது. தோமா சொகோட்டிரா தீவினரை விட்டு கிளம்பக்கூடிய சூழலும் வந்தது. கப்பல்கள் மலபார் பகுதிக்கு (அதாவது கேரளா), செல்வதற்கு தயாராக இருந்தன. உணவு, தண்ணீர் போன்றவை எல்லாம் கப்பல் மாலுமிகளுக்கும், பயணிகளுக்கும் சேமித்து வைக்கப்பட்டு விட்டன. சில காவற் சேவகர்களும் கடற்கொள்ளையர்களை எதிர்த்துப் போரிடுவதற்கு தயாராக இருந்து கப்பல்களில் ஏறத் தயாரானார்கள்.

தோமாவுக்கு மிகவும் நெருக்கமான சில நபர்களும், குடும்பங்களும் அவரை வழியனுப்ப கப்பல் வரை வந்தனர். தோமாவும் தமது மக்களுக்காக செபிப்பதாகவும், இந்தியாவிலிருந்து எழுதுவதாகவும், முடிந்தால் திரும்பி வருவதாகவும் வாக்குறுதி அளித்தார். பிறகு அவர்களுக்கு ஆசீர் அளித்துவிட்டு, சொகோட்டிராவை விட்டுக் கிளம்பினார் தோமா.

நாற்பது நாட்கள் கடற்பயணத்திற்குப் பின், கப்பல் மலபார் பகுதிக்கு வந்தடைந்தது. முதலில், அவர் மலங்கரா எனும் தீவிற்கு வந்து (பொன்னனி நதியோரம் இது இருக்கிறது), பிறகுதான் முசிறிஸ் (Musiris) எனும் துறைமுகத்திற்கு வருகை புரிந்தார். மலங்கராவிலிருந்து இரு மைல் தூரம் அமைந்துள்ள இத்துறைமுக நகரம் அக்காலத்தில் மிகப்பெரிய துறைமுகமாக விளங்கியது. இத்துறைமுகம், மலபார் பகுதிக்கு மட்டும் முக்கிய துறைமுக நகரமாக இல்லாமல், இந்தியாவின் மேற்கு கடற்கரையிலேயும் மிக முக்கிய துறைமுக நகரமாகத் திகழ்ந்தது. கி.பி. 60-ஆம் ஆண்டு, ஒரு கிரேக்க வியாபாரி இத்துறைமுகத்திற்கு வருகை புரிந்தார் (அவரது பெயர் தெரியவில்லை). அவர் இந்தியாவிலுள்ள முக்கிய நகர்களைப் பற்றியெல்லாம் விவரிக்கிறார். முசிறிஸ் துறைமுகம் பற்றிக் கூறும்போது, “அவ்வூரில் நிறைய கப்பல்கள் காணப்பட்டன. அவை அரேபியாவிற்கும் கிரேக்க நாட்டிற்கும் செல்லத் தயாராக இருந்தன” என்கிறார். இதே முசிறிஸ் துறைமுகம், கிரங்கனூர் என்றும் கொடங்கல்லூர் என்றும் அழைக்கப்பட்டது.

திராவிட நாடு

தோமா மலபார் தேசத்தில் ஆற்றிய அரும்பெரும் பணிகளை பற்றிப் பார்க்கும் முன்பு அவர் காலத்திய திராவிட நாடு எப்படி இருந்தது என்பது பற்றி தெரிந்து கொள்வது நலம்.

இந்தியாவின் ஒரு பகுதியான மலபார் தேசம், உலகத்திலுள்ள மிக முக்கியமான நாடுகளுடன் வாணிபத்தொடர்பு வைத்திருந்ததால், செல்வச் செழிப்பில் திளைத்துக் கொண்டிருந்தது என்பதே நிஜம். தென்னிந்தியா

மூன்று அரசர்களால் ஆளப்பட்டிருந்தது. அவர்கள் சோழ, பாண்டிய மற்றும் சேரர் (அதாவது கேரளா). அவ்வரசுகளும் செல்வச் செழிப்பில் திளைத்து இருந்தது. அவ்வரசில் மிளகு மற்றும் இதர வாசனைப் பொருட்கள் மிக அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. இதற்கு, மேற்கத்திய நாடுகளில் அதிக வரவேற்பு இருந்தது. யானைகள் வளர்க்கப்பட்டு, அதன் தந்தங்களும் விற்கப்பட்டன. முத்து, பவளம், மாணிக்கம், தங்கம், வெள்ளி போன்ற விலையுயர்ந்த கற்களும் விற்கப்பட்டன. அத்தோடு மஸ்லின் துணிகளும், பட்டு துணிகளும் விற்பனைக்கு இருந்தன. ஒரு பக்கம் அரேபியா, எகிப்து போன்ற தேசங்களுக்கும், மற்றொரு பக்கம் சீனா, மலேயா போன்ற தேசங்களுக்கும் இவை அனுப்பப்பட்டு வந்தன. அவ்வரசின் துறைமுகங்கள் இதனால்தான் மிகப்பெரிய வியாபாரத் தலங்களாக விளங்கியன அத்துறைமுகங்கள். அதுமட்டுமல்லாமல், அவை அன்னிய மண்ணிலிருந்து அதிக பயணத்தை ஈட்டுவதாயும் அமைந்தன.

தோமாவின் காலத்தில் திராவிட நாடானது ஏற்கனவே சொன்னபடி, மூன்று பெரும் அரசுகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தன. முசிறியை தலைநகராகக் கொண்ட சேரநாடு, மதுரையை தலைநகராகக் கொண்ட பாண்டிய நாடு, திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் நகர்களைக் கொண்ட சோழநாடு ஆகியவையே அம்மூன்று அரசுகள். சேரநாடு, இன்றைய கேரள மாநிலத்தையும், கோவை, ஈரோடு போன்ற நகர்களையும், கொச்சி போன்ற ஊர்களையும் உள்ளடக்கியிருந்தது. இன்றைய மதுரை மற்றும் திருநெல்வேலி நகர்களை பாண்டிய நாடும், கொரமண்டல பகுதியை (அதாவது இன்றைய சென்னை) சோழநாடும் உள்ளடக்கியிருந்தது. கி.மு. 20-ஆவது ஆண்டுவாக்கில் பாண்டிய நாடு மிகப்பெரிய அரசாகவும், செசார் அகுஸ்தஸ்க்கு ஒரு தூதுவரையே அனுப்பும் அளவு வசதி கொண்ட அரசாக, செல்வாக்குமிக்க அரசாகவும் திகழ்ந்தது.

ஆதிகாலத்தில் திராவிட நாட்டு மக்கள் மரங்களையும், இயற்கையையும், சில நபர்களின் ஆவியையும் பாம்பையும் வணங்கினார்கள். கி.மு. 7-ஆவது நூற்றாண்டு முதல், ஆரிய மக்களின் வருகைக்குப் பின் திராவிடர்கள் இந்திரன், வருண பகவான், சிவன், விஷ்ணு போன்ற கடவுள்களை வணங்கலானார்கள். முதல் நூற்றாண்டில், கிருஷ்ணனையும் வணங்கி வந்ததாகத் தெரிகிறது.

புத்தமதமும், ஜெயினமும் வளர்ந்தபின், திராவிட நாடுகளிலும் பாதிப்பை ஏற்படுத்தத்தான் செய்தன. கொரமண்டலப் பகுதியில் உள்ள நாகப்பட்டினம், காஞ்சிபுரமும் புத்தமத வழிபாட்டின் முக்கிய மையங்களாக விளங்கின. அதுமட்டுமல்லாமல், அங்கு வாழ்ந்த கிரேக்கர்களும், ரோமர் களும் தாங்களாகவே கடவுள்களை வழிபட்டார்கள். அதுபோலவேதான் எகிப்தியர்கள், சிரியர்கள், அராபியர்கள் மற்றும் யூதர்கள்

யூதர்கள்? இவர்கள் எவ்வாறு இந்தியா வந்தார்கள்?

கி.மு. 1000-ஆவது ஆண்டில் வாழ்ந்த மன்னர் சாலமோன் காலத்திலேயே, அதாவது அவரது கப்பல்கள் இந்தியாவிலிருந்து தங்கம், விலையுயர்ந்த கற்கள், சந்தன மரங்கள், தந்தங்கள், குரங்குகள் மற்றும் மயில்களை வாங்கியதாகத் தெரிகிறது. (2 அரசர் 10 : 10-22). கி.மு. 6-ஆவது நூற்றாண்டில் அரசன் சைரஸ் யூதர்களைப் பல்வேறு நாடுகளிலிருந்து தாயகம் திரும்ப ஆணையிட்டான். சில யூதர் பெருமக்கள் பாலஸ்தீனா போவதற்குப் பதிலாக, தென்னிந்தியாவிற்கு அதுவும் முசிறி துறைமுகம் வழியாக வந்தார்கள். இன்றும், கொச்சியில் யூதர் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

தோமா மலபாரில் போதனை

கி.பி. 52-ஆம் ஆண்டு, அனேகமாக நவம்பர் மாதம் 23-ந் தேதி தோமா தென்னிந்தியா பகுதியில், மலபாரில் அதுவும் முசிறி துறைமுகத்தில் காலடி எடுத்து வைத்தார். மற்றொரு மிகப்பெரிய இடத்திற்கு இறைவன் தன்னைக் கொண்டு வந்ததை எடுத்து தோமா பெரு மகிழ்ச்சி கொண்டார். இறைவனிடம் செபம் செய்து கொண்டார். திராவிட நாட்டிலும் தான் செய்த இறைப்பணி மிகுந்த பலனைக் கொடுக்க வேண்டும் என நினைத்துக் கொண்டார். அதற்கு இறைவனின் துணை முக்கியமல்லவா? "என்னாலன்றி, உங்களால் எந்த காரியமும் ஆற்ற முடியாது," (யோ 15 : 5) என இயேசு சொன்னதை நினைவுகூர்ந்தார்.

முசிறி வந்த தோமா, அங்கும் தமது இனத்தாரான யூதப் பெருமக்கள் இருப்பதை அறிந்தார். யூதங்களின் செபக்கூடம் இருப்பதையும் பார்த்தார். ஓய்வுநாளில் யூதர்கள் கூடி செபம் செய்வார்கள். யாரேனும் புது மனிதர் வந்தாரானால், அவரை செபக்கூடத்திற்குக் கூட்டிச் சென்று பேச அனுமதிப்பார்கள். தோமாவுக்கும் அத்தகைய வாய்ப்பு கிடைக்கவே செய்தது. இத்தகைய நல்லதோர் வாய்ப்பை தோமா நழுவ விடுவாரா? இயேசுவின் பிறப்பு, போதனை, பாடுகள், இறப்பு, உயிர்ப்பு பற்றியெல்லாம் எடுத்துரைத்ததோடு தாம் சந்தேகப்பட்டதையும் சொன்னார். அதோடு, பல இடங்களில் இயேசுவை ஏற்றுக்கொண்ட மக்கள் வாழ்க்கை பற்றியும் கூறினார். இதைக்கேட்ட யூதப் பெருமக்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டதால் முசிறியிலுள்ள பல யூதர்கள் கிறிஸ்தவர்களாக மாறினார்கள்.

இதன்பிறகு தோமா தமது கவனத்தை நம்பூதிரி பிராமணர்களிடத்தில் திருப்பினார். வட இந்தியாவில் மறைபணி ஆற்றும்போதே பிராமணர்களின் மொழியான சமஸ்கிருதம், பழக்க வழக்கம் போன்றவற்றை அறிந்த தோமா இயேசுவின் செய்திகளை அவர்களிடம் கொண்டு செல்வதில் ஆர்வம் கொண்டார். அதில் வெற்றியும் கண்டார் தோமா. அவரால்

மனந்திருப்பப்பட்டவர்களில் "மாலிக்காயில்" (Malikeyil) என்பவர் முக்கியமானவர். அவர் மனமாறியபின், 'தோமா மாலிக்காயில்' எனத் தனது பெயரை மாற்றிக் கொண்டார். அப்பகுதியின் சிற்றரசனையே மனமாற்றியதாகவும் தெரிகிறது. அவ்வரசனுக்கு 'அந்திரேயாஸ்' எனும் பெயரைக் கொடுத்தார். அவ்வரசனின் மருமகனுக்கும் ஞானஸ்நானம் கொடுத்து, அவருக்கு 'கேபா கொல்லம்' எனும் பெயரைக் கொடுத்தார். இவர் தோமாவின் உதவியாளராக இருந்து, குருவாகவும் திருநிலைப்படுத்தப்பட்டார். தோமா சென்றவிடமெல்லாம் இவரும் கூடவே சென்றார். ஏறக்குறைய 3000 நம்பூதிரி குடும்பங்களை தோமா மனமாற்றியதாகச் சொல்லப்படுகிறது.

மலபாரில் தோமா ஏழு சபைகளை நிறுவியதாகக் கூறுகிறார்கள். இதை அங்குள்ள பாரம்பரியமும் உறுதிப்படுத்துகிறது. இவ்வேழு சபைகளும் மலபார் கடற்கரைப் பகுதிகளில் தான் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு இடத்திலும், கற்சிலுவைகள் செய்தார் தோமா. அக்கற் சிலுவை ஊன்றப்பட்ட இடம்தான் அக்காலக் கிறிஸ்தவர் கூடும் இடமாகவும் இருந்தது. அங்குதான் செப வழிபாட்டையும் நடத்தினார்கள். தோமா எல்லாக் கிறிஸ்தவர் கண்முன்னும் கற்சிலுவை காணப்பட வேண்டும் என விரும்பினார். இன்றும், மலபாரில் அதாவது கேரளாவில் கற்சிலுவைகள் சில கோவில்களில் காணப்படுவதை நாம் பார்க்கலாம். அச்சிலுவையோடு இயேசுவைப் பற்றிய சில குறிப்புகளும் காணப்படுகிறது.

மலபாரில் தோமா உருவாக்கிய ஏழு சபைகள் பற்றி சில விவரங்கள் குறிக்கப்பட்டிருக்கிறது. அச்சபைகளாவன :

1. பள்ளூர் : தோமா போதித்த இடங்களில் வடக்கே இருப்பது இவ்வூர் தான். தோமாவின் உதவியாளர் மாலிகாயில் என்பவர், தோமா இங்கு ஒரு வருடம் இருந்ததாகவும், 1050 நபர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததாகவும் கூறுகிறார்.
2. முசிறிஸ் : மலபாரின் முக்கிய கடற்கரை நகரம். இது, அக்கால சேரநாட்டின் தலைநகராகவும் விளங்கியது. கி.பி. 52-ஆம் ஆண்டு நவம்பர் 23-ந் தேதி தோமா வந்து இறங்கிய இடமும் இதுதான். இங்கு பல புதுமைகள் புரிந்து பல குடும்பங்களை மனமாற்றினார் எனத் தெரிகிறது. ஒரு பெரிய சபையையும் ஸ்தாபனம் செய்தார். இதற்கு, கிரங்கனூர் என்ற பெயரும் உண்டு.
3. பரூர் : கொச்சின் மாகாணத்தில் இது ஒரு சிறு நகரம். தற்பொழுது இங்கு இரு சபைகள் இருக்கின்றன. அதில்


பாலையூர்
முசிறிஸ்
கொட்டக்கவு
எர்ணாகுளம்
கொக்கமங்கலம்
புறக்காடு
நிரணம்
காயல்
கொல்லம்
திருவனந்தபுரம்
கன்னியாகுமரி

ஒரு சபையின் பெயர் வடக்கன் பரூர். இச்சபையானது தோமாவினால் தான் உருவாக்கப்பட்டதாக அங்குள்ள பாரம்பரியம் கூறுகிறது.

4. கோட்டமங்கலம் : கொச்சின் நகருக்கு 20 மைல்கள் தென்கிழக்கே இந்நகர் இருக்கிறது. ஒரு வருடம் தோமா இங்கு இருந்ததாகவும், 1600 நபர்களுக்கு ஞானஸ்நானம் அளித்ததாகவும் கூறப்படுகிறது.

5. காயல் : இப்பகுதிதான் கேரளா கடற்கரையிலிருந்து சற்று தொலைவு இருக்கிறது. இது ஒரு சிறு கிராமம். கிராமத்தைச் சுற்றி அடர்ந்த காடுகள் இருக்கிறது. தோமா இவ்வூரில் தங்கி 1100 நபர்களுக்கு திருமுழுக்கு அளித்தார். இன்று, இவ்வூர் இடிபாடுகளாகக் காட்சியளிக்கிறது.

6. நிர்ணம் : கோட்டமங்கலம் ஊரிலிருந்து 30 மைல்கள் தெற்கே இந்நகர் அமைந்திருக்கிறது. இவ்வூரில், ஒரு ஆலயம் 'சீமோன்' எனும் குருவால் கட்டப்பட்டிருக்கிறது. இதைக்கட்டச் சொன்னது தோமாதான்.

7. கொல்லம்: இந்நகரம் அக்காலத்தில் ஒரு முக்கிய துறைமுகமாய் விளங்கியது. தோமா ஆரம்பித்த சபைகளில் இதுவும் முக்கியமானது. இங்கு ஒரு வருடம் தங்கி 1400 நபர்களுக்கு திருமுழுக்கு அளித்துள்ளார்.

நிர்ணம், காயல், கொல்லம் போன்ற பகுதிகள் அனேகமாய் பாண்டிய நாட்டின் பகுதிகளாக தோமாவின் காலத்தில் இருந்திருக்க வேண்டும் என்பது சில வரலாற்று ஆசிரியர்களின் கருத்து. கேரளாவின் தென்பகுதிகள் சில பாண்டிய அரசனின் கட்டுப்பாட்டுக்குள் இருந்திருக்கலாம். கேரளா, மலபாரில் புரக்காடு மற்றும் நக்கிடா ஆகிய ஊர்கள் இருந்தன. இவ்வூரிலிருந்து தான் பாண்டிய நாட்டின் தலைநகராய் விளங்கிய மதுரைக்கு சாலை வசதி செய்யப்பட்டிருக்கலாம். கொல்லம் அக்காலத்தில் பாண்டிய நாட்டின் ஒரு பகுதியாக இருக்கலாம். ஆனால், அக்காலத்தில் கிரேக்க ரோம எழுத்தாளர்கள் இதைப்பற்றி குறிப்பிடவில்லை என்பதால் வேறு பெயரில் இவ்வூர் இருந்திருக்கலாம். மார்க்கோ போலோ, மாரிகோலி, பார்போசா போன்ற எழுத்தாளர்கள், யாத்ரீகர் மூலம் கொல்லம் ஊரில் அப்போஸ்தலர் காலத்திலிருந்தே சபை இருந்ததாகத் தெரிய வருகிறது.

தோமா இந்த ஏழு ஊர்களில் மட்டும் மறைபணி ஆற்றவில்லை. இந்த ஏழு ஊர்களில் மறைபணி ஆற்றி, பல மாதங்கள் தங்கி சபைகள் ஆரம்பித்தது உண்மைதான். அத்தோடு மட்டுமின்றி சிற்சில இடங்களில்

சில சபைகளை உருவாக்கவும் செய்தார். தோமா மாலிக்காயில் என்பவர் தமது கவிதையில் கீழக்காணுமாறு குறிப்பிடுகிறார். தோமா, கொட்டக்காயல் எனும் பகுதியில் பணியாற்றி 1770 நபர்களுக்கு திருமுழுக்கு அளித்ததாகவும், மலயாட்டூர் பகுதியில் இருமாதங்கள் தங்கி 220 நபர்களுக்கு ஞானஸ்நானம் அளித்ததாகவும் டிரக் பாலேஸ்வரம் பகுதியில் ஒரு வருடம் தங்கி 1220 பேர்களுக்கு திருமுழுக்கு அளித்ததாகவும் கூறுகிறார் 'தோமா மாலிக்காயில்' எனும் குரு.

டிரக் பாலேஸ்வரம் ஊரில் அங்குள்ள கிறிஸ்தவர்கள் சில சொல்லப்படாத காரணங்களுக்காக கற்சிலுவையை அவசங்கை செய்து விட்டார்கள். இதைக் கேள்விப்பட்ட தோமா, அவ்வூர்க்கு வருகையில், மிகக் கடுமையாக அவர்களைக் கடிந்து கொண்டார். அக்கற் சிலுவையை அவ்வூரிலிருந்தே எடுத்துவரச் சொல்ல ஆணையிட்டார். அதை நிர்ணம் ஊருக்கும் கொண்டுபோகச் சொல்லியுள்ளார். அக்கற்சிலுவை டிரக் பாலேஸ்வரம் ஊரில் இருப்பதை தோமா விரும்பவே இல்லை.

பாலையூர், பரூர், கொக்கமங்கலம், நிர்ணம் போன்ற பகுதிகளில் தோமா பணியாற்றியதை கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல, அங்குள்ள இந்து மக்களே ஒத்துக் கொள்கிறார்கள். கிரங்கனூர், (அதாவது முசிறிஸ்) பக்கத்தில் பாலையூர் என்று ஒரு கிராமம் உள்ளது. தோமா அவ்வூரில் போதித்துக் கொண்டிருக்கும்போது சில பிராமணர்கள் மனமாறி விட்டார்கள். இந்துக் கோவில் ஒன்றையே ஆலயமாகவும் மாற்றி விட்டார்கள். ஆனால், சில பிராமணர்கள் தமது நம்பிக்கையில் ஆழமாக நின்று மனமாறவில்லை. அவர்கள், அவ்வூரில் இருப்பதையும் சாபமாக நினைத்தார்கள். அதனால், அவ்விடத்திற்கு "சப்பாக்காடு" (சாபமான இடம்) என்று பெயரும் கொடுத்தார்கள். அதுமட்டுமல்ல, "அடுத்த குளியல் வெம்மனாட்டிஸ் தான்" எனும் சபதம் எடுத்தார்கள். பிறகு, வெம்மனாட்டு பகுதிக்கே சென்றுவிட்டார்கள். பாலையூரிலுள்ள 'பூஜைக்கிணறு' இன்றும் காணப்படுகிறது. அது இடிபாடுகளாக உள்ளது.

பாலையூரில் "ஜூடக்கண்ணு" அதாவது "யூதர்மலை" ஒன்று உண்டு. அப்பகுதியில், ஒருகாலத்தில் யூதர்கள் குடியேறி வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. அப்போஸ்தலர் தோமா பிறப்பால் யூதராக விளங்கியதால் பாலையூருக்குச் சென்று யூதர்களிடமும் மறைபணி புரிந்திருக்கிறார்.

கோட்டமங்கலத்தில் பணிபுரியும்போது அங்குள்ள மக்கள் கையில் நீரை எடுத்து மேல்நோக்கி எறிந்து கொள்வதை வழக்கமாகக் கொண்டிருப்பதை தோமா பார்த்தார். பிறகு, தானே சிறிது நேரம் செபித்தார். பிறகு நீரை எடுத்து மேல்நோக்கி எறிந்தார். முத்துக்களை போன்று ஆகாயத்தில் நீர்ச்சொட்டுகள் நின்றன. பிறகு அவர் பாதங்களில் மலர்களாக வந்து விழுந்தன. இதைப்பார்த்த சில பிராமணர்கள்

தோமாவின் சீடர்களாக மாறினார்கள். இயேசுவின் போதனைகளையும் ஏற்றுக் கொண்டார்கள்.

மலபார் கடற்கரையோரம் பல கிறிஸ்தவ சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன. தோமாவின் அரும்பணியானது இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டது. அப்போஸ்தலர் ஒவ்வொரு ஊருக்கும் செல்வார். சில மாதங்களோ, ஓர் ஆண்டோ தங்குவார். சபைகளை உருவாக்குவார். உதவியாளர்களையும் சேர்த்துக் கொள்வார். அவர்களுக்கு திருமுழுக்கு அளிப்பார். புதுநன்மை, உறுதிபூசுதல் போன்ற அருட்சாதனங்களையெல்லாம் வழங்குவார். அதற்குப் பின், தகுதியான ஒரு நபரை தேர்வுசெய்து அச்சபைக்கு ஆயராகவோ, கண்காணிப்பாளராகவோ நியமிப்பார். பிறகு, வேறொரு ஊருக்குச் செல்வார்.

ஆக, தோமா ஏழு குருக்களையும் நியமித்து அந்த ஏழு சபைகளையும் கண்காணிக்கச் செய்தார். அதுமட்டுமல்லாமல், இரு ஆயர் பெருமக்களையும் நியமனம் செய்து அவரது வாரிசுகளாக ஆக்கினார். அவ்வாயர்கள் தோமா ஆரம்பித்த சபையை வழிநடத்தி, அப்போஸ்தலிக்க சபையாக உருவாக்க அழைக்கப்பட்டார்கள்.

மாலிக்காயில் என்பவரும் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். அவர் இரு ஆயர்களை நியமனம் செய்தது பற்றி கூறுகிறார். அவ்வாயர்கள் பெயர் - கேபா கொல்லம் மற்றும் பவுல் பெருமாள். இவர்கள் இருவருமே, அரசன் அந்திரேயாவின் உறவினர்கள். தோமா தமது அங்கியை தன்னைவிட்டுப் பிரியாத சீடராக விளங்கிய கேபா மேல் வைத்தார். பிறகு, தமது கையை அவர் தலைமேல் வைத்து, விசுவாசிகளை அவர் பாதுகாப்பில் விட்டுவைத்தார். அவ்வாயர்கள் தோமா போல் மதிக்கப்பட வேண்டும் எனவும் விரும்பினார். மலபார் பகுதியையே இரு பிரிவாக பிரித்து இரு ஆயர்களை தோமா நியமனம் செய்தார். ஒரு ஆயரை வடக்கு மலபாரிலும், மற்றொரு ஆயரை தெற்கு மலபாரிலும் நியமனம் செய்தார். வடக்கு மலபார் முசிறியையும், தெற்கு மலபார் கொல்லம் ஊரையும் தலைநகராகக் கொண்டிருந்தது. இவ்விரு இடங்களில், இன்றும் கத்தோலிக்க ஆயர்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

திருவிதாங்கோட்டில் தோமா

அப்போஸ்தலரான தோமா மலபார் பகுதியில் ஏழு சபைகளை நிறுவி வழிநடத்தினார் எனப் பார்த்தோம். மலபார் பகுதியின் தெற்கே அமைந்துள்ள திருவிதாங்கோடு என்ற ஊரிலும் தோமா சபை ஒன்றை நிறுவி, ஆலயம் ஒன்று கட்டியதாகச் சொல்லப்படுகிறது. மலபாரிலுள்ள ஏழு சபைகள், பள்ளிகள் என்றும் (சபைகள்தான் அம்மக்களால் இவ்வாறு அழைக்கப்படுகிறது). திருவிதாங்கோடு சபை அரைப்பள்ளி என்றும் அழைக்கப்படுகிறது. ஆக, தோமா மலபாரில் ஏழரை சபைகளை நிறுவியிருக்கிறார் என அங்குள்ள மக்கள் கருதுகிறார்கள்.

மலபார் பகுதிதான் அக்காலத்தில் சேர நாடாக இருந்திருக்கிறது. சேரநாட்டின் தென்பகுதியில் (கன்னியாகுமரி மாவட்டத்தில்) தக்கலை என்ற ஓர் ஊர் உண்டு. அதற்கு அருகில்தான் திருவிதாங்கோடு பகுதி காணப்படுகிறது. சேரநாட்டை ஆண்ட மன்னர்கள் திருவிதாங்கோட்டிலும், பிறகு பத்மனாபபுரம் என்ற நகரில் வாழ்ந்திருந்தார்கள். சேரநாட்டு மக்கள் அரசர்கள் வாழ்ந்த இடத்தை 'தெற்கு எல்லை' என்று அழைப்பார்கள். அதுவே நாளடைவில் 'தக்கலை' யாக மருவிவிட்டது.

தோமா அப்பகுதியில் நற்செய்திப்பணி ஆற்றும்போது அரசனாக இருந்தவன் சேரமா மன்னன் இமய வரம்பன் நெடுஞ்சேரல் ஆதன் என்பவன். கி.பி. 7 முதல் 65 வரை வாழ்ந்த இவன் பதிற்றுப்பத்தின் 2-ம் பத்தின் அரசன் ஆவான். சமண சமயத்தைச் சார்ந்தவராக இவன் இருந்திருக்கலாம். இவண் உதயகிரி மலையின் தாழ்வரையான பிரம்மபுரத்தில் வாழ்ந்தான். பேரரசனுக்குக் கீழ் பல சிற்றரசர்களும் மலபாரின் பல பகுதிகளில் வாழ்ந்திருக்கிறார்கள். இம்மன்னருடன் அரசரின் குலத்தவர்களாக சத்திரியர்களும், பிராமணர்களும் வாழ்ந்து வந்தனர். இம்மக்கள் சமண சமயத்தையோ, இந்து மதத்தையோ, தோமாவின் வருகைக்குப் பின்னர் சிலர் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாகவோ இருந்திருக்கலாம் என்பதே உண்மை.

தோமா இப்பகுதியில் பணியாற்றிய காலத்தில் சேரநாட்டு மக்கள் திருவிதாங்கோட்டில் நெல் பயிர் சாகுபடி செய்தும், உப்பு விளைவிக்கும் வயல் நிலங்களை நம்பியுமே வாழ்ந்தனர். மக்களின் முக்கிய உணவாக அரிசியுடன் தினையும், சாமையும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அக்காலத்தில் தென்னை சாகுபடிக்குப் பதிலாக பனைமரங்கள்தான் மிகுதியாக வளர்க்கப்பட்டு வந்தது. பனைமரத்தின் பதநீர் சேர) மலபார் மக்களின் நிறை உணவாகவும் விளங்கியது. இத்துடன் எள், காணப்பயறு, இதர பயறுவகைகள் மற்றும் தேன் போன்றவையும் அம்மக்களின் உணவிற்காக பயன்படுத்தப்பட்டு வந்தது.

அப்போஸ்தலர் தோமாவும் இப்பகுதிக்கு வருகை புரிந்து, பல்வேறு மக்களிடம் இயேசுவைக் கொண்டுபோய்ச் சேர்த்தார். பலதரப்பட்ட மக்களும் இயேசுவை ஏற்றுக்கொள்ளவும் செய்தார்கள். பேதுரு, பவுல் மற்றும் இதர அப்போஸ்தலர்கள் போதித்த மத்திய தரைக்கடல் நாடுகளிலெல்லாம் இயேசுவின் போதனைக்குப் பல்வேறு எதிர்ப்புகள் இருந்ததாகத் தெரிய வருகிறது. ஆனால், தோமா போதித்த மலபாரிலுள்ள திருவிதாங்கோடு பகுதியில் மிகப்பெரிய எதிர்ப்புகள் இன்றி கிறிஸ்து மார்க்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பது வியப்பிற்குரியதாகவே உள்ளது.

தோமா அங்கு பணியாற்றும்போது கி.பி. 57-ஆம் ஆண்டுவாக்கில் மாதாவின் பெயரில் ஓர் ஆலயம் ஒன்றும் கட்டி முடித்தார். அதற்கு 'அமலகிரி ஆலயம்' என்ற பெயரை சூட்டினான் அப்போதைய சேரமா

மன்னன் உதயன் சேரலாதன். இவ்வாலய திறப்பு விழாவானது வெகு விமரிசையாக நடைபெற்றதாகவும், மணவாளக்குறிச்சி கடல் பகுதியில் இருந்து கடல்நீர் எடுத்து, யானைகளை வரிசையாக நிறுத்தி, இந்நீர் கொண்டு அபிஷேகம் செய்யப்பட்டதாக அங்குள்ள மரபு நம்புகிறது. இக்கோவில் 45 அடி நீளமும், 16 அடி அகலமும், 10 அடி உயரமும் கொண்ட கீறி எடுத்த கருங்கல்லால் கட்டப்பட்டிருந்தது. (தற்சமயம், கோவிலின் முக்கியமான பீடம் தேவமாதா பெயரிலும் வடக்கு சின்ன பீடம் தோமாவின் பெயரிலும் உள்ளது குறிப்பிடத்தக்கது.) இக்கோவிலின் சிறப்பம்சம் என்னவெனில் - உலகிலேயே கிறிஸ்தவ மறைக்கு அமைக்கப்பட்ட முதல் கோவில் தோமா அப்போஸ்தலரால் அமைக்கப்பட்ட திருவிதாங்கோடு கோவில் என வரலாற்று அறிஞர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இச்சமயத்தில் இந்திய மன்னர்களுள் ஒருவரான சேரமா மன்னன் தோமாவை அன்புடன் வரவேற்று, மரியாதை செய்து ஆலயம் கட்டவும் இடம் கொடுத்ததை நினைக்கையில் அக்கால மக்களின் நன்மனத்தையும், ஒற்றுமையையும் எடுத்துக்காட்டும் விதமாகவே இருந்திருக்கிறது என்பதை மறுக்க முடியுமோ ? இவ்வாலயத்தை இன்றும் சிரியன், ஆர்த்டக்ஸ் பிரிவைச் சார்ந்த பங்குத்தந்தை அவர்கள் நிர்வாகம் செய்வது குறிப்பிடத்தக்கது.

இப்பகுதியில் பரம்பரை பரம்பரையாக "அசனம்" எனும் பாதம் கழுவும் சடங்குமுறை நடைபெற்று வருகிறது. இறைஇயேசு தாம் பாடுபடுவதற்கு முந்தைய நாள் தமது சீடர்களின் பாதங்களைக் கழுவி, பிறகு அப்பத்தையும் பிட்டு அளித்ததாக இந்நூலில் வாசிக்கிறோம். அதைப் பின்பற்றியே தோமா அப்போஸ்தலரும் நாற்பது நாள் தவம் செய்து, நாற்பத்தியொன்றாம் நாள் பன்னிரு நபர்களை தேர்வு செய்து அவர்களுடைய பாதங்களைத் தமது குருநாதர் இயேசு செய்ததுபோல் கழுவித் துடைத்து முத்தமிட்டார். அதற்குப்பிறகு, இறைவன் பெயரால் அரிசியிலான அப்பத்தைக் கையில் எடுத்து செபித்து, அனைவருக்கும் வழங்கினார். இச்சடங்கானது தோமா கருங்கல்லால் கட்டிய மரியன்னை ஆலயத்தின் முதல் பெருவிழாவாக இருந்தது எனக் கூறப்படுகிறது. தோமா நடத்திய 'அசனம்' முறை இன்றும் திருவிதாங்கோடு பகுதியில் ஒரு குறிப்பிட்ட இனத்தாரால் பின்பற்றப்பட்டு வருகிறது. இதன் நினைவாகத்தான் புனித தோமா அப்பம் வழங்கும் முறையும் பல சிரிய கிறிஸ்தவ ஆலயங்களில் நடைபெற்று வருகிறது.

தோமாவுடன் நெருக்கமாக இருந்த உதயச் சான்றோன் ஆசான் எனும் சிற்றரசர் ஒருவருக்கு பொறையன் எனும் கடின உழைப்பாளியாக விளங்கிய புதல்வன் இருந்தான். அவன் அவ்வூர் மக்களைக் கூட்டி பள்ளிக்கரை என்ற பகுதியிலிருந்து ஓர் கால்வாயை சிலரின் துணை கொண்டு வெட்டினான். அதற்கு தோமாவும், அவ்வூர் பெரியோரும் ஆசீர் அளித்தனர், உதவியும் செய்தனர். மூன்று வாரங்களில் கால்வாய்

வெட்டி முடிக்கப்பட்டதாகவும், அவ்வூரைச் சுற்றிய பல குளங்களில் தண்ணீர் தேக்கப்பட்டதாகவும் அதனால் அப்பகுதி வயல்கள் அனைத்தும் மிகச் செழிப்புற்று விளங்கியதாவும் சொல்லப்படுகிறது. இதற்கு **பொறையன் கால்வாய்** என்ற பெயரும் இருந்து வருவது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

பொறையனின் தங்கையான தெய்வானை என்ற குழந்தை ஒருமுறை குளத்திலுள்ள நீரில் மூழ்கி இறந்துபோய் விட்டது. மிகுந்த துக்கமுடன் அவ்வூர் மக்கள் குழந்தை தெய்வானையின் உடலை அடக்கம் செய்ய இருந்தனர். அச்சமயத்தில் அங்கு வந்த தோமா அப்போஸ்தலர் குழந்தையின் உடலைத் தொட்டு, முழந்தாள் படியிட்டு கரம்குவித்து கண்ணீர் மல்க இறைவனிடம் வேண்டினார். மக்கள் வியக்க இறையருளால் சிறிதுநேரத்தில் அக்குழந்தை கணவிழித்தது. இந்நிகழ்விற்குப் பிறகு அக்குடும்பத்தினர் தோமாவிடம் அதிக அன்பு செலுத்தியதோடு மட்டுமன்றி அவர்க்கு உதவியாகவும் இருந்தனர்.

இப்பகுதியில் தோமா பணியாற்றும்போது பல்வேறு புதுமைகளும் புரிந்தார் எனச் சொல்லப்படுகிறது. மேலே சொன்ன புதுமையுடன், வேறு சில புதுமைகளும் புரிந்து அதிக மக்களை இயேசுவினிடத்தில் கொண்டு வந்து சேர்த்தார். அவர்களுக்குத் திருமுழுக்கும் அளித்தார்.

ஒருமுறை கடற்கரைப் பகுதியான “காயல்” என்ற இடத்தில் பேய்க்காற்று வீசியது. மக்களின் குடிசைகள் பறந்தன, மீன்பிடிக்கச் சென்றவர்களும் சிதறித்தான் போனார்கள். மக்கள் பலர் அழுதார்கள். இதைப் பார்த்த அப்போஸ்தலர் மக்கள் படும் துயரைக்கண்டு கடற்கரைப் பகுதியில் முழங்கால் படியிட்டு இறைவனிடம் செபம் செய்து காற்றையும், கடலையும் அமைதிப்படுத்தினார். இதை நேரில் பார்த்த பலர் திருமுழுக்கும் பெற்றுக் கொண்டனர்.

ஒருமுறை தோமாவும் அவர் நண்பர் ஒருவரும் பலநாட்கள் பிரயாணம் செய்தபடியானால் அதிகம் களைப்புற்றார்கள். அவர்கள் இருவரும் பசியும் தாகமும் கொண்டார்கள். அவர்களுக்கு உதவும்பொருட்டு ஒரு சத்திரியப் பெண் பனை நீரான பதநீரை அருந்தக் கொடுத்தாள். அவ்வேளையில் அம்மரத்தில் பனை ஏறிக்கொண்டிருந்த ஒரு மனிதர் கைதவறி கீழே விழ இருப்பதைப் பார்த்தார் தோமா. உடனே தன் கையில் இருந்த பட்டையை உயர்த்தியபடியே “நில்” என்று தடுத்து நிறுத்த அம்மனிதனும் அவ்வாறே ஆகாயத்தில் நின்றான். பின்னர், தோமா இறைவனிடம் செபம் செய்து அம்மனிதனை தரையில் இறங்கச் செய்தார்.

ஒருமுறை சேரமன்னரின் கப்பல் முட்டம் துறைமுகத்திற்கு (அக்காலத்தில், அது மிக முக்கிய துறைமுக நகரமாக விளங்கியது) வந்தபோது கடற் புயலின் அலையால் மூழ்கும் நிலை ஏற்பட்டது.

அச்சமயம் அங்கிருந்த தோமா இறைவனை வேண்டி கப்பல் மற்றும் சரக்குகளையும் காப்பாற்றியதாகக் கூறப்படுகிறது.

தோமா மலபாரிலுள்ள குமரிமாவட்டத்தில் மட்டுமன்றி, நெல்லை மாவட்டத்திலுள்ள சேந்தரமாம் மலைப்பகுதியிலும், திருச்சிக்கருகே உள்ள மலையடிப்பட்டியிலும் கூட சபைகளை நிறுவினார் என சிலர் நம்புகிறார்கள். மலபாரிலிருந்து கொரமண்டல் பகுதிக்கு தோமா செல்வதற்கு முன் இச்சபைகளை நிறுவியிருக்கலாம் என சிலர் நம்புகிறார்கள்.

அப்போஸ்தலர் தோமா திருவிதாங்கோடு பகுதியிலிருந்து மணலி என்ற கிராமத்திற்கும் வருகைபுரிந்தார். அங்கிருந்து கோதையாறு, மாஞ்சோலை பகுதிகளுக்கும் சென்று அங்குள்ள மலைவாழ் வேடர்களுடன் பழகியும் வந்தார். பிறகு, இயேசுவின் நற்செய்தியையும் அறிவித்து அவர்களை நல்வழிப்படுத்தியும் வந்தார். அங்கும் பல கோவில்களையும், குருசடிகளையும் கட்டினார். மேலும், தோமா சில சிற்றரசர்கள் வாழ்ந்த மலைப்பகுதிகளான கோதையார், செங்கோட்டை, எருமேலி, பூஞ்ஞாறு போன்ற இடங்களுக்கும் சென்று நற்செய்திப்பணி புரிந்திருக்கிறார்.

1542-ஆம் ஆண்டு புனித பிரான்சிஸ் சவேரியார் திருவிதாங்கோட்டிற்கு வந்தார். இப்புனிதரும் இப்பகுதியில் பரலோகநாதர் கோவில் ஒன்றைக் கட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது. தமது வருகைக்கு முன்னரே திருவிதாங்கோட்டில் கிறிஸ்தவ மார்க்கம் நன்கு வளர்ந்து இருப்பதையும், அதற்கு தோமா அப்போஸ்தலர்தான் காரணம் என்பதையும் நன்கு அறிந்தே வைத்திருந்தார்.

('திருவிதாங்கோட்டில் தோமா' எனும் தலைப்பில் சில செய்திகளை உங்களுக்கு வழங்குவதற்கு காரணமாக இருந்த நூல், அமலகிரி பி. அந்தோனிமுக்கு அவர்கள் எழுதிய "இயேசு தர்மத்தில் சேர அரசர் குலம்" ஆகும். நூலாசிரியர்க்கு எமது நன்றிகள்.)

தோமாவின் நிருபங்கள்

இயேசுவின் அப்போஸ்தலர்கள் ஒவ்வொரு பகுதிக்குச் செல்வதற்கு முன், தான் ஏற்கனவே போதித்த இடங்களில் தமது உதவியாளர்களை குருவாக, ஆயராக திருநிலைப்படுத்துவார்கள். விசுவாசிகளை அந்நபர்களிடமே ஒப்படைக்கவும் செய்வார்கள். சிலசமயம் பழைய இடங்களுக்கு மீண்டும் வருகைபுரிந்து அங்குள்ள பிரச்சனைகளையோ, ஆர்வமுள்ளோரை இன்னும் ஊக்கம் கொடுப்பது போன்றவற்றையெல்லாம் பார்த்துக் கொள்வார்கள். சிலசமயம் அப்போஸ்தலர்கள் தாங்கள் ஏற்கனவே போதித்த இடங்களுக்குக் கடிதங்களும் எழுதுவார்கள். கி.பி.

250-ஆம் ஆண்டு எழுதப்பட்ட அப்போஸ்தலர் போதனை எனும் நூலிலிருந்து இது அறியப்படுகிறது.

ஆக, மற்ற அப்போஸ்தலர் போல் தோமாவும் தான் ஏற்கனவே பணிபுரிந்த இடங்களுக்கு நிருபங்கள் எழுதியிருக்கிறார். அவர் அனேகமாக எடெசாவுக்கும், தட்சசீலம், சொகோட்டிரா போன்ற பகுதிகளுக்கு எழுதியிருக்கிறார். அவர் அக்கடிதத்தில், தற்சமயம் தான் செய்துவந்த பணிகள் பற்றியும், இறைவன் அருளால்தான் அடைந்துவரும் வெற்றிகள் பற்றியும், எழுதியிருப்பார். அதேபோல், தமக்காகவும், விசுவாசிகளுக்காகவும் செபம்செய்ய வேண்டும் எனவும் கேட்டிருப்பார்.

இக்கடிதங்கள் வியாபாரிகளிடமோ, யாத்ரீகளிடமோ இந்தியாவிலிருந்து தட்சசீலம், சொகோட்டிரா, எடெசா பகுதிக்கு செல்லுபவர்களிடம் கொடுத்தனுப்பப்பட்டன. அவைகள் பிரதிகள் எடுக்கப்பட்டு, பக்கத்து சபைகளுக்கும் அனுப்பப்பட்டன. புனித பவுல் கொலோசேயர்க்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு கூறுகிறார். "இக்கடிதம் உங்கள் சபையில் வாசிக்கப்பட்ட பின் லவோடிசியா சபையிலும் வாசிக்கப்பட வேண்டும்" (கொலோ 4 : 16) என பவுல் கூறுவதிலிருந்து இதை அறிந்து கொள்ளலாம்.

மேலே சொன்னபடி 'அப்போஸ்தலர் போதனை' என்ற நூலில் ஜெருசலேமிலிருந்து யாக்கோபுவும், உரோமிலிருந்து பேதுருவும், எபேசுவிலிருந்து யோவானும், பிரிஜியாவிலிருந்து அந்திரேயாவும், இந்தியாவிலிருந்து தோமாவும் கடிதங்கள் எழுதியதாக அறிகிறோம்.

இன்றோ, பவுலின் பல கடிதங்களும், பேதுரு, யோவான், யாக்கோபு, யூதா போன்றோரின் சில கடிதங்களும் நமக்குக் கிடைத்திருக்கிறது. புதிய ஏற்பாடு நூலிலும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்திரேயா, தோமா போன்றோர் கடிதம் நம்மிடம் இல்லை. அனேகமாக, அவை தொலைந்து போயிருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

புனித தோமா கிறிஸ்தவர்கள்

தோமா தட்சசீல நகரில் போதித்தார். அவர் துவக்கிய அச்சபை சில ஆண்டுகளே நீடித்தது. அதேப்போல், சொகோட்டிராவிலும் சபை ஆரம்பித்தார். அவை ஏறக்குறைய பதினைந்து நூற்றாண்டுகள் நீடித்தது. பிறகு மடிந்தது. ஆனால், மலபாரில் அதாவது கேரளாவில் அவர் ஆரம்பித்த சபை எவ்வித இடையூறின்றி கஷ்டங்களின்றி இன்றும் நீடித்து வருகிறது. மலபாரில் ஒரு பெரிய கிறிஸ்தவர்கள் கூட்டமானது இன்றும் தங்களை தோமாவாலேயே மனந்திருப்பப்பட்ட கிறிஸ்தவர்களின் பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் என பெருமையுடன் அழைத்துக் கொள்கின்றனர். அவர்களுக்குத் தோமா கிறிஸ்தவர் என்று பெயர்.

ஹன்டர் என்பவர், இந்தியாவிலேயே, ஜெயினர்களும், தோமா கிறிஸ்தவர்களும்தான் இப்படியொரு பாரம்பரிய வரலாற்றை வைத்திருப்பதாகக் கூறுகிறார். இம்மக்கள் ஒவ்வொரு தலைமுறையிலும், தோமாவின் வரலாற்றை மறக்காமல் ஞாபகம் வைத்திருக்கிறார்கள். அவர்கள் தோமாவின் விழாவைக் கொண்டாடுவது, அவர் மறைசாட்சியான இடத்திற்கு திருயாத்திரை செல்வது என இன்றும் அவரை நினைவில் வைத்தே இருக்கிறார்கள். சில குடும்பங்கள் அவர்களின் பெயர்களை, மூதாதையர்களின் பெயரையெல்லாம் குறித்து வைத்திருக்கிறார்கள். தோமாவால் திருமுழுக்குப் பெற்றவர்களின் பெயரையும் சேர்த்துத்தான் குறித்து வைத்திருக்கிறார்கள்.

சில குடும்பங்களின் பெயர்களும் இங்கேத் தரப்பட்டுள்ளன. பகலோ மட்டம், சங்கராபுரி, கள்ளி, களிகவு, கொயிக்கம், மேடைப்பூர், முட்டோடல், நெடும்புள்ளி, கொட்டகள்ளி, பரிகமட்டம் போன்ற குடும்பங்கள் தோமாவின் பெயரை இன்றும் சொல்லிக் கொண்டுதான் இருக்கின்றன. பகலோமட்டம் குடும்பத்தைச் சார்ந்தோர் குருக்களாக திருநிலைப்படுத்தப் பட்டு இருந்ததாகக் கூறுகிறார்கள். அக் குடும்பத்தைச் சார்ந்த குருக்கள், தமது மூதாதையரும் தோமாவால் திருநிலைப்படுத்தப்பட்டதாகக் கூறுகிறார்கள்.

இதுபோக, தோமா கிறிஸ்தவர்களிடம் அவர் வரலாறு கூறும் மூன்று பாடல்களும் வழக்கத்தில் இருந்தன. அவை வீரதியன் பாடல்கள், ரப்பான் தோமை பாடல்கள், மார்க்கம் களியாட்டம் என அழைக்கப்பட்டதாகவும் தெரிகிறது. இப்பாடல்களும் பாரம்பரிய அடிப்படையில் வந்தவைதான்.

ரப்பான் தோமை பாடல்கள்

தற்போதைய பாடல்கள் அனேகமாக பழைய பாடல்களிலிருந்து மாற்றியமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. பழைய பாடலானது, தோமாவால் திருமுழுக்குக் கொடுக்கப்பட்ட "மலிகாயில்" குருவிற்கு அடுத்தபடியாக வந்த குருவால் இயற்றப்பட்டது எனக் கூறப்படுகிறது. இப்பாடலில் "புனித தோமாவின் பணி" என்ற நூலிலுள்ள சம்பவங்கள் பல இடம்பெற்றிருக்கின்றன. தோமாவுடன் பயணம் செய்த ஹப்பான் வியாபாரி பற்றியும், தோமாவால் ஆயர்களாக திருநிலைப்படுத்தப்பட்ட கேபா மற்றும் பவுல் பற்றியும் இப்பாடலில் குறிப்புகள் இருக்கின்றன.

வீரதியன் பாடல்கள்

'வீரதியர்கள்' என்பது இந்துக்களின் ஒரு பிரிவு. கிறிஸ்தவ மக்களின் திருமண வைபவங்களில் அல்லது இதர விழாக்களில், வீரதியர்கள் என்போர் தோமாவின் வருகை, போதனை, மரணம் போன்ற செய்திகள் அடங்கிய பாடல்களை பாடி, பரிசுகளும் பெற்றுச் செல்வது வழக்கம். திருமண விழாக்களில் பெண்கள் குழுவினருடன் சேர்ந்து பாட்டுப்

போட்டிகள் எல்லாம் நடத்துவர். பாடல்கள் பொதுவாக விவிலியத்திலிருந்து எடுக்கப்பட்ட நிகழ்வுகளாகவோ, தோமா வாழ்க்கையிலிருந்து சொல்லப்படும் செய்திகளாகவோ இருக்கும்.

இப்பாடல்கள் எல்லாம் தலைமுறை தலைமுறையாக அப்போஸ்தலர் தோமா பற்றிய நினைவுகளை பசுமரத்தாணி மூலம் பதிய வைத்தது. இதில் 'நசரேனியர்' என்ற குறிப்பு வருகிறது. அப்போஸ்தலர் காலத்தில், அதுவும் ஆரம்பகாலத்தில் தான் இயேசுவைப் பின்பற்றியவர்கள் 'நசரேனியர்' என அழைக்கப்பட்டனர் என்பதை நினைவில் கொள்க.

வீரதியன் பாடல்களில் அப்போஸ்தலர் தோமாவைப் பற்றி மட்டுமல்லாது, 'கானாவூர் தோமா' பற்றியும் குறிப்புகள் தரப்பட்டிருக்கிறது. ஆனால், பாடல்கள் இவ்விரு நபர்கள் பற்றி, ஒரே பெயராக இருந்தாலும் குழப்பங்கள் இல்லை. தெளிவாகவே அப்போஸ்தலர் தோமா வேறு, கானாவூர் தோமா வேறு என பிரித்துப் பாடியிருக்கிறார்கள்.

அப்போஸ்தலர் தோமா தெரியும். அது யார் கானாவூர் தோமா? பெர்சியாவில் மன்னன் இரண்டாம் சாபூர் (கி.பி.313-381) என்பவன் அவ்வரசில் கிறிஸ்தவர்களாக வாழ்ந்த மக்களுக்கு எதிராக மிகப்பெரிய வேதகலாபனையை உருவாக்கினான். அப்போது, ஒரு வியாபாரி - பெயர் கானாவூர் தோமா என்பவர் குடும்பத்தோடு அந்நாட்டை விட்டே வெளியேறத் திட்டமிட்டார். அவருடன் சேர்ந்து 72 குடும்பங்களும் வெளியேற விருப்பம் தெரிவித்தன. ஆக, கானாவூர் தோமா, 72 குடும்பங்களுடன் பெர்சியா நாட்டை விட்டு வெளியேறி, கப்பற்பயணம் செய்து இறுதியாக மலபார் பகுதிக்கே வந்தார். அப்போதைய மலபார் மன்னனான சேரமான் பெருமாள் மற்றும் அப்பகுதி கிறிஸ்தவர்கள் இவர்களை நன்கு வரவேற்றதோடு மட்டுமல்லாமல் பல ஏக்கர் நிலமும் கொடுத்து குடியேற அனுமதித்தார்கள். கானாவூர் தோமா மற்றும் 72 குடும்பத்தினர் ஒரு தனி நகரையே உருவாக்கி, தேவாலயமும் கட்டி உத்தம கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்தார்கள். அவர்களுக்கு மிகப்பெரிய சலுகைகளும் கிடைத்தன. அவர்கள் யானை மேல் சவாரி செய்வதற்கும், பல்லக்கில் பயணம் செய்வதற்கும் அனுமதிக்கப்பட்டார்கள்.

கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் மேற்கத்திய நாடுகளிலிருந்து பயணம் செய்து இந்தியா வருவதற்கு, அலெக்சாந்திரியா துறைமுகம் மிக உதவியாக இருந்தது. அதேசமயத்தில் அலெக்சாந்திரியா துறைமுகம், கிறிஸ்தவ இயல் படிப்பதற்கும் மிகச்சிறந்த மையமாக விளங்கியது. அலெக்சாந்திரியாவில் ஒரு பெரிய இறையியல் கல்விமையம் இருந்தது குறிப்பிடத்தக்கது.

கி.பி. 190-ஆம் ஆண்டு, இந்தியாவிலிருந்து சில தூதர்கள் அலெக்சாந்திரியாவிற்கு வந்தார்கள். அங்கு ஆயர் திமெத்ரியஸ் என்பவரை சந்தித்து, இந்தியாவிலுள்ள பிராமணர்களுக்கும் தத்துவ

அறிஞர்களுக்கும் கிறிஸ்துவைப் பற்றி அறிவிக்க ஒரு தகுந்த நபர் வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்கள். ஆயரும், பன்டேனுஸ் எனும் பக்திமிக்க, தத்துவ அறிஞர் ஒருவரை (அவர் இறையியல் மையத்தின் இயக்குநராகவும் இருந்தார்) அனுப்பி வைத்தார். 'பன்டேனுஸ்' இந்தியாவுக்குப் புறப்பட்டார்.

இந்தியா வந்த அவர், கிறிஸ்தவர்களையெல்லாம் சந்தித்தார். அங்குள்ள கிறிஸ்தவர்களிடம் பேசும்பொழுது அவர்கள் புனித மத்தேயு எபிரேய மொழியில் எழுதிய நற்செய்தி நூலை காண்பித்தார்கள். அவர்கள் பன்னிரு அப்போஸ்தலர்களில் ஒருவரான புனித பார்த்தொலொமேயு தான் இதை அவர்களிடம் விட்டுச் சென்றதாகக் கூறினார்கள். பன்டேனுஸ் சிறிதுகாலம் அவர்களிடம் இருந்துவிட்டு, பிறகு அலெக்சாந்திரியா திரும்பினார். புனித மத்தேயு நூலையும் எடுத்துக்கொண்டு போனார்.

பன்டேனுஸ் வந்தது கல்யாண் (மும்பை அருகே இருக்கிறது) பகுதிக்கு. ஆனால், அவர் மலபார் வந்ததே இல்லை. மேற்சொன்ன நிகழ்ச்சி 2-ஆவது நூற்றாண்டிலும் கிறிஸ்தவர்கள் இந்தியாவில் இருந்தார்கள் என்பதை மெய்ப்பிக்கவே.

தோமா கிறிஸ்தவர்களிடம் 'சிரியன் வழிபாட்டுமுறை' தான் பின்பற்றப்பட்டு வந்தது (Syrian rite). இந்தியாவிற்கும் பெர்சியாவிற்கும் முன்பு வியாபாரத் தொடர்பு இருந்தது. அதனால், கப்பல் போக்குவரத்தும் இருந்தது. அதனால், வியாபாரிகளுடன் பெர்சியா நாட்டு சபைகள் தமது ஆயர்களையும், குருக்களையும் மலபாருக்கு அவ்வப்போது அனுப்பி வைத்தார்கள். அதனால் சிரியன் வழிபாட்டுமுறை, பெர்சியா சபையால் பின்பற்றப்பட்டு வந்தது. பிறகு மலபார் தோமா கிறிஸ்தவர்களாலும் பின்பற்றப்பட்டு வந்தது.

புனித ஜான் கிறிசோஸ்தோம் (4-ஆம் நூற்றாண்டு) ஒரு இந்துவைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இந்துவாகப் பிறந்து கிறிஸ்தவனாக மாறிய அந்நபர் (மருதா என்பது அவன் பெயர்). பின்பு இந்தியாவிலுள்ள ஒரு சபைக்கு ஆயரானார். அவர் கி.பி. 381-ஆம் ஆண்டு நடந்த கான்ஸ்டான்டிநோபிள் - பொதுச் சங்கத்தில் கலந்து கொண்டார்.

கி.பி. 345-ஆம் ஆண்டு, கானாவூர் தோமா, 72 குடும்பங்களுடன் மலபாரில் வந்து குடியேறியதைப்பற்றி ஏற்கனவே பார்த்தோம். வீரதியன் பாடல்களிலும் அவர் பற்றி குறிப்புகள் உள்ளதாகவும் பார்த்தோம்.

கி.பி. 354-ஆம் ஆண்டு 'இந்தியன் தியோபிலஸ்' என்பவர் மன்னன் கான்ஸ்டன்டின் ஆணைப்படி, அரபு நாட்டில் மறைபணி ஆற்றியபின், சொகோட்டிரா தீவிற்கு சென்றார். அங்கு கிறிஸ்தவர் இருப்பதையும் பார்த்தார். அவர்கள் சிரிய மொழியில் வழிபாடு செய்வதையும் அறிந்து கொண்டார்.

புனித அம்புரோஸ், 'மாசியஸ்' எனும் அபிசினியர் ஆயர் இந்தியாவிற்கு கடல்வழி பயணம் செய்து, அங்கு பல கிறிஸ்தவ சமூகங்களைப் பார்த்ததாக எழுதியிருக்கிறார்.

கி.பி. ஆறாம் நூற்றாண்டில் 'காஸ்மாஸ் இன்டிகோபிளேஸ்டஸ்' (இதற்கு இந்திய யாத்ரீகர் என்று அர்த்தம்) எனும் கிரேக்க வணிகர் அலெக்சாந்திரியாவிலிருந்து அடிக்கடி வாணிபம் சம்பந்தமாக ஆப்பிரிக்கா துறைமுகங்களுக்கும், இலங்கை, இந்தியா போன்ற இடங்களுக்கும் பயணம் செய்வதை வழக்கமாக்கிக் கொண்டார். பல ஆண்டுகளுக்குப் பின் ஒரு துறவியாகவும் மாறிப் போனார். சீனாய் தீபகற்பத்தில் துறவியாக வாசம் செய்து தமது பழைய நினைவுகளைப் புத்தகமாக எழுதினார். கி.பி. 585-ஆம் ஆண்டு அதை முடித்தார். அப்புத்தகத்தின் ஒன்பதாவது பகுதியில், கி.பி. 530-355 ஆண்டுகளுக்குள் தாம் விஜயம் செய்த இந்தியா மற்றும் இலங்கை பற்றி குறிப்பிடுகிறார். அங்குள்ள கிறிஸ்தவர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், "நான் எனது கண்களாலேயே கிறிஸ்தவர்களை இலங்கையிலும், மிளகு சாகுபடி செய்யும் மலபாரிலும் பார்த்தேன்" என எழுதியிருக்கிறார். அதுமட்டுமல்லாமல், கல்யாண் பகுதியிலும், சொகோட்டிரா தீவிலும் ஓர் ஆயர் இருந்ததாகவும் குறிப்பிடுகிறார். இவ்வாயர்கள் பெர்சியா சபையினரால் அனுப்பப்பட்டதாகவும் கூறுகிறார்.

கி.பி. ஆறாம் நூற்றாண்டில், பெர்சியா மற்றும் மெசப்பட்டோமியா சபையினர் நெஸ்டோரியஸ் தத்துவத்தை ஏற்றுக் கொண்டனர். (நெஸ்டோரியஸ் என்பவர் கிறிஸ்துவில் இரு குணநலன்கள் - ஆளுமைத் தன்மைகள் - இருப்பதாகக் கூறுகிறார்). அதனால், மலபாரிலுள்ள தோமா கிறிஸ்தவர்களும் இத்தத்துவத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில், அப்போதைய போப்பாண்டவர்களால் பல மறைபணியாளர்கள் சீனாவிற்கு அனுப்பப்பட்டார்கள். அவர்கள் இந்தியா வழியாகத் தான் சென்றார்கள். அவர்கள் இந்தியாவிலுள்ள தோமா கிறிஸ்தவர்கள் பற்றியும் பல்வேறுவிதமாகக் குறிப்பிடத் தவறுவதே இல்லை.

கி.பி. 1320-ஆம் ஆண்டு 'ஜோர்டான்' எனும் டொமினிக் சபைக் குழுவும், நான்கு பிரான்சிஸ்கன் குருக்களும் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டார்கள். ஜோர்டான் ஒருபுறமும், பிரான்சிஸ்கன் குருக்கள் தானா பகுதிக்கும் அனுப்பப்பட்டார்கள். தானாவில் சில கிறிஸ்தவ சமூகங்களையும் அவர்கள் பார்த்தார்கள். தானாவின் மன்னன் பிரான்சிஸ்கன் குருக்களை அழைத்து, அவர்களுக்கு மரண தண்டனை கொடுத்து விட்டான். ஜோர்டான் இதைக் கேள்விப்பட்டு, அப்பகுதிக்கு வந்து, அவர்கள் உடலை நல்லடக்கம் செய்து, ஐரோப்பாவிற்கு திரும்பிப் போனார். கி.பி. 1330-ஆம் ஆண்டு, அப்போதைய போப் ஜான் XXII என்பவர்

இவரை ஆயராக திருநிலைப்படுத்தி, கொல்லம் பகுதிக்கு அனுப்பினார். அது மட்டுமல்லாமல் சில நிருபங்களும் கொல்லம் பகுதி கிறிஸ்தவர்களுக்காக எழுதி இவரிடம் கொடுத்து அனுப்பினார். அதில் போப்பாண்டவர், கிறிஸ்தவர்களிடம் பல பிரிவுகள் இருக்கக் கூடாது, அவர்களிடம் இருக்கும் குறைகள் களையப்பட வேண்டும் என்று எழுதியிருந்தார்.

கி.பி. 1350-ஆம் ஆண்டு போப் கிளமெண்ட் VI என்பவர் ஜான் டிமாரி ரோலி எனும் ஆயரை சீனாவிற்கு அனுப்பினார். போகும் வழியில் இந்தியா வந்த அவர், ஓராண்டு காலம் மலபாரிலும், மயிலாப்பூரிலும் தங்கினார். மலபார் கிறிஸ்தவர்கள் அவர்க்கு மிகுந்த வரவேற்பு கொடுத்ததோடு மட்டுமல்லாமல், ஒவ்வொரு மாதமும் அவர்க்கு நூறு தங்கக் காசுகளைக் கொடுத்தார்கள். அவர் அவர்களை விட்டுப் போகையில், ஆயிரம் பொற்காசுகளும் கொடுத்து உதவினார்கள்.

கி.பி. 1498-ஆம் உலக சரித்திரம் மிகப்பெரிய திருப்புமுனையை சந்தித்தது. போர்த்துக்கீசியர்கள் 'கலிகோடு' எனும் இந்திய கடற்கரைப் பகுதிக்கு வருகை புரிந்தார்கள். ஆக, ஆசியா மற்றும் ஐரோப்பாவிற்கு கடற்வழி பயணம் மீண்டும் திறந்துவிடப்பட்டு விட்டது.

போர்த்துக்கீசியர்கள் இந்தியா வந்தபோது, அங்கு கிறிஸ்தவர்கள் இருப்பதைப் பார்த்து ஆச்சரியம் அடைந்துவிட்டார்கள். கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் இறுதியில் மலபாரில் ஏறத்தாழ 60,000 கத்தோலிக்கர் 60 கிராமங்கள் மற்றும் நகர்களில் இருப்பதைப் பார்த்தார்கள். அவர்கள் கொச்சியிலும், புரக்காடு ஊரிலும் இன்னும் பிற ஊரிலும் இருந்தார்கள்.

கி.பி. 1599, ஜூன் மாதம் முழு கத்தோலிக்க சபையும் மறுசீர்த்தம் செய்யப்பட்டது. திருச்சபையிலுள்ள குறைகள் களையப்பட்டு, மறு மதிப்பீடுகளும் செய்யப்பட்டது.

போர்த்துக்கீசிய மறைபணியாளர்கள், ஆயர்கள் போன்றோர் தோமா கிறிஸ்தவர்களை கத்தோலிக்க சபைக்குள் கொண்டுவர முயற்சிகள் மேற்கொண்டார்கள். கி.பி. 1663-ஆம் ஆண்டுவாக்கில் ஏறத்தாழ 84 சபைகள் ஒன்றுசேர, 32 சபைகள் மட்டும் தங்களைப் பிரித்துக் கொண்டு 'ஜேக்கபைட்ஸ்' (Jacabites) என்று அழைத்துக் கொண்டார்கள்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, கிறிஸ்தவர்கள் அதாவது மலபார் கிறிஸ்தவர்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டார்கள் எனத் தெரிய வந்துள்ளது.

முதலாவது கத்தோலிக்கர்கள் - அவர்கள் போப்பாண்டவரை தமது ஆன்மீகத் தலைவராக ஏற்றுக்கொள்பவர்கள் - அவர்கள் மூன்றுவகை வழிபாட்டு முறைகளை பின்பற்றினார்கள். அவை சீரோ-மலபார், சீரோ-மலங்காரா மற்றும் லத்தீன் வழிபாட்டு முறை (Syro-Malabar, Syro Malankara and Latin rites). மூவரிலும் மொழி மற்றும் வழிபாட்டுச்

சடங்குகளில் சில வேறுபாடுகள் இருப்பினும், கத்தோலிக்கராகத் தான் இருந்தார்கள். 1947-ஆம் ஆண்டு, கேரளாவில் 1,722,332 கத்தோலிக்கர் இருந்தனர். அவர்களில் 1,012,765 பேர் சிரியன் வழிபாட்டு முறையையும் 7,09,567 பேர் லத்தின் வழிபாட்டு முறையையும் பின்பற்றிக் கொண்டிருந்தார்கள்.

மற்றொரு பிரிவினரும் (Schismatics) உண்டு, அவர்களும் சிரியன் வழிபாட்டு முறையைப் பின்பற்றினாலும், போப்பாண்டவரை தமது ஆன்மீகத் தலைவராக ஏற்றுக் கொள்வதில்லை. அவர்களுக்கும் மூன்று வகையினர் உண்டு. அவை - ஜேக்கோபியர்கள் (Jacobites) மார்தோமா கிறிஸ்தவர்கள் (Mar thome Christians) மற்றும் நெஸ்டிரேனியர்கள் (Nestorians) ஆகியோர். மொத்தத்தில், அவர்களின் எண்ணிக்கை 5,26,000 - 3,73,000 ஜேக்கோபியர்கள்; 1,45,000 மார் தோமா கிறிஸ்தவர்கள் மற்றும் 8,000 நெஸ்டிரோனியர்கள்.

19-ஆம் நூற்றாண்டில், பிரிந்த சகோதரர் சபையைச் சார்ந்தோரும் மலபாருக்கு வருகைபுரிந்த பின், ஜேக்கோபியர்கள் வகையினர் புரொட்டெஸ்டன்ட் சபையினருடன் சேர்ந்து கொண்டார்கள். அவர்களுக்கும் எட்டு உட்பிரிவுகள் உண்டு. அவர்களின் எண்ணிக்கை 3,18,000 அவர்கள் கொச்சின் மற்றும் டிராவன்கோரிலும் இருந்தார்கள். (மேலே சொன்னவை 50 ஆண்டுகளுக்கு முந்தைய புள்ளி விவரம் ஆகும்.)

தோமா கிறிஸ்தவர்கள் பற்றி ஒரு குறை - இயேசுவின் பன்னிரு அப்போஸ்தலருள் ஒருவரிடமிருந்து, இயேசுவின் போதனைகளைக் கேட்கும் பேறுபெற்ற இவர்கள், 'எல்லா இனத்தாரையும் என் சீடராக்குங்கள்' என்ற இயேசுவின் சொல்லை கேட்காமல் போய்விட்டார்கள். அதனால் ஏறத்தாழ 18 நூற்றாண்டுகள் அவர்கள் பல இடங்கள் சென்று போதிக்காமல் இருந்து விட்டார்கள். மற்ற இனத்தாருக்கும் இயேசுவின் நற்செய்தியை அவர்கள் எடுத்துச் சொல்லவில்லை.

ஆனால், சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் அவர்களிடையே பெரும் மாற்றங்கள் ஏற்பட்டது. அதனால், தோமா கிறிஸ்தவர்கள் கூட பல நாடுகள் பகுதிகளுக்கு சென்றுவிடலானார்கள்.

1952-ஆம் ஆண்டின் ஒரு புள்ளி விவரத்தின்படி (Preshita Kerala, Alwaye, February 1952, Page II), 379 குருக்களும், 214 சகோதரர்களும் மலபாருக்கு புறத்தே மறைபணி ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள் எனத் தெரிகிறது. 807 சகோதரிகளும் 430 இளஞ்சகோதரிகளும் (அதாவது Aspiranto or Novices) வெளியிடங்களில் இயேசுவுக்காக ஊழியம் செய்து கொண்டிருக்கிறார்கள் எனவும் தெரியவந்துள்ளது.

5

கொரமண்டலில் தோமா

- *தோமா கொரமண்டல் பகுதிக்குச் செல்லுதல்*
- *கொரமண்டலில் தோமா*
- *தோமாவின் வேதசாட்சி மரணம்*
- *தோமாவின் திருப்பண்டங்கள்*

தோமா கொரமண்டல் பகுதிக்குச் செல்லுதல்

ஏறத்தாழ ஏழு ஆண்டுகளுக்கு மேலாக தோமா மலபாரில் இருந்து விட்டார். அவருடைய அப்போஸ்தலப் பணி வெற்றிகரமாகவே நடைபெற்று விட்டது. மலபார் மக்களில் பல இனத்தார் புது விசுவாசத்தை ஆர்வமாகவே ஏற்றுக்கொண்டும் விட்டார்கள். மலபாரில் ஏழு சபைகள் ஸ்தாபிக்கப்பட்டு விட்டது. ஒவ்வொரு சபைக்கும் குருவானவரும், வடக்கு தெற்கு என இரு ஆயர்களும் நியமிக்கப்பட்டும் விட்டார்கள். நல்ல நம்பிக்கையும் இருக்கிறது, தோமா ஆரம்பித்த மலபார் சபைகள் நன்கு வளரும் என்று.

இப்போது அப்போஸ்தலர் தோமா வேறுவிதமாக யோசிக்க ஆரம்பித்து விட்டார். இந்தியாவுக்கு வந்துவிட்ட தோமா, மலபாரில் இருந்து வேறு பகுதிக்கு சென்றால் நன்றாக இருக்கும் என எண்ணினார். அதனால், மலபார் சேர பகுதியை விட்டு, கோரமண்டல் பகுதி அதாவது சோழ மண்டலத்திற்குப் போகலாம் என எண்ண ஆரம்பித்தார். தோமாவுக்கும் சோழமண்டலம் பற்றியும், அதிலுள்ள முக்கிய ஊர்கள் பற்றியும், அதிலுள்ள மக்களின் நம்பிக்கை பற்றியும் நன்கு அறிந்தே வைத்திருந்தார். மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சை, காஞ்சிபுரம் போன்ற ஊர்கள் அப்பகுதியில் மிக முக்கிய ஸ்தலங்களாகவும் விளங்கியது. அவ்வூர்களில் பிராமணர்கள், வியாபாரிகள், விவசாயிகள், தொழிலாளிகள், மருத்துவர்கள், கட்டிடக் கலைஞர்கள் என பலதரப்பட்ட மக்கள் இருப்பதையும் அறிந்து கொண்டார். இவர்களிடம் இயேசுவைப்பற்றி அறிவிக்க வேண்டும். இத்தகைய எண்ணங்கள் பல ஆண்டுகளாகவே இருந்து வந்தது.

இதே எண்ணத்துடன் இருந்த தோமா ஒருநாள் தமது உதவியாளர்களிடம் இதைத் தெரிவிக்கவும் செய்தார். அவர்கள் எல்லோரும் குழுவாக சேர்ந்து, நோன்பு இருந்து செபித்தார்கள். (அப்.பணி 13 : 1-4). முடிவில், தோமா ஓர் தீர்க்கமான முடிவிற்கு வந்தார். இறைச்சித்தம் தம்மை மலபாரிலிருந்து வேறிடத்திற்கு, அதுவும் கொரமண்டல் பகுதிக்கு அழைக்கிறது என்பதை உணரவும் செய்தார். இறுதியாக, சபையிலுள்ள முக்கியமான குருக்களையும், ஆயர்களையும் அழைத்தார். தோமா அவர்களிடம் தமது முடிவையும் தெரிவித்தார். தோமாவுக்கும் சரி, மலபார் சபையிலுள்ளவர்களுக்கும் சரி, பிரிவு என்பது மிக கடினமானதாகவே இருந்தது. சபை பெரியவர்கள் இன்னொரு விஷயத்தையும் யோசித்தார்கள். தோமா இப்போது இளைஞரல்லர். தோமாவுக்கு இப்போது அதிகமாக வயதாகி விட்டது.

ஒரு குறிப்பிட்ட காலம் வேலை பார்த்தபின் ஓய்வு எடுக்கத்தான் சராசரி நபர்கள் விரும்புவர். ஆனால், இயேசுவின் அப்போஸ்தலருக்கு அவ்வாறு இருக்கவே விரும்பவில்லை. மலபார் கிறிஸ்தவர்களும், இறை

இயேசுவின் பிரதிநிதிக்கு, இறைபோதனையைப் பரப்பும் அப்போஸ்தலருக்கு, இறை இயேசுவை தமது வாழ்வாக-மூச்சாக-பேச்சாக வாழ்ந்து கொண்டிருக்கும் புனிதருக்கு ஒய்வு என்பது கிடையாது என்பதை உணர்ந்துதான் இருந்தார்கள்.

மலபாரில் தான் இயேசுவின் வார்த்தை விதைக்கப்பட்டு, நல்ல பலன்தரும் என்ற எதிர்பார்ப்பும் பலமாக உள்ளதை அறிந்து கொண்டார்கள் தோமாவும், மலபார் சபையினரும்.

ஆக, அந்த ஒரு குறிப்பிட்ட நாள் வந்தது. மலபார் சபையினிடமிருந்து விடைபெற்ற தோமா, அப்போதைய பயண வசதியைப் பொறுத்து சோழமண்டலத்திற்கு புறப்பட்டார். கப்பற் பயணம் செய்திருந்தால் இலங்கை வழியாக கொரமண்டல் பகுதியை அடைந்திருப்பார். அல்லது தரைவழிப் பயணம் என்றால் மேற்குத் தொடர்ச்சி மலையைக் கடந்து, சோழநாட்டினை அடைந்திருப்பார்.

தட்சசீல நகரில் பணியாற்றும்போது, சோழ நாட்டின் அரசன் மாஸ்டாய் தான் இவரை அழைத்தான் என நாம் ஏற்கனவே ஆரம்பத்தில் பார்த்தோம். தமது மனைவியையும், மகளையும் குணமாக்குவதற்காக அழைத்ததாகவும் பார்த்தோம். மாஸ்டாய் என்பது தமிழ் மொழியில் மகாதேவன் என அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

மலபாரில் பணியாற்றும்போது தோமாவின் பணிகளில் சிலவற்றை அங்குள்ள சபைக் கிறிஸ்தவர்கள் பலவற்றைக் குறித்து வைத்திருந்தார்கள். ஆனால், கொரமண்டல் பகுதியில் அவர் ஆற்றிய பணிகள் பற்றி அவ்வளவாகவே குறிப்புகள் இல்லை.

கொரமண்டலில் தோமா

சோழமண்டலத்தில் பல ஊர்களுக்குச் சென்ற தோமா, சென்ற இடமெல்லாம் இயேசுவின் போதனைகளை எடுத்துச் சென்றபின், இறுதி யாக கொரமண்டல் பகுதிக்கு வந்தார். இன்று, சென்னை - மயிலாப்பூர் - பகுதியாக இருக்கும் இடம், அன்று கொரமண்டால் கடற்கரையென அழைக்கப்பட்டது. கொரமண்டல் பகுதிக்கு வந்த தோமா அன்று வாழ்ந்துவந்த மக்களுக்குத் தமிழ் மொழியிலேயே போதிக்கலானார்.

இயேசுவின் அப்போஸ்தலர்களில் அனேகமாக இவ்வுலகில் வாழும்போது தமிழ் பேசியவர் தோமா ஒருவரே. அக்காலத்தில் தமிழ் மொழியானது மிகச் செழிப்பாக வளர்ந்திருந்தது. மூன்று அரசர்களும் - சேர, சோழ, பாண்டியர்களும் இம்மொழியை வளர்ப்பதில் ஆர்வம் கொண்டுதான் விளங்கினர்.

கி.பி. 65-ஆம் ஆண்டுவாக்கில் சென்னை - அதாவது அன்றைய மைலாப்பூர் - கொரமண்டல் பகுதிக்கு வந்த தோமா, அங்குள்ள

மக்களின் பழக்க வழக்கங்களைத் தெரிந்து கொண்டார். அதற்கேற்றார் போல் போதனைகளை அமைத்துக் கொண்டார்.

மைலாப்பூருக்கு அருகில் சிறு குன்று ஒன்று உண்டு. அதற்கு 'சின்ன மலை' என்று பெயர் (இன்று சைதாப்பேட்டைக்கு அருகில் இது இருக்கிறது). சின்னமலையில் ஒரு சிறு குகை உண்டு. அவ்வப்போது, அங்குவரும் தோமா இறை இயேசுவிடம் செபிக்க, இந்த இடத்தைத்தான் உபயோகித்தார். அக்குகை 4x15x7 அடி நீளம், அகலம், ஆழம் என இருந்ததாகத் தெரிகிறது. (இதைப்பற்றிய விவரம் பிறகு) அவ்வப்போது கூட்டம் கூட்டமாக மக்கள் கூடினார்கள். இயேசு எப்படி மக்களுக்குப் போதித்தாரோ, அதுபோல் தோமாவும் தமிழ் மக்களுக்குப் போதிக்கலானார். இப்புது போதனையைக் கேட்பதற்கு மக்களும் கூட்டம் கூட்டமாக வர ஆரம்பித்தார்கள்.

இன்னும் சற்று தொலைவில் 'பெரியமலை' என்று ஒரு இடம் உண்டு. அங்கும் மக்களிடம் கூட்டம் கூட்டமாக போதனை செய்தார் தோமா. மலபாரில் செய்ததுபோல், கற்சிலுவைகள் செய்து குருசுடிபோல் அமைத்து, மக்களைக் கூட்டி செப வழிபாடுகள் நடத்தினார் தோமா. மலபார் மக்கள் போல் மைலாப்பூர் மக்களும் தோமாவால் வெகுவாக ஈர்க்கப்பட்டார்கள்.

மைலாப்பூர் சுற்றிலும் உள்ள கிராமங்களுக்கும் சென்றார் தோமா. இயேசுவின் வார்த்தைகளை அவர் அடிக்கடி நினைத்துக் கொண்டார். "விண்ணரசு நெருங்கியுள்ளது என்று அறிவியுங்கள், நோயாளிகளைக் குணமாக்குங்கள், இறந்தோரை உயிர்ப்பியுங்கள், தொழுநோயாளரைச் சுகமாக்குங்கள், பேய்களை ஓட்டுங்கள், இலவசமாய் பெற்றுக் கொண்டீர்கள், இலவசமாய் கொடுங்கள். பொன், வெள்ளி, செப்புக்காசு எதையும் உங்கள் மடியில் வைத்துக்கொள்ள வேண்டாம். பயணத்திற்கு பையோ இரண்டு உள்ளாடைகளோ மிதியடிகளோ கோலோ எதுவும் வேண்டாம் . . . . நீங்கள் எந்த நகருக்கு, எந்த ஊருக்குப் போனாலும் அங்கே தகுதியுள்ளவன் யார் என்று கேட்டறிந்து அங்கிருந்து போகும்வரை அவனிடம் தங்கியிருங்கள். நீங்கள் வீட்டுக்குப் போகும்போது, 'உங்களுக்குச் சமாதானம்' என்று வாழ்த்துங்கள். அவ்வீடு தகுதியுள்ளதாயின், நீங்கள் கூறும் சமாதானம் அவ்வீட்டின் மேல் இறங்கும். தகுதியற்றதாயின் உங்கள் சமாதானம் உங்களிடமே திரும்பிவரும். யார் உங்களை ஏற்றுக் கொள்ளாது உங்கள் வார்த்தைகளுக்குச் செவிமடுப்பதில்லையோ, அவர்களுடைய வீட்டில் இருந்தோ, நகரத்தில் இருந்தோ வெளியேப் போகும்போது காலிலிருந்து தூசியைத் தட்டிவிடுங்கள்" (மத் 10 : 7-14).

"மனிதர் முன்னிலையில் என்னை வெளிப்படையாக ஏற்றுக் கொள்பவன் எவனோ, அவனை நானும் வானகத்திலுள்ள என் தந்தையின் முன்னிலையில் வெளிப்படையாக ஏற்றுக்கொள்வேன்"

(மத் 10 : 32) என இயேசு சொன்னதையும் நினைவு கூர்ந்தார் தோமா.

"என் சீடன் என்பதற்காக இச்சிறியவருள் ஒருவனுக்கு ஒரே ஒரு கிண்ணம் தண்ணீர் கொடுப்பவனும் கைம்மாறு பெறாமல் போகமாட்டான் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத் 11 : 42) என இயேசுவின் வாக்கிற்கேற்ப பல வீடுகளில் தோமாவிற்கு நல்ல வரவேற்பும் கொடுத்தார்கள். இதனால் பல நண்பர்கள், உதவியாளர்கள் மற்ற இடங்கள்போல் இங்கும் சேரலானார்கள்.

மக்களிடம் போதிக்கும்போது இயேசுவின் வார்த்தைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து போதித்தார் தோமா. முக்கியமாக மலைப் பிரசங்கம் அவர் போதனையில் முக்கிய இடம்பெற்றது.

"நானோ உங்களுக்குச் சொல்கிறேன், தீயோனை எதிர்க்க வேண்டாம். யாராவது உன் வலக்கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் காட்டு" (மத் 5 : 39).

"உங்கள் பகைவர்களுக்கு அன்புசெய்யுங்கள், உங்களை துன்புறுத்துவோருக்காக செபியுங்கள்" (மத் 5 : 44).

"நீ பிச்சையிடும்போது, உன் வலக்கை செய்வது இடக்கை அறியாதிருக்கட்டும்" (மத் 6 : 3).

"மனிதர்களுடைய குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களாகில், உங்கள் வானகத் தந்தையும் உங்களை மன்னிப்பார்" (மத் 6 : 14).

"மண்ணுலகில் செல்வம் சேர்த்து வைக்க வேண்டாம். இங்கேப் பூச்சியும் துருவும் அழித்துவிடும். திருடரும் கன்னமிட்டு திருடுவர். ஆனால், விண்ணுலகில் செல்வம் சேர்த்துவிடுங்கள். அங்கேப் பூச்சியும் துருவும் அழிப்பதில்லை. திருடரும் கன்னமிட்டு திருடுவதில்லை" (மத் 6 : 19-20).

"கடவுளுக்கும் செல்வத்திற்கும் நீங்கள் ஊழியம் செய்ய முடியாது" (மத் 6 : 24).

"கவலைப்படுவதால் உங்களில் எவன் தன் வளர்த்திக்கு ஒரு முழம் கூட்ட முடியும்? . . . . ஆதலால், எதை உண்போம், எதை குடிப்போம், எதை உடுப்போம் என்று கவலைப்பட வேண்டாம்" (மத் 6 : 27-31).

"நீங்கள் தீர்ப்புக்குள்ளாகாதபடி தீர்ப்பிடாதீர்கள். எந்தத் தீர்ப்பு இடுகிறீர்களோ அந்தத் தீர்ப்பையே நீங்களும் பெறுவீர்கள். எந்த அளவையால் அளப்பீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்" (மத் 7 : 1-2).

"பரிசுத்தமானதை நாய்களுக்குப் போட வேண்டாம். உங்கள் முத்துகளை பன்றிகள் முன் எறியவும் வேண்டாம்" (மத் 7 : 6).

"கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள், தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும்" (மத் 7 : 7).

"உங்களுக்குப் பிறர் என்னென்ன செய்ய வேண்டும் என விரும்புகிறீர்களோ, அவற்றையெல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள், இறைவாக்குகளும் திருச்சட்டமும் இதுவே" (மத் 7 : 12).

"என்னை நோக்கி ஆண்டவரே, ஆண்டவரே என்று சொல்பவனெல்லாம் விண்ணரசு சேரமாட்டார்கள். வானகத்திலுள்ள என் தந்தையின் விருப்பப்படி நடப்பவனே சேருவான்" (மத் 7 : 21).

மேலே சொன்ன இயேசுவின் வார்த்தைகளுக்கெல்லாம் முக்கியத்துவம் கொடுத்து போதிக்கலானார் தோமா.

இவ்வாறு ஒருமுறை சின்னமலை பகுதியில், தோமா திரளான மக்கட் கூட்டத்திற்கு போதனை செய்து கொண்டிருந்தார். சிறிதுநேரம் கழித்து, மக்களுக்குத் தண்ணீர் தாகம் எடுத்தது, பக்கத்தில் குளமோ, குட்டைகளோ இல்லை. பார்த்தார் தோமா. இயேசுவை நினைத்துக் கொண்டார், எப்படி இஸ்ராயேல் மக்களுக்கு இறைவாக்கினர் மோயீசன் பாறையைத் தனது கோலால் தட்டி தண்ணீர் வரச் செய்தாரோ, அதுபோலவே தோமாவும் செய்தார். பாறையிலிருந்து தண்ணீர் கொட்டியது. அச்சுவையான நீரை மக்களும் பருகினார்கள். தோமாவையும் வாழ்த்தினார்கள். இறைவனையும் வாழ்த்தினார்கள். மக்களுக்கு தாகம் தீர்த்தபின், மீண்டும் தன் போதனையைத் தொடர்ந்தார் தோமா.

தோமா மைலாப்பூர் மக்களிடம் மிகுந்த செல்வாக்கு பெறலானார். இயேசுவை இஸ்ராயேல் மக்களே தேடி ஓடி வந்ததுபோல் தோமாவை, தமிழக மக்கள் தேடி ஓடி வரலானார்கள். இது, பூசாரிகள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியது. ஓர் காளிகோவில் பூசாரி தோமாவின் மேல் அதீத வெறுப்பு கொண்டான், எப்படியாயினும் அவரை ஒழித்துக் கட்டிவிட வேண்டும் என கங்கனம் கொண்டான். அதனால் இப்படியொரு காரியம் செய்தான். தனது குழந்தையைக் கொன்று போட்டான். தோமா மேல் பழியைப் போட்டான், பிறகு குழந்தையைப் புதைத்தும் விட்டான். தோமாவும் கைது செய்யப்பட்டார். அரசன் மகாதேவன் முன்னிலையில் விசாரணை நடைபெற்றது. தோமா, ஒரு வேண்டுதலை அரசன் முன் வைத்தார். குழந்தை அடக்கம் செய்யப்பட்ட கல்லறைக்கு சென்றார், இயேசுவின் பெயரால் குழந்தையை உயிர்த்தெழச் செய்தார். எல்லோரும் ஆச்சரியப்படும் வகையில் குழந்தையிடம், "உன்னைக் கொன்றது யார்?" எனக் கேட்டார் தோமா, அக்குழந்தையோ தனது தகப்பன் மேல் கையைக்

காண்பித்தது. இவ்வாறாக, தம்மீது வந்த கொலைப்பழியைத் தடுத்து விடலானார் தோமா.

இச்செயல், தோமாவின் புகழை இன்னும் அதிகரித்தது. மக்கள் மேலும் தோமாவிடம் வந்தார்கள். இதை வைத்துக் கொண்டு தோமா மேலும் இயேசுவை மக்களிடம் கொண்டு சென்றார். மக்கள் பலர் ஞானஸ்நானம் பெற்றனர். எத்தனை பேர் திருமுழுக்கு பெற்றார்கள் என்பது தெரியவில்லை. மலபார் தோமா கிறிஸ்தவர்கள் போல் மயிலை கிறிஸ்தவர்கள் குறிப்பெல்லாம் எழுதி வைக்கவில்லை. அதனால், திருமுழுக்கு பெற்றோரின் எண்ணிக்கை நமக்கு தெரியவில்லை.

இச்சமயத்தில், தோமாவின் மற்றொரு புதுமைச் செயலையும் குறிப்பிடத்தான் வேண்டும். ராஜா மகாதேவனே ஒருமுறை தோமாவை அழைத்தான். ஒரு பெரிய மரத்தடி துறைமுகத்தில் நீர்வெளிச் செல்லும் மதகை அடைத்துக்கொண்டு இருந்தது. அதை நகர்த்துவதற்கு பலரும் பலவித யோசனைகள் கூறினார்கள். சிலர் யானை ஒன்றையும் கூட்டி வந்தார்கள். யானையைப் பயன்படுத்தி இழுத்துப் பார்த்தார்கள் பலனில்லை. யானையால் தடியை அசைக்கக் கூட முடியவில்லை. தோமா பிறகு அழைத்துவரப்பட்டார். அந்தத் தடியை கோவில்கட்டும் பணிக்கு ஒப்படைத்தால் அதை நகர்த்த முடியும் எனக் கேட்டார் தோமா. மன்னன் மகாதேவனும் இசைந்தான்.

மன்னனின் சம்மதத்தைப் பெற்றபின் தோமா நீரினுள் இறங்கினார். தன் அங்கியில் கட்டப்பட்டிருந்த கயிற்றின் ஓர் ஓரத்தினால் தடியின் ஒரு முனையைக் கட்டினார். சிலுவை அடையாளம் வரைந்த தோமா சிறிதுநேரம் செபித்தார். பிறகு, மிக எளிதாகவே தடியை அசைத்து மைலாப்பூருக்குக் கொண்டுவந்து சேர்த்தார். மன்னனும் மக்களும் தோமாவை அதிகம் வாழ்த்தினர். தோமாவும் மன்னனிடம் வேண்டியபடி அங்கு ஓர் ஆலயம் எழுப்பினார்.

இப்படியாக, சில வருடங்கள் ஓடியது. மக்கள் பலர் இயேசுவிடம் திரும்பிவிட்டார்கள். தோமாவுக்கு வயது ஏறிக்கொண்டே வந்தது. மக்கள், மன்னன் போன்றோர் தோமாவிடம் அதிகம் எதிர்பார்த்தார்கள். தோமாவும் அவர்கள் வேண்டுதலை நிறைவேற்றத் தவறவே இல்லை.

ஏற்கெனவே கூறியபடி, தட்சசீல நகரில் பணியாற்றும்போது மன்னன் மாஸ்டாய், அதாவது மகாதேவன் தனது தூதரை அனுப்பி தோமாவை அனுப்புமாறு வேண்டினான் எனப் படித்தோம். அதையும் ஏற்றுக் கொண்டவராய் தோமாவும் மன்னனின் மனைவியையும் மகளையும் குணமாக்கினார். அதோடு, அரண்மனையிலுள்ள இதர மக்களையும் குணமாக்கினார். அனேகமாக, மன்னரின் மனைவியும் மகளும் மனமாறியதாகவும் தெரிகிறது. தோமாவே குணமாக்கியதையும் மனதிற்

கொள்ளாமல், நன்றிகெட்டத்தனமாய் சில காளிகோவில் பூசாரிகளின் தூண்டுதலால் ஏவப்பட்டு, தோமையைக் கொல்ல ஆணையிட்டான் மன்னன்.

தோமாவின் வேதசாட்சி மரணம்

மலபார் கிறிஸ்தவர்கள் தோமா எவ்வாறு மரணமடைந்தார் என்பது பற்றிய குறிப்புகளை சேகரித்து வைத்திருக்கிறார்கள். அவர்களின் கூற்றுப் பிரகாரம் அவர் இவ்வாறுதான் மரணம் அடைந்தார் என்று அறுதியிட்டுக் கூறமுடியும்.

தோமா மைலாப்பூரில் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது காளி கோவில் பூசாரிகள் அவர்மேல் கோபம் கொண்டார்கள். மன்னனிடம் முறையிட்டார்கள். அவனும் இவரைக் கொல்ல ஆணையிட, காளி கோவில் பூசாரிகள் சிலர் அவரைக் கொல்ல தீர்மானித்தார்கள். சின்னமலை பகுதியில் தோமா தங்கி ஓர் குகையில் அடிக்கடி செபத்தில் ஈடுபடுவார் எனப்பார்த்தோம். அவ்வாறு செபித்துக் கொண்டிருக்கும்போது காளி கோவில் பூசாரிகள் அவரைப் பிடித்து தாக்க ஆரம்பித்தார்கள். தோமா அவர்களிடம் இருந்து தம்மை விடுவித்தார். அப்படியே தப்பி அங்கிருந்து 'பெரியமலை' பகுதிக்கு வந்தார். அங்கு தான் ஏற்கனவே செதுக்கி வைத்திருந்த கற் சிலுவையை அணைத்தவாறே செபித்துக் கொண்டிருந்தார். அங்கு கொலையாளிகள் அவரைப் பார்த்துவிட, கோவில் அர்ச்சகர்களில் ஒருவன் ஈட்டி ஒன்றை எடுத்து தோமாவைக் குத்தினான். அவன் குத்தியபோது, தோமாவின் இதயப்பகுதி தாக்கப்பட்டது. சிறிதுநேரத்தில், தோமாவின் இதயத்துடிப்பு நின்றுவிட, மரணமும் அடைந்தார் தோமா. கொஞ்ச நேரத்தில் சீடர்களும் வர ஆரம்பித்தார்கள். வந்தவர்கள் தோமாவின் உடல் இரத்தத்தால் நனைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தார்கள். அவர் செதுக்கிய கற்சிலுவையும் தோமாவின் இரத்தத்தால் நனைந்தது. இக்கோலத்தைக் கண்ட மக்கள் தோமாவால் திருநிலைப்படுத்தப்பட்ட பவுலோஸ் எனும் ஆயரிடம் முறையிட்டார்கள். அவரும் அங்குவந்து தோமாவின் உடலைப் பார்த்தார்.



ஆயரும், மற்ற மயிலாப்பூர் மக்களும் அரசனிடம் பேசிப்பார்த்து பக்கத்திலுள்ள மைலாப்பூர் கடற்கரையில் அவர் உடலை அடக்கம் செய்ய கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் வேண்டுகோளும்

நிறைவேற்றப்பட்டது. அன்று மைலாப்பூர் கலாமினா என்றும் அழைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தோமா இறந்தது கி.பி. 72 ம் ஆண்டு ஜூலை 3-ஆம் தேதி என்று கூறப்படுகிறது.

ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் இறை இயேசுவுக்காக பல்வேறு பயணங்களை மேற்கொண்டு, இயற்கை மற்றும் செயற்கை இழைத்த இடர்களையெல்லாம் தாங்கிக்கொண்டு மறைபணி ஆற்றியிருக்கிறார் தோமா. இறைவனும், அந்தக் குறிப்பிட்ட நாள் அன்று தோமாவை தன்னிடம் அழைக்க முடிவுசெய்து விட்டார். தோமாவின் அப்போஸ்தலப் பணிபோதும் என்று முடிவுசெய்த இயேசு, ஜூலை 3, கி.பி. 72-ஆம் ஆண்டு தம்மிடம் அழைத்துக் கொண்டு விட்டார். தோமாவும் இதர அப்போஸ்தலர்களைப் போல இரத்தத்தால் இயேசுவிற்கு சாட்சியாகி விட்டார்.

இயேசுவுடன் பாலஸ்தீனாவில் ஒருமுறை தோமா, "வாருங்கள் நாமும் போவோம், அவரோடு இறப்போம்" (யோபு 11 : 16) எனக் கூறியதாகப் பார்க்கிறோம். அப்போது, இயேசு அந்த வாய்ப்பை ஏற்கவில்லை. தோமாவுக்கு வேறு மிக முக்கிய பொறுப்புகளையெல்லாம் கொடுக்க எண்ணியிருந்தார். ஆனால், இப்போது அவ்வேலையெல்லாம் முடிந்துவிட்டது. அதனால், தோமா இறைவனால் அழைக்கப்பட்டு விட்டார் அதுவும் நிரந்தரமாக.

தோமா புதைக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்ட பிறகு, ஒரு பெரிய கல்லறை செய்யப்பட்டது. அதுவும் மன்னனே கல்லறை செய்ய ஆணையிட்டதாகவும் சொல்லப்படுகிறது. சில சரித்திர ஆசிரியர்கள், மன்னன் மகாதேவன் தோமாவுடன் நல்லுறவுடன்தான் இருந்தான் எனவும், ஆலய அர்ச்சகர்கள் தான் தோமாவை விரோதித்து, ஈட்டியால் குத்திக் கொன்று விட்டார்கள் எனவும் கூறுகிறார்கள். மன்னனே, தமது தூதுவரை தட்சசீல நகருக்கு அனுப்பி, தோமாவை வரச்சொல்லி வேண்டிக் கொண்டதையும் சுட்டிக்காட்டுகிறார்கள். எது எப்படியோ? தோமா ஈட்டியால் குத்தப்பட்டு வேதசாட்சியானார் என்பது மட்டும் உண்மை.

தோமாவின் திருப்பண்டங்கள்

தற்சமயம் மயிலாப்பூர் கல்லறையில் தோமாவின் சில திருப்பண்டங்கள் இருக்கின்றன (இதைப்பற்றிய விவரங்கள் பிறகு).

தோமா மரணமடைந்த பிறகு, அங்குள்ள கிறிஸ்தவர்கள் மேலும் பல இடர்கள் வரலாம் என எண்ணி, வேறு இடங்களுக்குப் போயிருப்பார்கள். சிலர் மலபார் பகுதிக்கும், வேறுசிலர் தென்பகுதிக்கும்

போயிருப்பார்கள். நாளாக நாளாக தோமாவின் கல்லறை அதிகம் கவனிப்பாரற்று இருக்க வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டது. சிரியன் கிறிஸ்தவர்கள் (எடெசாவில் உள்ளவர்கள்) தமது அபிமானத்திற்குரிய அப்போஸ்தலர் இவ்வாறு இருப்பதை விரும்பாமல், அவருடைய திருவுடலை எடுத்துக்கொண்டு தமது நாட்டிற்கே கொண்டு செல்ல நினைத்திருக்கலாம். எடெசா பகுதி கிறிஸ்தவர்கள் மயிலாப்பூர் வந்து கல்லறைப் பகுதியிலிருந்து தோமாவின் திருப்பண்டங்கள் சிலவற்றை எடுத்துக்கொண்டு போயிருக்கலாம். சில திருப்பண்டங்களை கல்லறைக்குள் விட்டுச் சென்றிருக்கலாம்.

ஏன் பாதி திருப்பண்டங்கள்? பாதி திருப்பண்டங்கள்தான் எடெசாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டதாக 1547-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட சிலுவையிலிருந்து ஒரு குறிப்பு காணப்படுகிறது. திருச்சியைச் சேர்ந்த தந்தை பார்த்தே என்பவர் அச்சிலுவையிலிருக்கும் எழுத்துக்கள் அரபு மொழியிலும், தமிழிலும் இருப்பதாகக் கூறினார்.

ரூபினஸ் என்பவர் கூறுவதுபோல் தோமாவின் சில திருப்பண்டங்கள் கி.பி. 371-ஆம் ஆண்டிற்கு முன்னர் எடெசாவிற்கு செல்லப்பட்டது. கொரமண்டல் பகுதி மன்னன் இதை அனுப்ப, அப்போதைய ரோம் மன்னன் இதை வேண்டி கேட்டுக்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

கி.பி. 1142-ஆம் ஆண்டு, ஜாங்கி அமீர் என்பவன் தலைமையில் முகமதியர்கள் எடெசா பகுதியை ஆக்கிரமிக்கும் போதும், தோமாவின் திருப்பண்டங்கள் அவ்வூரில்தான் இருந்தன. ஒரு வருடம் கழித்து, கிறிஸ்தவர்கள் அவ்வூரை தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்கள். சிறிதுகாலம் கழித்து ரூர்தீன் என்பவன் (இவன் ஜாங்கி அமீரின் மகன்) மீண்டும் எடெசாவை ஆக்கிரமித்தான். இதைக்கண்ட அவ்வூர் கிறிஸ்தவர்கள் தோமாவின் திருப்பண்டங்களை 'சீயோஸ்' எனும் தீவிற்கு கொண்டு சென்றார்கள். இத்தீவும் முகமதியர்களிடம் சிக்கவே. தோமாவின் திருப்பண்டங்களை 1289-ஆம் ஆண்டு இத்தாலியிலுள்ள 'ஓர்தீனா' என்ற தீவிற்கு கிறிஸ்தவர்கள் கொண்டு சென்றார்கள். இன்றுவரை அவை அங்குதான் இருக்கின்றன.

கி.பி. 373-ஆம் இறந்த, புனித எப்ராயிம் எனும் சிரிய நாட்டு கவிஞர் சில பாடல்கள் பாடியிருக்கிறார். அப்பாடல்களில் எல்லாம் தோமாவின் சில திருப்பண்டங்கள் எடெசாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டிருப்பதைப் பற்றித்தான் குறிப்புகள் இருக்கின்றன.

கீழே இரு கவிதைகள் தரப்பட்டுள்ளன. இங்கு ஆங்கில கவிதைகள்தான் அதன் பொருள் மாறாமல் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருக்கின்றது.

"இருள்சூழ்ந்த நாட்டிற்கு புனித தோமா அனுப்பப்பட்டார்
அங்குள்ள மக்களை வெள்ளை உடையால் ஞானஸ்நானம் செய்தார்
அவருடைய இரக்கமுள்ள ஒளி இந்தியாவின் இருட்டை விரட்டியது
அவருடைய மறைபணியே இந்தியாவிடம் இறைமகனிடம்
கொண்டு சேர்ப்பதே
எடெசாவிற்கு மிக உயர்ந்த செல்வங்களை (தோமாவின்
திருப்பண்டங்களை) கொண்டுவந்த வியாபாரி ஆசீர்வதிக்கப்படுவார்
அதனால், எடெசா ஆசீர்வதிக்கப்பட்டது.
தோமா இந்தியாவிலும் எடெசாவிலும் புதுமைகள் புரிகிறார்
தோமா ஞானஸ்நானமும் கொடுக்கிறார் இந்தியாவிலுள்ள மக்களுக்கு"

மற்றொரு கவிதையில், பிசாசு புலம்புவதாக எழுதப்பட்டிருக்கிறது.

"நான் எங்கு நீதிமானிடமிருந்து ஓடிப்போவேன்?
நான் தூண்டி அப்போஸ்தலரைக் கொல்ல வைத்தேன்.
ஆனால் அவர் இறந்தபின் நான் இன்னும் துன்புறுகிறேன்?
இந்தியாவில் நான் கொன்ற அப்போஸ்தலர், எடெசாவிற்கு வந்து விட்டார்
இங்கும் இருக்கிறார், இந்தியாவிலும் அதிகாரத்தோடு இருக்கிறார்
வியாபாரிகள் அவருடைய திருப்பண்டங்களை, அவரைக் கொண்டு
வந்து விட்டார்கள்
அவர்களுக்கு நன்மைகள் கிடைத்தது, எனக்கோ தீங்குதான் கிடைத்தது.
தோமாவின் திருப்பண்டங்கள் என்னை ஆதிகால நரகத்திற்கு
தள்ளுகிறது.
அதில் என்னை துன்பப்படுவதற்கான மறைபொருள் இருக்கிறது.

(மேலே சொல்லப்பட்ட இரு கவிதைகளும் ஆங்கில மூலத்திலிருந்து மொழிபெயர்ப்பு செய்யப்பட்டவை. பொருள்தான் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது. வரிக்கு வரி மொழிபெயர்ப்பு செய்யப்படவில்லை).

6

சான்றுகள்

- *தோமா இந்தியா வந்ததற்கான சான்றுகள்*
- *கல்லறைச் சான்றுகள்*
- *கல்லறை தோண்டப்படும்போது*
- *கல்லறையின் புகழ் பரவுதல்*

தோமா இந்தியா வந்ததற்கான சான்றுகள்

சிரியர் புத்தகம் ஒன்று தோமாவை இந்தியாவோடு தொடர்புபடுத்துகிறது. 'அப்போஸ்தலர்களின் போதனை' என்ற சிரியாக் மொழி புத்தகமானது (கி.பி. 250) இவ்வாறு கூறுகிறது. "யூதா தோமாவிடமிருந்து தான் இந்தியா, அதைச்சார்ந்த நாடுகள் மற்றும் தூரதேசக் கடல் பிரதேசங்கள் அப்போஸ்தலிக்கக் குருத்துவத்தைப் பெற்றுக் கொண்டன. தோமா அங்கு சபையைக் கட்டி, அதன் வழிகாட்டியாகவும் தலைவராகவும் இருந்தார்."

அதே புத்தகத்தில், "யாக்கோபு எருசலேமிலிருந்தும், சீமோன் ரோமையிலிருந்தும், யோவான் எபேசுவிலிருந்தும் மாற்கு அலெக்சாந்திரியாவிலிருந்தும், அந்திரேயா பிரிஜியாவிலிருந்தும், லூக்கா மசடோனியாவிலிருந்தும், யூதா தோமா இந்தியாவிலிருந்தும் நிருபங்கள் எழுதியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிருபங்கள் எல்லா சபைகளிலும் வாசிக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. ஏன்? "புனித தோமாவின் நடபடிகள்" என்ற நூலே, தோமா இந்தியாவிலிருந்து அனுப்பிய கடிதங்கள் போன்றவற்றை ஆதாரமாக வைத்துக் கொண்டுதான் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கூறுகிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

சிரியா சபையானது முக்கியமாக எடெசாவிலுள்ள கிறிஸ்தவர்கள் தோமா மேல் அதிகம் பக்திகொண்டு, பாடல்களும் இயற்றியதாக ஏற்கனவேப் பார்த்தோம். எடெசா நகர் கிறிஸ்தவர்கள் (கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் உலகின் மிகப்பெரிய கிறிஸ்தவ மையங்களும் ஒன்றாக விளங்கியது). புனித தோமாவின் சில திருப்பண்டங்களையெல்லாம் தமது நாட்டிற்குக் கொண்டுவர முயற்சித்தார்கள் எனவும் அறிகிறோம். அவர்கள், தோமா இந்தியாவில்தான் மரித்தார் எனவும், அவருடைய திருப்பண்டங்கள்தான் எடெசாவிற்கு கொண்டுவரப்பட்டது எனவும் கூறுகிறார்கள்.

கி.பி. 396-ஆம் ஆண்டு மரித்த சிரிலோனாஸ், (இவரும் எடெசா பகுதியிலுள்ளவர்தான்) அனைத்துப் புனிதர் தினத்தன்று ஒரு பாடல் பாடியிருக்கிறார். அதில் இவ்வாறு வருகிறது - "பேதுரு ரோமையில் போதித்ததுபோல், தோமாவும் இந்தியாவில் போதித்தார்." கி.பி. 521-ஆம் ஆண்டு மரித்த ஜேக்கப் என்ற பாட்னே ஆயரும் தமது கவிதையில் இதே கருத்தைக் கூறுகிறார்.

கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புனித கிரகோரி நசியான்சன். "உலகின் எப்பக்கமும் நற்செய்தி பரவ உலகம் எங்கும் சென்ற அப்போஸ்தலர்கள் அந்தந்தப் பகுதி மக்களிடையே அந்நியர்களாய் தான் வாழ்ந்தார்களே. புறவினத்தாரோடு, பவுல் அக்காபியா மக்களுடன் லூக்கா,

எப்பிரூஸ் மக்களுடன் அந்திரேயா, எபேசு மக்களுடன் யோவான், இந்திய மக்களுடன் தோமா . . ." என்று எழுதியிருக்கிறார்.

அதே நூற்றாண்டில் வாழ்ந்த புனித அம்புரோஸ் "மலைகளால் சூழப்பட்ட நாடுகளுக்கு முதலாய் அப்போஸ்தலர்கள் சென்றார்கள் - தோமா இந்தியாவிற்கு மத்தேயு பெர்சியாவிற்கு" என எழுதியிருக்கிறார்.

அதே நூற்றாண்டு புனிதரான எரோணிமூஸ் (St. Jerome) "நமது ஆண்டவர் அந்த நாற்பது நாளிலும் எல்லா இடங்களிலும் தங்கித்தான் வாழ்ந்தார். தோமாவோடு இந்தியாவிலும், பேதுருவோடு ரோமை நகரிலும்" என எழுதியிருக்கிறார்.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு புனிதரான 'யோவான் பொன்வாய்' என்பவர், "அனேகம் அப்போஸ்தலர்கள் எங்கு புதைக்கப்பட்டார்கள் என்பது நமக்கு தெரியாது. ஆனால் பேதுரு, பவுல், யோவான், தோமா ஆகியோரின் கல்லறைகள் எங்கு இருக்கின்றன என்பது நமக்குத் தெரியும்" என்கிறார்.

கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புனித பீட் இவ்வாறு எழுதியிருக்கிறார். "கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் உலகின் வெவ்வேறு பகுதிகளில் தங்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள். பேதுரு ரோம், அந்திரேயா, அக்காயியா, யாக்கோபு ஸ்பெயின், தோமா இந்தியா. . ." என எழுதியிருக்கிறார்.

"பீட் வேதசாட்சிகளின் பட்டியல்" ஜூலை 3-ஆம் தேதி, புனித தோமாவின் பூதவுடல் இந்தியாவிலிருந்து எடெசா நகர்க்கு மாற்றப்பட்ட நாள் எனக் குறிப்பிடுகிறது.

"ரோம் வேதசாட்சிகளின் பட்டியல்" நூலில் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. "டிசம்பர் 21 அன்று புனித தோமா அப்போஸ்தலர் கலமீனாவில் (அதாவது மயிலாப்பூர்) உயிர்நீத்தார். பார்த்தியா, மேதியா, பெர்சியா, சிக்கானியா முதலிய தேசத்தார்க்கு போதனை செய்தபின் இந்தியாவிற்கு வந்தார். இங்கு பல மக்களை கிறிஸ்தவ மறைக்குக் கொண்டு வந்தார். இறுதியாக, ஓர் அரசனின் ஆணைப்படி, ஈட்டியால் குத்தப்பட்டு மரித்தார்."

கான்ஸ்டான்டிநாபிள் - புனிதர்கள் வரலாற்று நூலில் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. "புனித தோமா பார்த்தியர்கள், மேதியர்கள், பெர்சியர்கள், இந்தியர்கள் ஆகியோருக்கு போதித்தார். இறுதியில், இந்தியர்களின் அரசனால் கொல்லப்பட்டார்."

சில ஆராய்ச்சியாளர்கள் அப்போஸ்தலர்கள் தாங்கள் சீட்டு போட்டு நாடுகளைப் பகிர்ந்து கொண்டதாகக் கூறுகிறார்கள். அதன்பிரகாரம்,

தோமாவுக்கு பார்த்தியா நாடுதான் பணித்தூது விழுந்தது. ஓரிஜின் வரலாற்றாசிரியர் முதன்முதலில் இவ்வாறு குறிப்பிடுகிறார். ஆனால் ஓரிஜின் எழுத்துக்கள் தொலைந்துபோய் விட்டது. ஆனால், யூசேபியஸ் சரித்திர ஆசிரியர் அவர் கூறியதாக பல செய்திகளை நமக்குக் கூறுகிறார். ரூபினஸ் என்பவரும், சாக்ரடீஸ் என்பவரும் கூட மேற்சொன்னதைக் கூறுகிறார்கள்.

ஓரிஜின், தோமாவுக்கு பார்த்தியா நாடுதான் மறைபணிக்குக் கிடைத்தது என்கிறார். (பார்த்தியா என்பது இன்றைய ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் பகுதியைக் குறிக்கிறது). அப்போஸ்தலர்கள் தங்களுக்குக் கிடைத்த நாடுகளில் தான் மறைபணி ஆற்றாமல், தூய ஆவியானவர் தூண்டுதல்படி இதர நாடுகளுக்கும் சென்றார்கள்.

எடுத்துக்காட்டாக -

* பார்த்தொலொமேயுவிற்கு மத்திய இந்தியாவில் பணித்தூது விழுந்தது. கல்யாண் பகுதிக்கு வந்து, மறைபணி ஆற்றி ஆர்மேனியாவிற்கு சென்றார். இன்று, இவர் ஆர்மேனியாவின் அப்போஸ்தலர் ஆகிவிட்டார்.
* அந்திரேயாவிற்கு சித்தியா நாடுதான் மறைபணி ஆற்றுவதற்குக் கிடைத்தது. சிறிதுகாலம் அங்கு மறைபணியாற்றியபின் அக்காயியா (கிரேக்க நாட்டின் தென்பகுதி) பகுதிக்கு வந்து, வேதசாட்சியாக சிலுவையில் மரித்தார்.

நான்காம் நூற்றாண்டில்தான் அனைத்து அப்போஸ்தலர்களைப் பற்றிய மறைபணிகள் எல்லோருக்கும் தெரிய ஆரம்பித்தது. அதற்கு முன்பு, அந்தந்தப் பகுதிகளின் மக்களுக்கு மட்டும்தான் தெரிந்திருந்தது.

கல்லறைச் சான்றுகள்

பல்வேறு வரலாற்று ஆசிரியர்களும், இறையியல் வல்லுநர்களும் தோமா மரித்த இடமாக குறிப்பிடுவது இன்றைய மைலாப்பூர் எனக் கூறப்படுகிறது. ஆனால், இவ்வூர் பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டு வந்தது. இவ்வூர் கலமீனா, மரூப், மாபான், மோபார், மைலாப்பூர், மயிலான் என்று பல பெயர்களால் அழைக்கப்பட்டு வந்திருக்கிறது.

முதல் சில நூற்றாண்டுகளில் இவ்வூருக்கு 'கலமீனா' என்றே பெயர் இருந்திருக்கிறது. அல்லது அவ்வாறு அழைக்கப்பட்டிருக்கிறது. புனித தோமாவின் கல்லறையோடு தொடர்பு கொண்ட சிரியர்கள் (Syrians) அப்போஸ்தலர் இறந்த இடத்தை 'கல்மீனா' என்றே குறிப்பிடுகிறார்கள். அச்சொல்லுக்கு பாறைக்குன்று அல்லது கடினமான மண்குன்று என்று அர்த்தம். ஆக, கல்மீனா நாளடைவில் கலமீனாவாக மாறியிருக்கலாம்.

சிரியர்கள் மைலாப்பூர் என்ற ஊர் பெயரை விட்டுவிட்டு, தோமா இறந்த இடம் ஓர் மலை என்பதால் இவ்வாறு அழைத்திருக்கலாம் என சில ஆராய்ச்சியாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

(Roman Martyrology) ரோமையர் மறைசாட்சிப் பட்டியல் நூலில், தோமா இந்தியாவின் அரசர்களால் கொலையுண்டார் எனவும், கலமீனா எனும் இடத்தில் ஈட்டியால் குத்துண்டு இறந்தார் எனவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

செவில் புனித இசதோர், ஸ்யுடோ கிப்போஸித்துஸ் போன்றோரும் (கி.பி. 7-ஆம் நூற்றாண்டு) தோமா கலமீனாவில் இறந்தார் என்றேக் குறிப்பிடுகிறார்கள்.

இனிவரும் சாட்சிகள் எல்லாம், தோமா இறந்த இடத்தைக் கலமீனா என்று அழைக்காமல் வேறு பெயர்களால் அழைப்பதைப் பார்க்கலாம்.

பசாரா நகரத்து ஆயரான மார்சலோமோன் (கி.பி. 13-ஆம் நூற்றாண்டு) என்பவர், தோமா இந்தியர்களுக்கு போதித்து, இந்திய அரசனின் மகளுக்கு திருமுழுக்கு அளித்ததால், ஈட்டியால் குத்திக் கொல்லப்பட்டார் . . . . . அவர் இந்தியாவிலுள்ள **மலாப்பில்** அடக்கம் செய்யப்பட்டார் என கூறுகிறார்கள் என்று எழுதியிருக்கிறார்.

கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் நெஸ்தோரியர் அமிர் என்பவர், தோமாவின் கல்லறை இந்தியாவின் **மையிலான்** எனுமிடத்தில் அமைந்திருக்கிறது என்று கூறுகிறார்.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில், வெனீஸ் நகரத்து மார்க்கோபோலோ யாத்ரீகர், தோமாவின் கல்லறையையும் பார்த்ததாக எழுதியிருக்கிறார். அப்போஸ்தலர் புனித தோமாவின் உடல் **மாபார்** பகுதியில் வைக்கப்பட்டிருக்கிறது. அவ்வூரில், குறைவான மக்களே வசித்து வந்தனர் என எழுதியிருக்கிறார்.

கி.பி. 14-ஆம் நூற்றாண்டில், இந்தியாவிற்கு திருப்பயணம் மேற்கொண்ட பிரான்சிஸ்கன் சபைகுரு ஒடரிக் என்பவர், பத்துநாள் யாத்திரை செய்து **மோபார்** எனும் இடத்தை அடைந்தோம். அங்கேதான் அப்போஸ்தலரான தோமாவின் திருவுடல் வைக்கப்பட்டிருக்கிறது என எழுதியிருக்கிறார்.

அதே நூற்றாண்டில் ஜான் நேமாரிரொல்லி எனும் ஆயர், இந்தியாவின் மூன்றாவது மாநிலமான **மாபார்** என்ற இடத்தில் புனித தோமாவால் கட்டப்பட்ட ஆலயம் உள்ளது என எழுதியிருக்கிறார்.

கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், நெஸ்டோரின் சபையின் தலைவர் கத்தோலிக்குஸ் என்பவர்க்கு மலபார் கடற்கரையிலிருந்து

நான்கு நெஸ்டோரிய ஆயர்கள் இவ்வாறு எழுதுவதாகப் பார்க்கிறோம். புனித தோமா அப்போஸ்தலரின் வீட்டில் (அதாவது கல்லறை) சிலர் தங்கியிருந்து அதை பழுதுபார்க்கின்றார்கள். இந்தியாவிலுள்ள **மெலியாப்போர்** என்ற கடற்கரை நகரில் இது இருக்கிறது.

பண்டைய நாளில், முதல் நூற்றாண்டில் இருந்தே, பிரபலமான இந்திய நகரம் மைலாப்பூர். இவ்வூர் தற்பொழுது சென்னையின் ஒரு பகுதியையே குறிக்கிறது. சொல் உச்சரிப்பிலும், எழுதுவதிலும் பிற்காலத்தில் பலநாட்டு மக்களால் வேறுபாடுகள் இருந்தாலும், ஆனால் மேற்கூறிய சாட்சிகளால் கூறியவை அனைத்தும் இன்றைய மைலாப்பூரையே குறிக்கிறது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

கல்லறை தோண்டப்படும்போது . . .

கி.பி. 1517-ல் மைலாப்பூருக்கு போர்த்துக்கீசியர்கள் வந்தபிறகு, டியாரகோ பெர்ணான்டெஸ் மற்றும் பாஸ்தியோ பெர்ணாண்டஸ் ஆகியோர் ஆர்மீனியர் மக்களோடு தோமாவின் கல்லறையைப் பார்க்க வந்தார்கள். அது பாழடைந்த நிலையில் காணப்பட்டதாகத் தெரிகிறது. அங்கு ஒரு **'முஸ்லிம்'** கல்லறையைப் பாதுகாத்து வந்ததாகத் தெரிகிறது. அங்கு ஒரு விளக்கை ஏற்றி பாதுகாப்பு அளித்துவந்த அவன் மூதாதையர்களும் அவ்வாறே செய்ததாகத் தெரிவித்தான். இவ்விடம், 'பெத்துமா' (Bethuma) அல்லது 'தோமா வீடு' என்று அழைக்கப்பட்டது. ஆக முஸ்லிம்களும் தோமாவை மரியாதைக்குரியவராக நடத்தி வந்தார்கள் எனத் தெரிகிறது.

கி.பி. 1523-ஆம் ஆண்டு ஜூன்மாதம் முறையாக கல்லறையைத் தோண்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. கல்லறை தோண்டப்பட்ட விவரங்கள் அனைத்தும் டியாகோ பெர்ணான்டெஸ் என்பவர் எழுதி வைத்திருக்கிறார். கஸ்ப்பார் கொய்லியோ என்பவர் இச்செயலுக்கு பொறுப்பாளராக விளங்கினார். இவர் ஒரு குரு என்பது குறிப்பிடத்தக்கது. கல்லறையை பதினாறு அடி தோண்டியபின் கிடைத்தவை -

- முதலில் மணலும், சுண்ணாம்பும் கிடைத்தன இவைகளை நீக்கிவிட்டார்கள்.
- பிறகு மண்டை ஓட்டுத்துண்டுகள், முதுகெலும்பு சிலவும் இருந்தன.
- கல்லறைக்கு அடியில் ஆறு காலன் கொள்ளளவு மண்குடம் இருந்தது. அம்மண்குடத்தில் நிறைய மண் இருந்தது.
- மூன்றடி உயரத்தில் மரக்கைப் பிடியோடு ஒலிவ இலை உருவத்தில் செய்யப்பட்ட மலபார் இரும்பினால் ஆன ஒரு ஈட்டியும் கண்டெடுக்கப்பட்டது.

பிறகு, கப்பல் மாலுமி (மனுவேல் தெ பெரியா) ஒருவரைக் கூப்பிட்டார்கள். எலும்புகள் எல்லாம் ஒரு சிறு பெட்டிக்குள் சேமிக்கப்பட்டது. பிறகு, ஆடம்பர ஊர்வலம் நடத்தப்பட்டு, பிறகு பூட்டியும் வைக்கப்பட்டது.

கி.பி. 1729-ஆம் ஆண்டு புனித தோமாவின் கல்லறை மீண்டும் தோண்டப்பட்டது. மயிலாப்பூர் ஆயர் ஜோசப் பிந்நேரே என்பவர் வேராப்புழை ஆயருக்கு ஒரு கடிதம் வரைந்தார். அதில் சில தகவல்கள் காணப்படுகின்றன. அக்கடிதத்தில் இருந்து பின்வரும் தகவல்களை நாம் அறியலாம்.

- திருயாத்ரீகளுக்கு மண் எடுத்துக் கொடுப்பதற்காக, 1729-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் கல்லறை மீண்டும் திறக்கப்பட்டது.
- சலவைக் கற்பலகையை தோண்டியபின், கல்லால் செதுக்கப்பட்ட தோமாவின் உருவம் கண்டுபிடிக்கப்பட்டது. அதில், அவர் பாதம் வரை தொங்கும் அங்கி அணிந்தவராகவும், இடது கையால் புத்தகத்தை அணைப்பவராகவும், வலதுகையால் ஆசீர் அளிப்பவராகவும் காணப்படுகிறார்.
- ஆறு அடி தோண்டப்பட்ட பிறகு அங்கு பளிங்கு கற்பொடிகளும், கலவை மண்ணும் சேர்ந்து இறுகி நான்கு அங்குல உயரத்திற்குக் காணப்பட்டது.
- அடுத்து, மூன்று அடி பரப்புள்ளதும், நான்கு மூலைகளிலும் நான்கு கல்லறை வடிவங்கள் பதிக்கப்பட்ட ஒரு சதுர பளிங்குக் கல் காணப்பட்டது.
- பிறகு மணலும், அதற்கடியில் கலவை மண்ணால் நன்கு இணைக்கப்பட்ட பெரிய செங்கற்கள் காணப்பட்டன.
- செங்கற்களை உடைத்தபின், மண் காணப்பட்டது.
- இறுதியாக, ஒரு மனித உடலை மட்டும் அடக்கஞ் செய்யத் தேவையான இடம் காணப்பட்டது.
- அதே 29-ஆம் தேதி அன்று தெளிவான ஒளி ஒன்றும் பிரகாசமாய்க் காணப்பட்டது. இதனை ஏழு பேர் கண்டார்கள். பிறகு, அவர்கள் சாட்சிகளாகவும் விசாரிக்கப்பட்டனர்.

கி.பி. 1559-ஆம் ஆண்டு விஜயநகர் அரசர் அப்போஸ்தலரின் திருப்பண்டத்தை கொண்டு சென்றார். பிறகு, மீண்டும் கொடுத்து விட்டார்கள். திருப்பண்டங்களில் பாதியும், ஈட்டிமுனையும் லேபோ அல்மாடா எனும் குருவானவரால் எடுத்துச் செல்லப்பட்டு, கொச்சின்

ஆயர் டாம் ஜார்ஜ் டெமுடா என்பவர்க்கும் கொடுக்கப்பட்டது. சிலகாலம் கழித்து D. Fre. Andre de Sta. Maria எனும் ஆயர் கோவாவிலுள்ள புனித தோமா ஆலயத்திற்குக் கொடுத்து விட்டார். இக்கோவில் இடிந்துபோன பிறகு, திருப்பண்டங்கள் கொர்லிம் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இப்போது நிபாந்தர் நகரிலுள்ள கோவில் (கோவா) ஒன்றில் இவை காணப்படுகின்றன.

கல்லறையின் புகழ் பரவுதல்

தூர்ஸ் நகர் ஆயர் (பிரான்ஸ்) புனித கிரகோரி ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் இவ்வாறு எழுதுகிறார். இந்தியாவில் தோமாவின் உடல்



அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் ஒரு சன்னியாச மடமும், அழகுற அலங்கரிக்கப்பட்ட ஒரு கோவிலும் உள்ளன. இதை நேரில் பார்த்த தியோடர் நமக்கு அறிவித்தார். அந்நாட்களில் திருயாத்திரை போவது கிறிஸ்தவர் வழக்கமாக இருந்தது.

இங்கிலாந்து நாட்டு மன்னர்களுக்குக் கூட புனித தோமாவின் கல்லறை நன்கு தெரிந்திருந்தது. தென் இங்கிலாந்தை ஆண்ட ஒரு பெரிய அரசன் இந்திய அப்போஸ்தலரின் மன்றாட்டால் பல நன்மைகளை பெற்றுக்கொண்டதாக, ஆங்கிலோ சாக்சன் நாட்குறிப்பு கூறுகிறது.

ஆல்பிரட் எனும் மன்னன், லண்டன் நகரை எதிரியரிடமிருந்து காப்பாற்ற ஒரு நேர்ச்சை செய்து கொண்டார். அந்நேர்ச்சையின்படி அன்பளிப்புகளோடு தமது தூதர்களையும் அனுப்பினார். அவர் அனுப்பியது ரோம் நகர்க்கு, இந்தியாவிலுள்ள அப்போஸ்தலர் நகர்க்கும்தான்.

கி.பி. 883-ஆம் ஆண்டில் படைகள் கோந்தே எனும் நகர்வரை சென்று ஓர் ஆண்டளவு முற்றுகையும் இட்டது. மரினூல் எனும் போப்பாண்டவர் ஆல்பிரட் மன்னருக்கு திருச்சிலுவையின் ஒரு புனித பகுதியை அனுப்பி வைத்தார். அதே ஆண்டு சிக்கெல்ம் என்பவரும், எத்தல்ஸ்டென் என்பவரும் அரசனின் நேர்ச்சைப் பொருட்களை எடுத்துக் கொண்டு ரோம் நகர்க்கும், இந்தியாவிலுள்ள புனித தோமா, புனித பார்த்தொலொமேயு நினைவிடத்திற்கும் கொண்டு சென்றார்கள், காணிக்கைகளும் செலுத்தினார்கள்.

இ.எ. பிரீமன் எனும் புரட்டஸ்டாண்டு சரித்திர ஆசிரியர், ஆல்பிரட் மன்னர் ஏழைகளுக்கும், கிறிஸ்தவ சபைகளுக்கு ஏராளமான நன்கொடைகள் அனுப்பினார். ரோமை நகர்க்கும் தூதர்களை அனுப்பினார். ஜெருசலேம் நகர்க்கும் அனுப்பினார். அங்கு தந்தை ஆபேல் என்பவரிடமிருந்து கடிதங்கள் பெற்றுக் கொண்டார். இவையனைத்தையும் விட ஆச்சரியமானது என்னவெனில், இந்தியாவின் புனிதர்கள் தோமா, பார்த்தொலொமேயு என்பவர்களின் கிறிஸ்தவர்களுக்காக பெருந்தூரத்திலுள்ள இந்தியாவிற்கு நன்கொடைகள் அனுப்பியதுதான் என எழுதியிருக்கிறார்.

ஆல்பிரட் நன்கொடைகளை கடல்கடந்து ரோம் நகர்க்கும், இந்தியாவிலுள்ள தோமாவுக்கும் பல நன்கொடைகள் அனுப்பினார். இதற்காக அனுப்பப்பட்ட தூதர் செர்போன் நகர் ஆயரான சிஜேலினுஸ் என்பவராகும். இவ்வாறு எழுதுகிறார் மால்மஸ்பரி நகரைச் சேர்ந்த வில்லியம் என்பவர்.

கி.பி. 4-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மரிரொல்லி என்பவர் புனிதர்கள் வீரமரணம் எய்த கல்லறை மண்ணை உட்கொண்டதும் நோய்கள் குணமடைகின்றன என்கிறார்.

அப்போஸ்தலரின் கல்லறையிலிருந்து மண் எடுத்து, அதைப் பயன்படுத்தும் வழக்கம் அக்கால மக்களிடம் இருந்துவந்தது. அவர்கள் விசுவாசத்தைப் பொறுத்து புதுமைகளும் நடைபெற்று வந்தது.

கி.பி. 1293-ஆம் ஆண்டு, புனித தோமா கல்லறையை பார்வையிட வந்த மார்க்கோ போலோ எனும் வெனிஸ்நகர் யாத்ரீகர் இவ்வாறு எழுதியிருக்கிறார்.

கிறிஸ்தவர்கள் மற்றும் சரசினியர்கள் திருயாத்திரை செய்து இக்கல்லறையை தரிசிக்கிறார்கள். சரசீனியர் இவரை மிகப்பெரிய புனிதராக போற்றுகிறார்கள். அவரியான் என்றும் அழைக்கிறார்கள் (அவரியான் என்றால் புனித மனிதன் என்று அர்த்தம்). இவ்விடத்திற்கு வந்த கிறிஸ்தவர்கள் தோமா கொலை செய்யப்பட்ட இடத்திலிருந்து மண் எடுத்துச்சென்று நோயாளிகளுக்கு அளிக்கிறார்கள். இறைவனின் சக்தி மற்றும் தோமாவின் கருணையால் நோயாளி உடனே குணமடைகிறான். இம்மண் சிவந்த நிறமாகவும் இருந்தது.

டாக்டர் புக்ஞன் எனும் புரட்டஸ்டாண்டு எழுத்தாளர் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டார். பல ஆராய்ச்சிகள் செய்தபின், இவ்வாறு முடிவிற்கு வருகிறார். அப்போஸ்தலர் பேதுரு உரோம் நகரில்தான் இறந்தார் என்பதற்கு எவ்வளவு சான்றுகள் உள்ளனவோ, அவ்வளவு சான்றுகள் அப்போஸ்தலர் தோமா இந்தியாவில் இறந்தார் என்பதற்கும் உண்டு என கூறுகிறார் இவர்.

7

சென்னையில் தோமாவின் நினைவிடங்கள்

- *சின்னமலை*
- *பெரிய மலை (புனித தோமா மலை)*
- *சாந்தோம் பேராலயம், மயிலாப்பூர்*

சின்னமலை (Little Mount)

சென்னை சைதாப்பேட்டைக்கு அருகில் சின்னமலை பகுதி காணப்படுகிறது. கி.பி. 1551-ஆம் ஆண்டு போர்த்துக்கீசியர்கள் ஓர் ஆலயத்தைக் கட்டினார்கள். அப்போஸ்தலர் தோமாமீது பெரு மதிப்பு கொண்ட ஆற்காடு நவாப் 32 ஏக்கர் நிலப்பரப்பு அளித்து பராமரிப்பதற்காகவும் கொடுத்தார். போர்த்துக்கீசியர் கட்டிய ஆலயம் ஆரோக்கிய மாதாவின் பெயரைத் தாங்கியது. கி.பி. 1551-ல் கட்டப்பட்ட ஆலயம் போதுமானதாக இல்லை. எனவே, 1972-ஆம் ஆண்டு புனித தோமா வேதசாட்சியாய் மரித்து 19-ஆவது நூற்றாண்டை நினைவுகூரும் வகையில் சின்னமலையில் ஒரு வட்ட வடிவ தேவாலயம் கட்டப்பட்டது. இத்தேவாலய திருவிழா ஒவ்வொரு ஆண்டும் ஆண்டவர் உயிர்ப்பு தினத்திற்குப் பின்வரும் நான்காவது ஞாயிறு கொண்டாடப்படுகிறது.

சின்னமலை கோயில்

சோழமண்டலக் கடற்கரையில் (கொரமண்டல் பகுதி) தோமாவின் அப்போஸ்தலப் பணியோடு தொடர்புடைய மூன்று இடங்களில் இதுவும் ஒன்று.



சின்னமலைக்கோவில் அருகில் உள்ள புனித தோமா தங்கியிருந்த குகை

முன்பு சின்னமலையில் அடர்ந்த காடுகளும், முட்புதர்ச் செடிகளும்தான் இருந்தன. இம்மலையில் இயற்கையாகவே ஒரு குகை ஒன்று அமைந்திருக்கிறது. இப்போது பழைய கோவிலோடு அக்குகை சேர்ந்திருக்கிறது.

இக்குகை இயற்கை யாகவே, செயற்கைத் தன் மையின்றி காணப்படுகிறது.

இதன் அகலம் 14 அடி, நீளம் 15 அடி, உயரம் 7 அடி என அறியப்பட்டுள்ளது. பாறையிலிருந்து ஒரு இடைவெளி வழியாக சற்று சிரமப்பட்டு இந்தக் குகையில் நுழையலாம். இந்த இடைவெளி ஏறத்தாழ 5 அடி உயரம் கொண்டது. 1½ அடி அளவு அகலமும் உடையது. குகை வாயிலுக்கு எதிரே ஜன்னல் போன்ற திறப்பு (Opening) இருக்கிறது. அப்போஸ்தலர் தமது எதிரியிடமிருந்து தப்பிப்பதற்காக இத்திறப்பைத்தான் பயன்படுத்தினார் என்று கூறப்படுகிறது.

இதன் அருகே ஒரு பாறை உண்டு. அப்பாறை மேல் தோமாவின் விரல்பதிவு ஒன்றை நாம் இன்றும் காணலாம். அனேகமாக, நாம் ஏற்கனவே பார்த்தபடி இக்குகையில்தான் அவர் தங்கி ஒய்வு எடுத்தும் வந்தார்.

பழைய ஆலயத்திற்குப் பின்னால் உள்ள சமவெளி பகுதியில் ஓர் கற்பாறை உண்டு. அதன்மீது ஒரு சிலுவை செதுக்கப்பட்டிருக்கிறது. அதற்குமுன், அக்காலத்தில் தோமா செபித்ததாகவும் திருப்பலி நிறைவேற்றியதாகவும் கூறப்படுகிறது. இச்சிலுவை பெரிய மலையிலுள்ள கற்சிலுவையின் அளவைவிட சற்று குறைவானதாகத் தெரிகிறது.

சில்வெஸ்டர் டிசௌசா எனும் இயேசு சபை குருவானவர் பலகாலம் சின்னமலையில் வாழ்ந்திருக்கிறார். அவர் அச்சிலுவை அடிக்கடி வியர்வை துளிர்த்ததாகவும், தாம் அதைப் பார்த்ததாகவும் கூறியிருக்கிறார்.

சிலுவை அமைந்துள்ள பலிபீடப் பாறையின் அருகில் ஓர் அற்புத நீர் ஊற்று காணப்படுகிறது. இது புனித தோமா நீரூற்று என அழைக்கப்படுகிறது. இதைப்பற்றி ஏற்கனவே பார்த்திருக்கிறோம். புனித தோமா திரளான மக்களுக்கு போதித்துக் கொண்டிருக்கும்போது அவர்களுக்கு தாகம் எடுத்தது. பக்கத்தில் குளம், குட்டைகள் எதுவும் இல்லை. தோமா ஆண்டவரிடம் செபம் செய்து, இஸ்ராயேல் மக்களுக்கு எவ்வாறு இறைவாக்கினர் மோயீசன் பாறையைத் தட்டி தண்ணீர் வரச் செய்தாரோ, அதுபோலவே தோமாவும் செய்தார். மக்கள் பலர் நீரைப் பருகியதோடு, பிணியாளர் பலரும் நோய் நொடியிலிருந்து காக்கவும் பட்டார்கள். அந்நீர் இன்றும் மக்களால் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

இதற்கு எதிர்ப்புறம் அடையாறு நதியைப் பார்க்கும் விதமாக உயர்ந்த பாறைக்குன்று ஒன்று இருக்கிறது. அதில் தோமாவுக்கு இறைமகன் இயேசுவே காட்சிதந்த நிகழ்வுகள் சிலை வடிவில் காணப்படுகின்றன. தோமா தெய்வவாக்கை அறிவித்ததை நினைவுகூறும் விதமாக, பல நூற்றாண்டுகளுக்கு முன்பு ஒட்டப்பட்ட கிரானைட் சிலுவை ஒன்றும் இருக்கிறது.

பழைய ஆலயத்திற்கு முன்பு கீழ்ப்பகுதியில் காணப்படும் ஒரு பெரிய பாறையில் ஒரு கால்தடம் பதிந்திருக்கிறது. அது அப்போஸ்தலரின் பாதம் என்றும் கூறப்படுகிறது. இந்த பாதப்பதிவுக்கு சரிவிகித அளவில் குகைக்கூரையின் மீதுள்ள விரல்கள் பதிவும் இருப்பதை நாம் அறியலாம். இப்பாதப்பதிவு சற்று பெரிதாக இருப்பது, நூற்றாண்டுகள் செல்லச் செல்ல பாறை வளர்ச்சி அடைகிறது என்ற கூற்றை உண்மையாக்குகிறது. இப்பாதப் பதிவின் அருகே உள்ள இரண்டு கற்களில் தோமா புனிதரின் இரத்தமும், விரல் பதிவுகளும் காணப்படுகின்றன.

பெரியமலை (புனித தோமா மலை)

சின்ன மலையிலிருந்து ஆறுகிலோ மீட்டர் தெற்கே அமைந்துள்ளது பெரியமலை. இதற்கு இன்னொரு பெயரும் உண்டு. புனித தோமா மலை என்பதே பெயர். பதினைந்தாம் நூற்றாண்டிற்குப் பிறகு போர்த்துக்கீசியரும் ஆர்மேனியக் கிறிஸ்தவர்களும் இதற்குப் பல பெயர்களைக் கொடுத்தார்கள். ஆனால், தற்போது இம்மலையையும் அதைச் சுற்றியுள்ள பகுதியையும் புனித தோமா மலை - St. Thomas Mount என்றே அழைக்கிறார்கள். சிலசமயம் இது பரங்கிமலை எனவும் அழைக்கப்பட்டது.

இம்மலை 300 அடி உயரம் கொண்டது. இம்மலையிலும் தோமா அடிக்கடி செபத் தியானம் செய்துவந்தார் எனக் கூறப்படுகிறது. இம்மலையில் தாமே செதுக்கிய சிலுவையின் முன்பு செபித்துக் கொண்டிருக்கும்போது அப்போஸ்தலர் பின்னால் வந்து அவரை ஒரு காளிகோவில் பூசாரி ஒருவன் ஈட்டியால் குத்தி கொன்று போட்டான். தோமாவும் தம்முன்னிருந்த சிலுவையை அரவணைத்தவாறு உயிர்நீத்தார். தனது நெஞ்சம் திறக்கப்பட்டு பலியானார். இதனால், இம்மலைக்கு **'புனித தோமாவின் கல்வாரி'** என்ற பெயரும் உண்டு.

அப்போஸ்தலர் தோமா கொல்லப்பட்ட இடத்தில் ஒரு பெரிய பீடம் தற்போது இருக்கிறது.

கி.பி. 1523-ஆம் ஆண்டு இம்மலையில் போர்த்துக்கீசியர்கள் தேவ அன்னை பெயரால் ஒரு சின்ன செபக்கூடம் குருசடி போன்ற கட்டிடத்தைக் கட்டினார்கள். ஆனால், 10 பேர் கூட அதில் சேர்ந்து

செபிக்க முடியாமல் மிகச்சிறிய கட்டிடமாகத்தான் இருந்தது. திருயாத்திரையிலிருப்போர் இம்மலையை நாடிவர ஆரம்பித்தார்கள். அதனால், பெரிய கோவில்கட்ட தீர்மானிக்கப்பட்டது. ஏற்கனவே சான்றுகள் பகுதியில் பார்த்ததுபோல் 1547-ஆம் ஆண்டு மார்ச் மாதம் தோண்டினார்கள். சற்று தோண்டியபோது வேறு அஸ்திவாரக் கட்டிடம் ஒன்று இருப்பதையும் பார்த்தார்கள். இன்னும் சற்று ஆழமாகத் தோண்டியபோதுதான் ஒரு பெரிய எந்திரக்கல் போன்ற ஒரு கல்லைப் பார்த்தார்கள். அக்கல்லைத் திருப்பி போடும்போதுதான் ஒரு அழகான சிலுவை கண்களுக்கு தென்பட்டது. சிலுவையின் ஒரு பக்கத்தில் இரத்தக்கறை ஒன்றும் காணப்பட்டது. கோவிலைக் கட்டியபின் இப்புனிதக் கல்லை பீடத்தின் மேல் வைத்தார்கள். அதோடு, இச்சிலுவை அடையாளத்தோடு மண்நிறைந்த ஒரு பாத்திரமும் அங்கு 1596-ஆம் ஆண்டு கண்டெடுக்கப்பட்டது.

பெரியமலை
கோவிலிலுள்ள
கற்சிலுவை

அக்கோவில் தேவதாய் திருக்குழந்தையின் பிறப்பை எதிர்பார்த்ததன் நினைவாக எழுப்பப்பட்டது. (Our Lady of expectation). 1558-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 18-ஆம் தேதி பூசை நேரத்தில் இக்கற்சிலுவை திடீரென்று கருப்பாய் மாறத் தொடங்கியது. மேலும், அதிலிருந்து தண்ணீரும் வடிய ஆரம்பித்தது. துணியால் தோய்க்கக்கூடியளவு தண்ணீர் கசிந்தது. பூசை நிறைவேற்றிய கஸ்பார் கொய்வியோ குருவானவர் திருப்பலி முடிந்ததும், புனித பாத்திர சிறு துணியை கசிந்த அத்தண்ணீரில் தோய்த்து பாத்திரத்தில் வைத்தார். அடுத்தநாள் பார்க்கையில் இரத்தத்தால் தோய்க்கப்பட்ட துணிபோல் இது காணப்பட்டது. அதை எடுத்து மக்களுக்குக் காண்பித்தார். இப்புதுமை நான்கு மணிநேரம் நடந்தது. அதற்குப்பின் இக்கல் வெண்மையாகவும் பிரகாசமாகவும் காணப்பட, மக்களும் பரவசமடைந்தார்கள். இறுதியாக, இச்சிலுவை தனது சுயநிறத்தை அடைந்தது. அதிலிருந்து ஒவ்வொரு வருடமும் ஏறக்குறைய அதே திருநாளன்று திருப்பலி நேரத்தில், அதுவும் நற்செய்தி வாசகம் வாசிக்கப்படும்போது, அதே புதுமை நடந்து கொண்டுதான் இருந்தது.

இவ்வாறு கசிந்து வந்த தண்ணீரை சேர்த்து ஒரு நல்ல பாத்திரத்தில் பத்திரப்படுத்தி நோயாளிகளுக்கு மருந்துகள் போல் கொடுக்கும் வழக்கம் இருந்தது. இதைச் செய்யும்படி அப்போதைய கொச்சின் ஆயர் அவர்களும் கட்டளையிட்டதாகக் கூறப்படுகிறது.

1689-ஆம் ஆண்டு முதல் 1695 ஆண்டுவரை அதே திருநாளன்று தாமே கண்ணார இப்புதுமையைக் கண்டதாக சேசுசபை குருவான சில்வஸ்டர் டிசோவா கூறுகிறார்.

இப்புதுமையானது டிசம்பர் 18-ஆம் தேதி மட்டுமன்று மற்ற நாட்களிலும் நடந்ததுண்டு. 1581-ஆம் ஆண்டு ஆகமனகாலத்தில் முதல் ஞாயிறன்றும் கூட நடந்தது.

புனித லூக்காசால் வரையப்பட்ட தேவதாய் படம்

பெரியமலை கோவிலின் திருப்பீடத்தில் குழந்தை இயேசுவை ஏந்தியபடி பலகையொன்றில் வரையப்பட்ட தேவதாயின் படம் ஒன்று ஸ்தாபனம் செய்யப்பட்டிருக்கிறது. இப்படம், நற்செய்தியாளர் புனித லூக்காசால் வரையப்பட்டதென்றும், தோமா இந்தியாவிற்கு வரும்போது கொண்டுவந்தார் என்றும் கூறப்படுகிறது. கற்சிலுவை எடுக்கப்பட்ட இடத்திலிருந்து இத்திருப்படமும் அகப்பட்டது.

1726-ஆம் ஆண்டு தெசிதேரி எனும் இயேசுசபைக் குரு கிறிஸ்தவர்கள் மற்றும் இதர மதத்தினர் கூட இதை வழிபட்டதாகக் கூறுகிறார்.

இப்படம் தரையில் புதைக்கப்பட்டதன் காரணம் 16-ஆவது நூற்றாண்டில் இதைச் சுற்றியுள்ள அரசர்களின் போர் அழிவிலிருந்து பாதுகாப்பதற்காக இருக்கலாம். அதனால், அக்காலக் கிறிஸ்தவர்கள் இத்திருப்படத்தை புதைத்துவிட்டார்கள். சிறிதுகாலம் கழித்து இப்படம் மீண்டும் கண்டெடுக்கப்பட்டது. இப்படத்தைத் திருத்தி வர்ணம் தீட்டும் முயற்சிகள் எல்லாம் பலனற்றுப்போனது. ஆகவே, முன்பு எப்படி இருந்ததோ, அவ்வாறு இன்றும் இருக்கிறது.

சாந்தோம் பேராலயம் - மயிலாப்பூர்

இறை இயேசுவின் பன்னிரு அப்போஸ்தலருள் ஒருவரான தோமா அடக்கம் செய்யப்பட்ட இடத்தில்தான் தற்போது ஒரு பெரிய ஆலயம் கட்டப்பட்டுள்ளது. தற்பொழுதுள்ள ஆலயம் 1896-ஆம் ஆண்டு கட்டப்பட்டது. 1996-ஆம் ஆண்டு, அதன் நூற்றாண்டு விழா கூட கொண்டாடப்பட்டது. இறை இயேசுவின் அப்போஸ்தலரின் கல்லறை ஆலயம் என்பதால் இதன் முக்கியத்துவம் பற்றி நாம் சொல்லத் தேவையில்லை. இக்கல்லறைக்கு சென்னையிலிருந்து மட்டுமல்ல, தமிழகத்தின் இதர பகுதிகளிலிருந்தும், முக்கியமாக கேரளா பகுதியிலிருந்தும், இந்தியாவின் மற்ற பகுதியிலிருந்தும் (ஏன் இந்தியாவிற்கு சுற்றுலா வரும் யாத்திரீகளும் கூட) வருகை புரிகிறார்கள். அவர்கள் தோமாவின் கல்லறையைப் பார்வையிட்டு, வணக்கம் செய்து இறைவனிடமும் வேண்டுகிறார்கள். தற்போது கிறிஸ்தவர்கள் மட்டுமன்றி, இந்துக்களும், முஸ்லிம்களும் கூட கல்லறைக்கு வந்து வழிபடவும் செய்கிறார்கள்.



சாந்தோம் பேராலயம், மயிலாப்பூர்

சாந்தோம் பேராலயத்தில் பீடத்தின் முன்பு தோமாவின் கல்லறை காணப்படுகிறது. அக்கல்லறையினுள் இறங்கிச் சென்றால் ஒரு கதிர்ப்

புனித தோமா கல்லறை



எலும்புத்துண்டைக் கொண்டிருக்கும் கதிர்ப்பாத்திரம்

ஈட்டிமுனையைக் கொண்டிருக்கும் கதிர்ப்பாத்திரம்

பாத்திரத்தைக் காணலாம். அக்கதிர்ப் பாத்திரத்தில் தான் தோமாவின் விலாவினைக் காயப்படுத்திய ஈட்டிமுனையும், சில எலும்புத் துண்டுகளும் இருக்கின்றன. தோமாவின் மாண்பும், வணக்கமும், பணியும் பற்றிய விழிப்புணர்வு இத்தகைய ஆலயங்களை தரிசிப்பதால் மேம்படுகிறது.

அப்போஸ்தலர் மரணத்தையொட்டிய காலத்திலிருந்து, இன்றுவரை தோமாவின் கல்லறைபற்றி நிறைய குறிப்புகள் உள்ளன.

தோமாவின் மரணத்தை யொட்டிய காலத்தில் சிரியர்கள் இவரது திருப்பண்டங்கள் சிலவற்றை சிரியாவிலுள்ள எடெசா பட்டணத்திற்கு கொண்டு சென்றதை நாம் ஏற்கனவே பார்த்தோம்.

ஒன்பதாம் நூற்றாண்டில், இங்கிலாந்து மன்னன் ஆல்பிரட், இந்தியாவிலுள்ள தோமா கல்லறைக்கு நேர்ச்சை காணிக்கைகள் தமது தூதர் ஆயர் சிலெனிஸ் என்பவர் மூலம் அனுப்பியதாகவும் படித்தோம். அவ்வாயர் கடன் செலுத்தியது மட்டுமல்லாமல் திரும்பச் செல்லும்போது விலையுயர்ந்த கற்கள் மற்றும் வாசனைத் திரவியங்களோடு தாய்நாடு திரும்பியதாக நாம் பார்க்கிறோம்.

மத்திய யுகத்தில் அரேபிய யாத்ரீகர்கள் பலர் இந்தியா வந்தார்கள். அவர்களுள் சிலர் மைலாப்பூர் வரைக்கும் வந்து தோமாவின் கல்லறையையும் பார்த்தார்கள். இக்கல்லறையினை அவர்கள் தோமாவின் வீடு - Beth - Thoma என்று அழைக்கிறார்கள்.

கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டிற்குப் பிறகு, பல ஐரோப்பிய யாத்ரீகர்களும் இந்தியாவிலுள்ள தோமா கல்லறைக்கு வருகை புரிந்தார்கள். சீனாவிலிருந்து கி.பி. 1292-ஆம் ஆண்டு இந்தியா மைலாப்பூருக்கு வந்தார். மார்க்கோபோலோ எனும் புகழ்பெற்ற யாத்ரீகர். அவரும், தோமாவின் கல்லறையைப் பற்றி குறிப்பிடுகிறார். அவர் தோமாவை ஒரு இறைவாக்கினராகக் கருதினார்கள் என்றும் கூறுகிறார்.

ஆயர் ஜான் மோன்டோ கார்வினோ அவர்கள் சீனாவிற்கு போகும் வழியில் மைலாப்பூர் வந்து, பதின்மூன்று மாதங்கள் தங்கிவிட்டுத்தான் சென்றார்.

ஆயர் ஜான் டி மாலிதோனி கி.பி. 1350-ஆம் ஆண்டு போப் பாண்டவரின் பிரதிநிதியாக சீனாவிற்கு அனுப்பப்பட்டார். போகும் வழியில் கொல்லம் நகரில் பதினான்கு மாதங்கள் தங்கினார். அப்போது மைலாப்பூர் சென்று, தோமாவின் கல்லறையைப் பார்வையிட்டுத்தான் சென்றார்.

நிக்கோலோ கொன்டி என்ற மற்றொரு இத்தாலிய யாத்ரீகர் மைலாப்பூருக்கு 1425-30-ஆம் ஆண்டு விஜயம் செய்தார்.

கி.பி. 1500-ஆம் ஆண்டுவாக்கில் போர்த்துக்கீசியர்கள் ஆப்பிரிக்காக் கண்டத்தை சுற்றி, பிறகு இந்தியா வந்தார்கள். அவர்கள் மலபார் வந்து சேர்ந்தபோது அங்குள்ள கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையைக் கண்டு ஆச்சரியம் அடைந்துதான் போனார்கள். மைலாப்பூர் வந்து தோமாவின் கல்லறையைப் பார்த்தபின் அவர்கள் இன்னும் ஆச்சரியப்பட்டுப் போனார்கள்.

கி.பி. 1548-ஆம் ஆண்டு புனித பிரான்சிஸ் சவேரியார் எனும் பெரிய மறைபணியாளர் மைலாப்பூர் வந்தார். மொலக்கா தீவு செல்வதற்கு முன், மைலாப்பூரில் நான்குமாதம் காத்திருந்து விட்டுத்தான் சென்றார். அங்கு தோமாவின் கல்லறையில் செபம் செய்து இறைவனின் அருள் மிகப்பெற்றவராக திரும்பினார்.

கி.பி. 1606-ஆம் ஆண்டு, போப்பாண்டவர் பால் V இவ்விடத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, மைலாப்பூரை ஒரு தனி மறைமாவட்டமாக ஆக்கினார்.

ஏற்கனவே கூறப்பட்டதுபோல், இப்போதுள்ள ஆலயம் 1896-ஆம் ஆண்டு அபிஷேகம் செய்யப்பட்டது. இவ்வாலயம் கோதிக் முறைப்படி கட்டப்பட்டது. கடற்கரையில் அமைந்திருப்பதால், இதன் கோபுரம் பல மைல் தூரத்திலிருந்தே பார்க்கக் கூடியதாய் இருந்தது.

தோமாவின் பக்தர்கள் இன்றும், நாளையும் இக்கல்லறைக்கு வருகை தந்து கொண்டேதான் இருக்கிறார்கள்,

சாந்தோமில்லுள்ள மயிலை மாதா

இருப்பார்கள். அங்கு எரிந்து கொண்டிருக்கும் மெழுகுவர்த்திகளும், காணிக்கைப் பெட்டியும்தான் இதற்குச் சான்றுகள்.

கி.பி. 1986-ஆம் ஆண்டு தற்போதைய பாப்பரசர் இரண்டாம் ஜான் பால் பிப்ரவரி 5-ஆம் தேதி (இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் செல்கையில்) மைலாப்பூர் சாந்தோம் ஆலயத்திற்கு வந்தது குறிப்பிடத்தக்கது.

போர்த்துக்கல் ஆயரான டாம் ஹென்ரிக் ஜோசப் ரிட்டா டி சில்வா அவர்கள் தந்த ஒரு பரிசுப் பொருளாக சாந்தோம் பேராலயம் விளங்குகிறது.

சாந்தோம் பேராலயம் பற்றி சில விவரங்களும் தரப்படுகிறது. கோவிலின் நீளம் 112 அடிகள், அகலம் 33 அடிகள். ஆலயத்தின் ஆரம்பப்பகுதி முதல் பீடம் வரை மொத்தம் 64 அடி நீளம். ஆலயத்தின் இருபுறங்களில் கீழ்வரிசை மற்றும் மேல் வரிசையில் மொத்தம் 18 சன்னல்கள் உள்ளன.

பேராலய கோபுரத்தில் உச்சியளவு தரைமட்டத்திலிருந்து 155 அடி,

பீடத்தின் முன்புறம் ஒரு கோதிக். தரைமட்டத்திலிருந்து 41 அடி உயரம்,

27 அடி அகலம். ஆலயத்தின் வலது மற்றும் இடப்புற இரு வளைவுகளின் உயரம் 265 அடி. கோவிலின் அனைத்து வளைவுகளில் பல கல்வெட்டுகள் அமைக்கப்பட்டு, அதில் திராட்சைக் கொடி வடிவம் பொறிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் நடுப்புறத்திலிருந்து மேல்தளம் வரை 36.5 அடி உயரம். ஆலயத்தின் இருபுறம் உள்ள வராந்தாக்கள் 9 அடி அகலம் உடையன. முன்புறத்தில் உள்ள மூன்று கதவுகள் செவ்வக வடிவில் உள்ளன.

8

பிற்சேர்க்கை

- தோமாவின் குணநலன்களும், பங்களிப்பும்
- தேவதாயாரின் அடக்கத்திற்கு தோமா வருகை
- தோமாவின் திருவுடல் அடக்கத்தின்போது
- தோமாவின் நூற்றாண்டு விழா
- தோமாவின் திருவிழா
- பாதுகாவலர்
- தோமா பெயரால் மறைவு நூல்கள்

தோமாவின் குணநலன்களும், பங்களிப்பும்

The Uranta Book என்ற புத்தகத்தில் இயேசுவின் வாழ்க்கை மட்டுமன்றி, அவரது சீடர்கள் பற்றியும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்த புத்தகத்திலிருந்து தோமாவைப் பற்றி சில தகவல்களை நாம் தெரிந்துகொள்ள முடிந்தது. அதை இப்போது பார்க்கலாம்.

- இயேசுநாதர் ஜனவரி 12-ஆம் தேதி கி.பி. 27 மதியம்தான் 12 சீடர்களை தெரிவு செய்தார். அவர்களுக்கு அப்போஸ்தலர்கள் என்ற சிறப்புப் பெயரையும் கொடுத்தார்.

- தோமா இயேசுவின் சீடராக மாறும்போது அவர்க்கு வயது 29. திருமணமானவர். முதலில் தச்சுத் தொழிலாளியாகவும், பிறகு மீனவராகவும் இருந்தார். அவர் தாரிகே எனும் பகுதியில் வாசம் செய்து வந்தார். சராசரி யூதரைப்போல் கல்வியறிவு கொண்டவராக விளங்கினார். அவருடைய பெற்றோர் திபேரியாவில்தான் வசித்து வந்தார்கள். அப்போஸ்தலர் குழுவில் எதையும் ஆராய்ந்து பார்க்கும் திறனை அவர் கொண்டிருந்தார். அவர் விஞ்ஞானி மனப்பான்மையினைக் கொண்டிருந்தார்.

- தோமாவின் சிறுவயது பருவம் அவ்வளவு மகிழ்ச்சியாக இல்லையாம். அவருடைய பெற்றோர் பல்வேறு பிரச்சனைகளில் சிக்கித் தவித்து வந்தார்களாம். அதனால் தோமாவும் சிறிது கடின மனதுக்காரராக இருந்தாராம்.

- பன்னிரு அப்போஸ்தலரும் இயேசுவுடன் இருக்கையில் சில பொறுப்புக்களை எடுத்துக் கொண்டார்கள். அல்லது இயேசுவால் பொறுப்பை ஏற்றுக்கொள்ளக் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். அந்தவிதத்தில் பிலிப்பு உணவு தயாரிக்கும் பொறுப்பையும், பார்த்தொலொமேயு அப்போஸ்தலர்களின் பெற்றோர்களைக் கவனிக்கும் பொறுப்பையும், அல்பேயுவின் மகன்கள் யூதா - யாக்கோபு கூட்டங்களை ஒழுங்கு செய்பவர்களாகவும் இருந்தார்கள். அப்படியானால் தோமா? தோமா, இயேசு மற்றும் பன்னிருவரும் நற்செய்தி போதிப்பதற்கு இடம், ஊர், காலம், நேரம் போன்றவற்றை வடிவமைத்தார் என கூறுகிறார்கள். அந்த அலுவலை அவர் திறம்படச் செய்தார் எனவும் சொல்லப்படுகிறது.

- தோமாவிற்கு இயேசுவிடம் பிடித்தது - அவரது ஒரே நிலையான மனதுதானாம். அதுமட்டுமன்றி, நேர்மையான சந்தேகமுடையவர்

களை இயேசுவும் விரும்பியிருக்கிறார் என்பது தோமா மூலம் நமக்குப் புலப்படவும் செய்கிறது என்பதே உண்மை.

- தோமா அப்போஸ்தலர் கூட்டத்தில் தைரியசாலியாகவும் இருந்தார். அப்போஸ்தலர்களில் பேதுருவும், செபதேயுவின் மகன் யாக்கோபும் துணிவுகொண்ட மனங்கள் உடையவர்களாகக் கருதப்படுகிறார்கள். அந்த வரிசையில் தோமாவும் துணிவுள்ளம் கொண்டவராகத்தான் திகழ்ந்தார்.
- தோமா என்பது கிரேக்கப் பெயர் என்றும் பார்த்தோம். அதற்கு இரட்டையன் என்ற அர்த்தம் உண்டு என்பதும் நமக்குத் தெரியும். தோமாவிற்கு ஒரு சகோதரியும் உண்டு. தோமாவும் அச்சகோதரியும் தான் இரட்டைப் பிள்ளைகளாக இருந்திருக்கிறார்கள் என தெரியப்படுகிறது. மேலும், அவர் ஒன்பது வயது சிறுவனாக இருக்கும்போதே, அச்சகோதரியை இழந்துவிட்டார் எனவும் சொல்லப்படுகிறது.
- தோமா அவ்வப்போது மனச்சோர்வு அடைவதும் உண்டு. அச்சமயங்களில் எல்லாம் பார்த்தொலொமேயு அவரை தேற்றுவதைக் கடமையாகக் கொண்டிருந்தார். பேதுருவும் அவரை நன்கு புரிந்து வைத்திருந்தார்.
- தோமா மனச்சோர்வோடு காணப்பட்டால், இயேசுவுடன் தொடர்பு கொள்வதே கிடையாது எனவும் சொல்கிறார்கள்.

தேவதாயாரின் அடக்கத்திற்கு தோமா வருகை

இறை இயேசுவின் அன்னையாம் மரியாள்மீது அப்போஸ்தலர் தோமா தனிப்பாசம் வைத்திருந்ததாக ஒரு மரபுச் செய்தியும் உண்டு. கி.பி. 49/ 50-ஆம் ஆண்டு யெருசலேமில் முதல் சங்கம் நடைபெற்றது. அப்போஸ்தலர்கள் பேதுரு - பவுல் ஆகியோருடன் இதர அப்போஸ்தலரும் கலந்து கொண்டதாகக் கூறப்படுகிறது. இச்சங்கம் நடைபெற்ற சில மாதங்கழித்துதான் இறை இயேசுவின் தாயார் மரணமடைந்ததாகக் கூறப்படுகிறது. அந்நேரத்தில், அனைத்து அப்போஸ்தலர்களும் அங்கு கூடியிருந்திருக்கிறார்கள். ஆனால், தூரதேசம் போன தோமா மட்டும் அங்கு இல்லை. எப்படியோ கேள்விப்பட்டு, தேவ அன்னையின் அடக்கத்தைக் காண வந்திருக்கிறார். அதற்குள் அடக்கச்சடங்கு முடிந்து விட்டிருக்கிறது. தேவ தாயார் மேல் அதிக பிரியம்கொண்ட தோமா அவரது உடலையாவது காண வேண்டும் என ஆவல் கொண்டார் சற்று

பிடிவாதமாகத்தான். அதனால் அக்கல்லறைப் பெட்டியை திறந்துபார்க்க எண்ணி திறந்திருக்கிறார்கள். அப்போதுதான் தேவ அன்னை உடல் காணாமல் போனதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஜென்மப் பாவமில்லாமல் உற்பவித்த தேவ அன்னையின் உடல் ஆண்டவரால் எடுத்துக் கொள்ளப்பட்டது என எல்லோரும் அறியலானார்கள். பிறகு, தோமாவும் இதர சீடரும் விசுவாசம் கொண்டார்கள்.

மேற்சொன்னவை ஒரு பாரம்பரிய செய்திதான். அப்படியானால், தோமா அனேகமாக கி.பி. 50-ஆம் ஆண்டு சொகோட்டிரா வந்தபின், அங்கிருந்து அலெக்சாந்திரியா சென்று பிறகு பாலஸ்தீனாவை அடைந்திருக்கலாம். சில மாதங்கள் கழித்து மீண்டும் வந்த வழியே வந்து சொகோட்டிரா வந்து பிறகு மலபாருக்கு வந்திருக்கலாம்.

தோமாவின் திருவுடல் அடக்கத்தின்போது

சென்னையில் பணியாற்றும்போது தோமா கோவில் அர்ச்சகர்களால் கி.பி. 72-ஆம் ஆண்டு ஈட்டியால் குத்திக் கொல்லப்பட்டார் என அறிவோம். அதன்பிறகு, அடக்கமும் செய்யப்பட்டார். அவ்வாறு தோமாவின் திருவுடல் புதைக்கப்படும்போது ஒரு சுவையான நிகழ்ச்சி நடைபெற்றது. மிகுந்த வணக்கத்தோடும் பக்தி உணர்வோடும் புனிதரின் உடல் புதைக்கப்பட்டது. ஆனால் அவரது வலக்கரமோ கல்லறைக்குள் செல்ல மறுத்துவிட்டது. அதைக் கல்லறைக்குள் தள்ள மேற்கொண்ட முயற்சிகள் பலனற்றுப் போனது. ஆக, தோமாவின் திருக்கரம் புதைக்கப்படாமலேயே கல்லறைக்கு வெளியே இருந்தது. மக்கள் அவர் கையை பட்டுத்துணியால் மூடினார்கள். பக்தர்களும் அவர் கையை முத்தமிடுவதை வழக்கமாகக் கொண்டார்கள். இறை இயேசுவின் புனித விழாவினை அந்தக் கை தொடும் பேறு பெற்றதால் அது புதைபட மறுத்ததாக மான்செரெட் என்பவர் கூறுகிறார்.

தோமாவின் நூற்றாண்டு விழா

1972-ஆம் ஆண்டு சென்னையில் புனித தோமாவின் 19-ஆம் நூற்றாண்டு நினைவு விழா நடைபெற்றது. அவ்விழாவில் கலந்துகொள்ள திருத்தந்தை ஆறாம் பவுல் என்பவர், மேதகு கர்தினால் கான்வாய் அவர்களை தமது தூதராக அனுப்பி வைத்தார்.

விழாவின் இறுதி நாளன்று தமது முடிவுரையில் திருத்தந்தையின் பிரதிநிதி என்ற முறையில் கர்தினால் அவர்கள் புனித தோமாவை இந்தியாவின் பாதுகாவலராக அறிக்கை செய்தார். தோமாவின் நினைவாக தபால்தலைகளும் வெளியிடப்பட்டன.

தோமாவின் திருவிழா

சிரியன் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள், அதாவது எடெசாவிலுள்ள கிறிஸ்தவர்கள் இவரது விழாவை ஜூலை மாதம் 3-ந் தேதி அன்று கொண்டாடினார்கள். எடெசாவிலுள்ள கிறிஸ்தவர்கள் தோமாவின் திருப்பண்டங்கள் அடங்கிய கோவிலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருந்தார்கள் என்பது அங்கு இயற்றப்பட்ட பாடல்கள் மூலம் அறியலாம்.

ரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் புனித தோமா மறைசாட்சி ஆன நாளை டிசம்பர் 21-ஆம் தேதி அன்றும், திருப்பண்டங்கள் எடெசாவிற்குக் கொண்டு சென்ற நாளை ஜூலை 3-ஆம் தேதி அன்றும் கொண்டாடினார்கள். இரண்டாம் வத்திக்கான் சங்கம் நடைபெற்ற பிறகு சில சீர்திருத்தங்கள் புனிதர்கள் விழா கொண்டாடுவதில் கொண்டு வந்தார்கள். அதன்படி **ஜூலை மாதம் 3-ந் தேதி புனித தோமா விழா**வாக ரோமன் கத்தோலிக்கு சபையானது கொண்டாடுகிறது. இந்தியாவிலுள்ள கத்தோலிக்கு திருச்சபையானது புனித தோமாவின் தினத்தை **பெருவிழா (Solemnity)** வரிசையில் வைத்து சிறப்பிக்கிறது.

கேரளா கிறிஸ்தவர்கள் தோமாவை மூன்று நாட்கள் நினைவு கூறுகிறார்கள்.

i. புனித தோமாவின் விழாவான ஜூலைமாதம் 3-ந் தேதி

ii. புனித தோமா கி.பி. 52-ஆம் ஆண்டு கிரங்கனூர் - முசிறிசிஸ் வந்து இறங்கிய நாள் - நவம்பர் 23-ந் தேதி என்பது அங்குள்ள பாரம்பரியச் செய்தியாகும். இந்நாளிலும் தோமாவை நினைவு கூறுகிறார்கள்.

iii. இயேசுவின் உயிர்ப்பு ஞாயிறு பெருவிழா கொண்டாடப்பட்ட மறு ஞாயிறும் புனித தோமாவை மக்கள் நினைவுகூறுகிறார்கள். அன்றுதான் தனது சந்தேகத்தை நீக்கி, இறை இயேசுவிடம் என் ஆண்டவரே, என் கடவுளே, என தோமா அறிக்கையிட்டார் என்பதை நாம் நினைவில் வைத்திருப்போம்தானே.

கிரேக்க ஆர்த்தடக்ஸ் சபையில் உள்ளவர்கள் புனித தோமாவின் விழாவை அக்டோபர் 6-ந் தேதி கொண்டாடி மகிழ்கிறார்கள்.

சின்னங்கள்

தோமாவின் சின்னங்களாக புத்தகம் மற்றும் ஈட்டி ஆகியவை கருதப்படுகின்றன. புத்தகம் நற்செய்தி போதித்தார் என்பதையும், ஈட்டி அவர் இயேசுவிற்காக மறைசாட்சியானதையும் நமக்கு நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறது.

பாதுகாவலர்

அப்போஸ்தலர் புனித தோமா இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் பாதுகாவலராக கருதப்படுகிறார். கீழ்க்காணும் தொழில்களுக்கும், நோயாளிகளுக்கும் பாதுகாவலராக தோமாவை திருச்சபை குறித்திருக்கிறது.

அவை - கண் பார்வையற்றோர், கட்டிடம் கட்டுவோர், கல் உடைப்போர், சந்தேகங்களுக்கு எதிராக, இறையியல் வல்லுநர்கள். தோமாவிற்கு "இந்தியாவின் அப்போஸ்தலர்" என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

தோமா பெயரால் மறைவு நூல்கள்

அக்காலத்தில், கிறிஸ்தவர்களிடம் மிகப் பிரபலமாய் விளங்கிய அப்போஸ்தலர்கள் பெயரில் ஏகப்பட்ட நூல்கள் இயற்றப்பட்டன. அவை அப்போஸ்தலர்களின் பணிகளையும், வெளிப்படுத்துதலையும், நற்செய்தியையும் குறிப்பிடுவதாக அமைந்திருந்தன. பேதுரு, பவுல், அந்திரேயா, யோவான், தோமா, பார்த்தொலொமேயு போன்ற அப்போஸ்தலர்கள் பெயரில் நிறைய மறைவுநூல்கள் (Aprocyphal Books) உள்ளன. இதைப்பற்றி அறிய - Aprocyphal New Testament - என்ற புத்தகத்தை நீங்கள் படிக்கலாம்.

புனித தோமா பெயரில் மூன்று நூல்கள் உள்ளன. புனித தோமாவின் பணி, தோமாவின் திருவெளிப்பாடு மற்றும் தோமாவின் நற்செய்தி ஆகியவையே அம்மூன்று நூல்கள்.

i. புனித தோமாவின் பணி நூல், தோமா இந்தியா வந்தது பற்றியும், இந்தியாவில் அவர் செய்த பணிபற்றியும் கொண்டொபோரஸ் அரண்மனைக்கு வந்தது பற்றியும், சென்னையில் அவர் மறைசாட்சியானது பற்றியும் விவரங்கள் தருகிறது. இதில், சில புதுமை நிகழ்ச்சிகளும் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் நாகப்பாம்பு பற்றிய புதுமை - நாகம்தன் முந்தைய பாவங்களைக் கூறுவதாக (ஆதாம் - ஏவாளை ஏமாற்றியது உட்பட)வும், காட்டுக் கழுதைகள் - அவை

பேசுவதாகவும், மாஸ்டாய் மன்னனின் மனைவி, மகன் லாசர் பற்றிய புதுமைகள் பற்றியும் இந்நூல் சில விவரங்கள் தருகிறது.

ii. புனித தோமா திருவெளிப்பாடு நூலில், ஏழு அருங்குறிகள் பற்றிய விவரங்கள் இருக்கிறது. அனேகமாக, புனித ஜெரோமின் இறுதிநாளின் பதினைந்து அருங்குறிகள் போன்றவைக்கு இது தூண்டுகோலாக இருந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இதில், இறை இயேசு தன்னை தந்தை கடவுளின் மகன் என அறிமுகப்படுத்திக் கொண்டு, சில இறைவாக்குகள் கூறுவதாக எழுதப்பட்டிருக்கிறது.

iii. புனித தோமாவின் நற்செய்தி நூல், ஆதிகாலக் கிறிஸ்தவர்களால் அதிகம் பயன்படுத்தப்பட்டு வந்தது. இதில் தோமா இஸ்ராயேலன் என்றும், புனித அப்போஸ்தலர் என்றும் அழைக்கப்படுகிறார். இந்நூலில் குழந்தை இயேசுவின் புதுமை ஒன்று காணப்படுகிறது. குழந்தை இயேசு மண் பொம்மைகளை குருவிகள் போல் செய்து வடிவமைத்ததாகவும், அவர் கைத்தட்டியவுடன், அம்மண் பொம்மைகள் நிஜக் குருவிகளாகவே மாறி பறந்து சென்றதாகவும், இதைப்பார்த்து யோசேப்பும் வேறொரு யூதரும் வியந்ததாகவும் கூறுகிறது. கதைகள், பூர்வீக (Orthodox) கிறிஸ்தவர்களால் புனையப்பட்டிருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

மேற்கூறிய நூல்களில் கடைசி இரண்டும், தோமா பெயரைத்தான் தாங்கி இருக்கிறது.

10

சிந்தனைக்கு . . .

- தோமா - குறிப்புகள்

- சீடராக இருக்கையில் தோமா

- நற்செய்தி போதகராக தோமா

தோமா - குறிப்புகள்

ஆக, யார் இந்த தோமா?

நம்மில் பலரிடம் இக்கேள்வியைக் கேட்டோமென்றால், சில குறிப்புகள் மட்டும் தந்துவிட்டு பதிலளிப்பார்கள் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

தோமா பன்னிரு சீடரில் ஒருவர் - அவர் இயேசுவின் உயிர்ப்பை சந்தேகித்தார். அதனால் சந்தேகத் தோமா (Doubting Thoms) என்ற பெயரும் உண்டு - அவர் கிழக்குப் பகுதி நாடுகளில் நற்செய்தி போதித்து, இறுதியாக இந்தியா வந்தார் - மைலாப்பூரில் ஈட்டியால் குத்தப்பட்டு மரணமடைந்தார் - அவர் நினைவாக சென்னையில் மூன்று இடங்கள் இருக்கின்றன, அவருடைய திருநாள் ஜூலை 3.

அநேகமாக, மேற்கூறிய குறிப்புகளை தோமாவைப் பற்றி தெரிந்தவர்கள் விட்டு வைத்திருக்க மாட்டார்கள்தான்.

ஆனால், இவ்வளவு தான் தோமாவா?

இப்பகுதியில், சீடராக இருக்கையில் தோமா நற்செய்தி போதகராக தோமா என்ற இருவேறு கோணங்களில் சிந்திக்கலாம்.

சீடராக இருக்கையில் தோமா

ஏற்கனவே, பார்த்ததுபோல் தோமா எனும் சொல்லுக்கு கிரேக்க மொழியில் இரட்டையன் என்று பொருள். ஒத்தமை நற்செய்தியாளர்கள் மாற்கு மற்றும் லூக்காஸ் ஆகியோர் தோமாவை எட்டாவது இடத்திலும், மத்தேயுவோ தோமாவை ஏழாவது இடத்திலும் குறித்திருக்கிறார்கள்.

மற்ற அப்போஸ்தலரோடு தோமாவை ஒப்பிட்டுப் பார்த்தோமானால், பல வேறுபாடுகளை நாம் காணமுடியும். பேதுரு அதிகாரத்தை பெற்றார். யோவான் அன்பைப் பெற்றார். அந்திரேயாவும் யாக்கோபும் இவர்கள் இருவரின் நிழலில் இருந்தார்கள். பிலிப்புவிற்கு நல்ல நண்பராக பார்த்தொலொமேயு இருந்தார். பார்த்தொலொமேயுவும் பிலிப்புவிடம் நட்பை பகிர்ந்து கொண்டார். மத்தேயு பெரிய அந்தஸ்துடன் வரிவசூலிப்பவராக இருந்துவிட்டு இயேசுவின் சீடரானார். சின்ன யாகப்பர், யூதா ததேயு (மற்றும் சீமோன்) இயேசுவின் உறவினர்களாக, அதாவது சகோதரர்களாக இருந்திருக்கிறார்கள். யூதாஸ் இஸ்காரியோத்து அக்குழுவில் பணத்தை வைத்திருக்கும் அளவு பெரிய நபராக இருந்தார்.

ஆனால், தோமா? என்ன பின்னணியில், அவள் சீடராக மாறினார் என்பது இன்றுவரை நமக்குத் தெரிந்திருக்கவில்லை. அப்போஸ்தலரில் ஏழு பேர் மட்டுமே அவர்கள் அழைக்கப்படுவதற்கு முன்பே நற்செய்தி

நூல்களில் குறிக்கப்பட்டிருக்கிறார்கள். இதர ஐந்து பேர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்? தெரியவில்லை. தோமா அழைக்கப்பட்ட விதமும் நமக்குத் தெரியவில்லை.

ஆனால், தோமாவிடம் காணப்பட்ட துணிவு, நம்பிக்கை வியப்பூட்டும் விதமாக இருப்பதை நாம் ஒப்புக்கொண்டே ஆக வேண்டும். நாம் ஏற்கனவே பார்த்ததுபோல், தோமா இதர சீடரிடம், "நாமும் போவோம், அவரோடு இறப்போம்," என்று சொல்கையில் அவரின் அசாத்திய துணிவும், இயேசுவின் மேல் வைத்த பற்றுறுதி வெளிப்படுகிறதல்லவா? ஒருமுறை இயேசு தமது பாடுகளை முன்னறிவிக்கையில், தலைமைச் சீடரான பேதுரு, "ஆண்டவரே, இது உமக்கு வேண்டாம்," எனத் தடுத்ததாகப் பார்க்கிறோம். இயேசுவின் மேல் வைத்த அன்பால் அவ்வாறு கூறினாலும், பேதுருவிடம் இயேசு, தமது மீதும் கொஞ்சம் பயம் இருந்தது என்பதை நாம் கண்டுபிடித்து விடலாம். ஆனால் தோமா? இவரிடம் அசாத்திய நம்பிக்கை மற்றும் துணிவு இருந்ததை நாம் மறுக்க முடியுமா?

லெயோனார்டாவின்சி எனும் புகழ்பெற்ற ஓவியர் வரைந்த "இராவுணவு" படத்தைப் பார்த்தோமானால், இயேசுவின் வலதுபுறம் யோவானும் இடதுபுறம் தோமாவும் இருப்பதை நாம் காணலாம். ஒருவேளை, தோமா இயேசுவின் மேல் வைத்த அதிக நம்பிக்கையினால்தான் அவ்வாறு வரைந்திருப்பாரா அவ்வோவியர்? தெரியவில்லை. அதே இயேசு, "நானே வழியும், உயிரும், உண்மையும்," என்னும் மறையுண்மையை பதிலாகத் தருவதை நாம் மறக்க முடியுமா? அதனால் கிறிஸ்தவ சமூகம், தோமாவையும் நன்றியுடன் நினைக்க வேண்டும். தோமாவின் கள்ளங்கபடற்ற, ஒளிவுமறைவற்ற, துணிவுமிக்க கேள்வியால்தான் இயேசுவின் அருமையான பதில் நமக்குக் கிடைத்தது.

அடுத்து, நாம் பார்க்க இருப்பது தோமாவின் சந்தேகத்தை இதைப் பற்றிய நிகழ்ச்சி ஏற்கனவே நாம் படித்தது தானே. இந்நிகழ்வைப் பற்றிய சிற்சில சிந்தனைகளை மட்டும் பார்க்கலாம்.

இரண்டாயிரம் வருடங்களாக, உலகம் 'தோமா' என்று சொன்னால் போதும், அடுத்து அவர்கள் உச்சரிக்கும் சொல் 'சந்தேகம்'. ஆக, சந்தேகத் தோமா, ஐயப்பட்டுத் தோமையார் என்றுதான் இவரை உலகம் அழைக்கிறது. சரி மற்ற அப்போஸ்தலரை எடுத்துக் கொள்வோம்.

முதலில் யூதாஸ் இஸ்காரியோத்து பெயரைச் சொன்னால் நமக்கு நினைவிற்கு வருவது, காட்டிக்கொடுத்தல், (betrayal) என்ற சொல்தான். அடுத்து, பேதுரு. பேதுருவைப் பற்றி சொல்லும்போது, மும்முறை மறுதலித்தல் நிகழ்ச்சி நினைவிற்கு வரும். ஆனால் பேதுருவை மறுதலித்தார் என்ற சொல்லை யாரும் நிறுத்தி விடுவதில்லை. அதையும் தாண்டி, அவரைப் பற்றி வியக்கத்தக்க செய்திகள் இருக்கின்றன. அதைப்

போலத்தான் தோமாவின் சந்தேகமும். அவரின் சந்தேகத்தைத் தாண்டி பல வியக்கத்தக்க செய்திகள் இருப்பதை நாம் மறந்துவிடுதல் கூடாது.

தோமாவின் ஐயம் இயேசுவின் தரிசனத்தால் ஆசீர்வாதமாகவே மாறிப்போய் விட்டது. இயேசு உயிர்த்த ஞாயிறன்று தோமா அப்போஸ்தலர் குழுவில் ஏன் காணப்படவில்லை என்பது தெரியவில்லை. ஏன் தோமா, இதர சீடரை விட்டு மேலறையிலிருந்து வெளியே சென்றார் என தெரியவில்லை. இதர சீடர் இயேசுவை, அதுவும் உயிர்த்த இயேசுவை நேரில் பார்த்தபின் மிக மகிழ்ச்சியுடன், "ஆண்டவரைப் பார்த்தோம்" என தோமாவிடம் கூறினார்கள். அதற்கு தோமா சொன்ன பதில்தான் நமக்குத் தெரியுமே. அதுமட்டுமன்றி, உயிர்த்த இயேசு இதர அப்போஸ்தலர் முன் தோன்றினார். ஆனால் தான் அதைப் பார்ப்பதற்கு வாய்ப்பே தரவில்லை என்ற எண்ணமும் தோமாவிற்கு ஏற்பட்டிருக்கலாம். பேதுருவோ, அந்திரேயாவோ, யோவானோ, எம்மாவுஸ் சென்ற சீடர் இருவரோ தோமாவிடம் எவ்வளவு எடுத்துச் சொல்லியிருப்பார்கள். ஆனால், தோமா நம்ப மறுத்தே விட்டார். தோமா மனதிற்குள் இதர அப்போஸ்தலர் அனுபவித்த இறை மகிழ்ச்சியை தான் இழந்துவிட்டோம் என்று எண்ணியதாலும், தோமா மீது இயேசு அன்புகொண்டு மீண்டும் தோன்றியிருக்கலாம். அடுத்த ஞாயிறு, இயேசு மீண்டும் அப்போஸ்தலர் குழுமுன் (தோமாவும் இருக்கையில்) தோன்றி, தோமாவின் ஐயத்தைப் போக்கியதாகவும் நாம் அறிகிறோம். எவ்வாறு, மூன்றுமுறை மறுதலித்த பேதுருவிற்கு இயேசு தோன்றி, அவரது குறையை மன்னித்தாரோ, இயேசுவின் உயிர்ப்பை சந்தேகித்த தோமா முன்பும் இயேசு தோன்றி, தனது காயங்களை தொட்டுப்பார்க்க அனுமதியளிக்கிறார். அவரது ஐயத்தைப் போக்கியதோடு மட்டுமன்றி தோமாவின் குறையையும் இயேசு மன்னித்தே விடுகிறார். இயேசு தனது காயங்களைத் தொட தோமாவிடம் வேண்டும்போது, மேலறையே அமைதியாகிறது. தோமாவும் இயேசுவும் மட்டுமே அவ்வறையில் இருப்பதுபோல் இருக்கிறது. இறை உண்மையும், மனித ஐயமும் நேருக்கு நேர் சந்திக்கின்றன. முடிவில் இறை உண்மை மனித ஐயத்தை போக்கி விடுகின்றது. இதனால் தான் தோமாவும், என் ஆண்டவரே, என் கடவுளே என்று அறிக்கையிடவும் முடிந்தது. இதற்கு மேல், தோமாவால் ஒன்றும் சொல்ல முடியாது. சொல்லவும் இல்லை. எந்த அப்போஸ்தலரும் இயேசுவை கடவுள் என அழைத்ததாகப் படிக்கவில்லை. ஆனால், தோமா அவ்வாறு அழைத்ததாக நாம் காண்கிறோம். ஆக, சந்தேகத் தோமாவால், இயேசுவின் உயிர்ப்பு மகிழ்ச்சி பன்மடங்கு பெருகுகிறது. அதுமட்டுமா, தோமாவின் ஐயம், கிறிஸ்தவ சமூகத்தின் ஐயங்களையும் போக்குவதாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. தோமா தனது சந்தேகத்தால், கிறிஸ்தவர்கள் இறை உண்மையின் மகிழ்ச்சிக்குக் காரண கர்த்தாவாகவும் அமைந்துவிட்டார். இந்நிகழ்வு சம்பந்தமாக மற்றொரு பாரம்பரிய செய்தியும்

சொல்லப்படுகிறது. தோமா இயேசுவின் திருவிலாக் காயத்தைத் தொட்டதால் அவரது கரம் செந்நிறக் கறையைக் கொண்டிருந்தது எனக் கூறப்படுகிறது. அக்கறை தோமாவின் மரண மட்டும் காணப்பட்டிருக்கிறது எனச் சொல்லப்படுகிறது. ஆக, காயத்தை நினைவில் வைத்திருக்க வேண்டி நினைவில் வைத்திருக்க வேண்டிய சூழலும் ஏற்பட்டது. மேலும், தோமா காயத்தை இயேசுவின் விலாவில் மட்டுமல்லாமல் தனது கையிலும் பார்த்துக்கொண்டே இருப்பதற்கு வாய்ப்பாக அமைந்தது.

ஒருவேளை இந்நிகழ்ச்சிதான், மற்ற அப்போஸ்தலரை விட, வெகு தொலைவு சென்று இறைபணி செய்து மரிக்கும் துணிவை தோமாவிற்கு தந்திருக்க வேண்டும்.

பெந்தகோஸ்தே திருநாளன்று தூய ஆவியானவர் இயேசுவின் தாயார் மரியாள் உடனிருந்த அப்போஸ்தலர் மீதும் இறங்கி வந்தார் என நாம் அறிவோம். அதையொட்டி, ஒரு பாரம்பரிய செய்தியும் சொல்லப்படு கின்றது. தூய ஆவியானவர் இறங்கியவுடன் ஒவ்வொரு அப்போஸ்தலரும் விசுவாசப் பிரமாண உண்மைகளை அறிக்கையிட்டார்கள்.

அதன்படி, அப்போஸ்தலர் தோமா தான், "**இயேசு பாதாளத்தில் இறங்கி, மூன்றாம் நாள் மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார்**" என அறிக்கையிட்டதாகச் சொல்லப்படுகிறது. இயேசுவின் உயிர்ப்பைக் கண்டு மிக பெரிய உயர்ந்த வார்த்தைகளில் அறிக்கையிட்டதால், இப் பேறு தோமாவுக்குக் கிடைத்ததோ.

நற்செய்தி போதகராக தோமா

இயேசுவின் விண்ணேற்பு நிகழ்ச்சிக்குப் பின், பல அப்போஸ்தலர்கள் தமது ரம்மியமான வாழ்வாலும், இறப்பாலும் ஆதி கிறிஸ்தவர்களை வெகுவாகக் கவர்ந்தார்கள். அக்காலத்தில் பெரிய மன்னர்கள் பெயரால் சில நூல்கள் எழுதப்பட்டன. அதைப்போல் அப்போஸ்தலர்கள் பெயராலும் பல நூல்கள் எழுதப்பட்டது. அதில், பேதுருவின் பணி, தோமாவின் பணி, பவுலின் பணி, அந்திரேயாவின் பணி, யோவானின் பணி குறிப்பிடத்தக்கவை. இந்நூல்களில் தோமாவின் பணி பற்றி அதிகம் செய்திகளை ரோமை அரசிற்கு கிழக்கே தான் நடைபெற்றது எனச் சொல்லப்படுகிறது. தோமா சென்ற நாடுகள் அனைத்துமே கிழக்குப் பகுதியைச் சார்ந்தவைதான்.

அக்காலத்தைய உலகம், மேற்கத்தைய நாடுகள் என்றும், கிழக்கத்தைய நாடுகள் என்றும் இரு பிரிவாக காணப்பட்டது. அதில், கிழக்கத்தைய நாடுகளில் தான் தோமா நற்செய்திப் பணி ஆற்றினார் என்பதை நாம் பார்த்திருக்கிறோம்.

தோமா இந்தியா வருவதற்கு முன்பாக ஒஸ்ரோயென் (Osroene),

பார்த்தியா, மேதியா, பெர்சியா போன்ற நாடுகளுக்கும் சென்று இறைபணி ஆற்றினார். இன்று இப்பகுதிகள் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது. ஓஸ்ரோயென் பகுதி, இன்று இஸ்ரேல் நாட்டின் வடபகுதியிலுள்ள கிழக்கு துருக்கி நாட்டைக் குறிக்கிறது. இதர நாடுகளான பார்த்தியா, மேதியா, பெர்சியா போன்றவை இரான், ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற பகுதிகளை இன்று குறிக்கிறது.

தோமா, வட இந்தியா சொகோட்டிரா மலபார் கொரமண்டல் பகுதிக்குச் சென்றது. இறுதியாக, இரத்தசாட்சியாக மரித்தது எல்லாம் தெரிந்ததுதானே.

தோமாவைப் பற்றி படிக்கும்போது நமக்கு வேறு ஒரு பெரிய அப்போஸ்தலர் நினைவிற்கு வருகிறார். அவர் இயேசுவின் விசேஷ அப்போஸ்தலர் பவுல்தான். தோமாவும் பவுலும் உலகின் வெவ்வேறு நாடுகளில் பணியாற்றியதாய் படிக்கிறோம். மேற்கு எல்லையோரமான ஸ்பெயினில் பவுலும், கிழக்கு எல்லையோர தேசமான இந்தியாவில் தோமாவும் பணியாற்றியிருக்கிறார்கள். இவ்விரு அப்போஸ்தலர்களின் ஆர்வமும், மிக அதிகமான உழைப்புமே இயேசுவின் பால் அதிக ஆன்மாக்களைக் கொண்டு சேர்க்கும் வாஞ்சையை ஏற்படுத்தியிருந்ததை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

தோமா மறையுரை ஆற்றுவதிலும் வல்லவராகத் திகழ்ந்திருக்கிறார். அவர் பேசுவது அமைதியாகவும், ஆணித்தரமாகவும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. எழுதுவதில் அவர் தமது முத்திரையைப் பதித்திருக்கிறார். ஆனால், அவரின் சில கடிதங்கள் தொலைந்துபோய் விட்டது வருந்தத்தக்கதே.

கிழக்கு நாடுகளும் அவரைத் தான் தனது பாதுகாவலராகப் பார்க்கின்றன. மலபார் கிறிஸ்தவர்கள் கூட, தங்களது ஆன்மீகத் தந்தையாக தோமாவைக் குறிப்பிடுவது அவரது மறைபணிக்குக் கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம்தான். தோமா மிகக் கடுமையான தவவாழ்வு மேற்கொண்டார். இந்து சகோதரர்கள் கூட, அவர் புனித மனிதன் என்றே குறிப்பிடுகிறார்கள். அப்போஸ்தலர் தோமா பார்த்தொலொமேயு மற்றும் நீதிமான் யாக்கோபு போன்றே அதிக நேரம் செபத்திலும் தவத்திலும் கழிப்பார். அவர் உணவாக ரொட்டியும் தண்ணீரும் மட்டுமே அருந்தி வாழ்ந்தார். ஒரே சமயத்தில் ஒரு உடை மட்டும்தான் வைத்திருந்தார். இதனால், தோமாவும் ஒரு காலத்தில் ஸ்நாபக யோவானின் சீடராக இருக்கலாம் என நினைக்கத் தோன்றுகிறது.

இயேசுவின் விண்ணேற்பு நிகழ்வுக்குப் பின் தோமா மிகப்பெரிய அப்போஸ்தல அலுவல் புரிந்ததால் தான், கத்தோலிக்க திருச்சபையும் அவர்க்கு முக்கிய அந்தஸ்தை அளித்திருக்கிறது. திருப்பலி பூசையிலுள்ள

நற்கருணை வழிபாடு செபங்கள் மற்றும் புனிதர்கள் பிரார்த்தனையில் பேதுரு, பவுல், அந்திரேயா, யாக்கோபு, யோவானுக்கு அடுத்தபடியாக தோமா பெயர் சேர்க்கப்பட்டிருக்கிறது. இயேசுவின் சகோதரர், ஜெருசலேம் ஆயர் யாக்கோபின் பெயரும், பிலிப்பு, பார்த்தொலொமேயு பெயர்கள் கூட தோமாவிற்கு பிறகே வருவது குறிப்பிடத்தக்கது. நற்செய்தி நூல்களில் ஏழாவது, எட்டாவது இடத்திலிருந்த தோமா, கத்தோலிக்க திருச்சபை ஜெபங்களில் ஐந்தாவது இடத்திற்கு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்திய திருச்சபை பெரு மகிழ்வுடன் இந்தியாவின் அப்போஸ்தலர், பாரத நாட்டின் அப்போஸ்தலர், இந்தியாவின் திருத்தூதர் என்றெல்லாம் அழைத்து பெருமைப்படுகிறது.

இறைவன் இயேசுகிறிஸ்து தமது சீடருள் ஒருவரையே இந்தியாவிற்கு அனுப்பி, இந்திய ஆன்மீகத்திற்கு மற்றொரு பரிமாணத்தைக் கொடுத்ததற்கு பாரதத்தாய் இறைவனை நன்றிப் பெருக்குடனே நினைக்கும்.

இந்தியா பல்வேறுவிதமான ஆன்மீகச் செம்மல்களை சந்தித்துள்ளது. சாதி, மொழி, இன வேறுபாடு பாராமல் அனைவராலும் அவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அந்தந்த சமூக மக்களால் அங்கீகரிக்கவும் பட்டதை நாம் நினைவில் கொள்வோம்.

ஆக, இந்திய திருச்சபையானது இந்திய மண்ணில் முதன் முதலாக கிறிஸ்துவைக் கொண்டு வந்தவர் புனித தோமாதான் என்பதை காலம் உள்ளவரை நினைவில் நிறுத்தி, போற்றியே மகிழும்.

11

தோமாவின் வாழ்வில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள்

இந்த ஆண்டுகளில் இன்ன நிகழ்வுகள் நிகழ்த்தியிருக்கலாம் என கீழ்க்கண்டவாறு கணிக்கப்பட்டுள்ளது. போதுமான சரித்திர சான்றுகள் இல்லையெனினும் ஓரளவு உண்மையென கீழ்க்காணும் நிகழ்ச்சிகளை நாம் நினைக்கலாம்.

கி.பி. 1-3(?) - தோமாவின் பிறப்பு

கி.பி. 29-30 - இறை இயேசுவின் இறப்பும், உயிர்ப்பும் (ஏப்ரல் 7-9)
- தோமாவின் விசுவாச அறிக்கை (ஏப்ரல் 16)
- தூய ஆவியானவர் அப்போஸ்தலர் மேல் இறங்கி வந்தது (மே 28, 29)

கி.பி. 40-42 - அப்போஸ்தலர்கள் பல்வேறு நாடுகளுக்கு பிரிந்து செல்கிறார்கள்

கி.பி. 52 - தோமா இந்தியா வருகை

கி.பி. 72 - தோமா வேதசாட்சி மரணம்

பிறகு

கி.பி. 165 - தோமாவின் திருப்பண்டங்கள் எடெசாவுக்கு கொண்டு செல்லப்படுதல்

கி.பி. 345 - கேரளாவிற்கு கானாவூர் தோமா வருகை

கி.பி. 1142 - சீயோஸ் தீவிற்கு தோமாவின் திருப்பண்டங்கள் எடுத்து செல்லப்படுதல்

கி.பி. 1289 - இத்தாலியிலுள்ள ஓர்தினாவிற்கு தோமாவின் திருப்பண்டங்கள் கொண்டு செல்லப்படுதல்

கி.பி. 1292 - மார்க்கோபோலோ தோமாவின் கல்லறையை பார்வையிடுகிறார்

கி.பி. 1545 - புனித பிரான்சிஸ் சவேரியார் தோமாவின் கல்லறையை தரிசிக்கிறார்

கி.பி. 1606 - மயிலை தனி மறைமாவட்டமாக போப்பாண்டவரால் உயர்த்தப்படுகிறது

கி.பி. 1896 - தற்போதைய சாந்தோம் பேராலயம் அர்ச்சிப்பு

கி.பி. 1986 - போப்பாண்டவர் இரண்டாம் ஜாண் பால் தோமா நினைவிடங்களை தரிசிக்கிறார்.

துணைநின்ற நூல்கள், இணையதளங்கள்

1. Good News - New Testament - Gospels
2. Butler's Lives of saint - Alban Butler - Vol IV - Dec 21
3. The Master's Men - William Barclay
4. St. Thomas the Apostle of India - S.N. Wald S.V.D
5. The Apostles in India - Rev. Fr. Perumalil S.J.
6. The Urantia Book - The Apostles 1959 - urantia Foundation
7. The Apocryphal New Testament - M.R. James Vol I, II
8. www. apostles / thomas.html
9. www.12 apostles of the catholic church.org/thomas.html
10. www. catholic. org / saints



புனித தோமா பயணம் செய்த தேசங்கள்

நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ், நாகர்கோவில். ✆ : 233853

நாஞ்சில் புக் ஸ்டால்

&

ஆப்செட் பிரிண்டர்ஸ்

கிறிஸ்தவ புத்தகங்கள்
திருப்பணி பொருட்கள்
விற்பனை செய்வதிலும்
தரமான வெளியீடுகளிலும்
வளர்ந்து வரும் எமக்கு
தொடர்ந்த முன் பின்
ஆதரவுக்கு நன்றி கூறுகிறோம்.

67/1, கோர்ட் ரோடு, நாகர்கோவில்.

NANJIL BOOK STALL & OFFSET PRINTERS
67/1, Court Road, Nagercoil - 629 001. ✆ : 233853

நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ், நாகர்கோவில்